www.padippakam.com

எம்.என்.புச்

# சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வும் நகரத் திட்டமும்

இன்று நம்முன்/2

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வும் நகரத் திட்டமும்

இந்நூலாசிரியர் எம்.என். புச்., ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. இவர் தனது பதவிக்காலம் முடியும் முன்பே பணியிலிருந்து ஓய்வுபெற்றவர். தற்போது தேசிய மனிதக் குடியிருப்பு மற்றும் சுற்றுப்புறச்சூழல் மையத்தின் தலைவராகப் போபாலில் பணியாற்றுகிறார். இவர் வளம்மிக்க எழுத்தாளர். மனிதநேயம், சுற்றுப்புறத் தூய்மை மற்றும் நிர்வாகத்துறைகளில் ஆர்வம் கொண்டவர்.

இவர் மனிதனும் குடியிருப்பும் (சன்சார், 1991), இந்திய நகர அமைப்புத் திட்டங்கள் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ள என்.ஆர்.வி. பிரபு, சென்னை லயோலா கல்லூரியில் முதுகலைத் தொழில் நிர்வாகத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

**TRACTS FOR THE TIMES**
*தமிழில்: இன்று நம்முன்*

*ஆசிரியர் குழு*
*எஸ். கோபால் ● ரொமிளா தாபர்*

*பதிப்பாசிரியர்*
*நீலாத்ரி பட்டாச்சார்யா*

*மேலும் இப்பிரசுர வரிசையில்*

The Question of Faith
*தமிழில்: நம்பிக்கையின் பரிமாணங்கள்*
ருஸ்தம் பரூசா

Khaki Shorts and Saffron Flags
*தமிழில்: காக்கி உடையும் காவிக் கொடியும்*
தபன்பாசு, பிரதீப் தத்தா, சுமித் சர்க்கார்,
தனிகா சர்க்கார், சம்புத்தா சென்

Kashmir: Towards Insurgency
*தமிழில்: காஷ்மீர்: எழுச்சியை நோக்கி*
பல்ராஜ் புரி

272/95

மேலட்டை: சுஸெட்டா பாட்ஸி

www.padippakam.com

இன்று நம்முன் / 2

# சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வும் நகரத் திட்டமும்

எம் என் புச்

தமிழில்:
என் ஆர் வி பிரபு

ஓரியன்ட் லாங்மன்

படிப்பகம்

www.padippakam.com



ஓரியன்ட் லாங்மன் லிமிடெட்

*பதிவு அலுவலகம்*
*3-6-272 ஹிமாயத் நகர்*
*ஹைதராபாத் 500 029 (ஆ.பி.)*

*மற்ற அலுவலகங்கள்*
*காமனிமார்க், பல்லார்டு எஸ்டேட், பம்பாய் 400 038*
*17 சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா 700 072*
*160 அண்ணா சாலை, சென்னை 600 002*
*1/24 அசப் அலி சாலை, புதுதில்லி 110 002*

*80/1 மஹாத்மா காந்தி சாலை, பெங்களூர் 560 001*
*பிளாட் நெ.205-ஏ, சஹீத் நகர், புவனேஷ்வர் 751 007*
*எஸ்.சி. கோஸ்வாமி சாலை, பான் பஜார், குவஹாத்தி 781 001*
*3-6-272 ஹிமாயத்நகர், ஹைதராபாத் 500 029*
*ஹவுஸ் நெ.28/31, 15 அஷோக் மார்க், லக்னௌ 226 001*
*முதல் தளம், சிட்டி சென்டர், அஷோக் கோவிந்த் மித்ரா சாலை, பாட்னா 800 004*

© தமிழ்ப் பதிப்பு, ஓரியன்ட் லாங்மன் லிமிடெட் 1993
முதற் பதிப்பு 1993

ISBN 0 86311 471 7

*வெளியிட்டோர்*
*ஓரியன்ட் லாங்மன் லிட்*
*160 அண்ணா சாலை, சென்னை 600 002*

*ஒளியச்சுக் கோர்வை*
*விஜயா எண்டர்பிரைசஸ்*
*C9 ஜெமினி பார்சன் காம்ப்ளெக்ஸ்*
*கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சென்னை 600 006.*

*ஆப்செட்டில் அச்சிட்டோர்*
*தன்கேஷ் பிரிண்டர்ஸ் பி.லிட்*
*257 இரண்டாவது தளம் பைகிராப்ட்ஸ் சாலை*
*சென்னை 600 005*

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளடக்கம்


பதிப்பாசிரியரின் முகவுரை vii

1. அறிமுகம் 1

2. அடிப்படை உண்மைகள் 15

3. பராமரிப்புகள் 37

4. திட்ட அணுகுமுறை 52

5. நகரக் குடியிருப்பும் — பராமரிப்பும் 71

6. முடிவுகள் 84


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்பாசிரியரின் முகவுரை

இந்தப் பிரசுர வரிசை தற்காலச் சூழலுக்கேற்ற வகையில் பல் வேறு கருக்களைக் கருத்தாய்வு செய்தும், உள்ளார்ந்த தேடல் களை நடத்தியும், பகுப்பாய்வும் செய்ய முனைந்துள்ளது. இப் பிரசுர வரிசை நமது சிந்தனையினைக் கவ்வும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுகிறது. நம்மையே கேள்வி கேட்கிறது. நமது பண்டைய கோட்பாடுகளை மறுபரிசீலனை செய்கிறது. சமூகம் மற்றும் பொருளாதார ரீதியான கேள்விகளுக்கு ஆய்வு முடிவு களைத் தருகிறது.

இப்பிரசுர வரிசை நமது சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பிரச் சினைகளை வளர்ந்துவரும் விஞ்ஞானத்தின்மூலம் தீர்வுகாண விழைந்துள்ளது. நாம் சமூக வளர்ச்சிகளை ஆராயப் பயன்படுத் தும் தரக்கட்டுப்பாடுகளையும், நாமே சுற்றுப்புறச் சூழலின் நசிவு களை விலக்கமுடியாமல் ஏற்றுக்கொண்டுள்ள நிலையையும், சுற்றுச் சூழல் மாசினை நமது வாழ்வின் அங்கமாக்கியுள்ளதையும் சாடு கிறது. இதற்குச் சமூக ரீதியான மாற்றுவழிகளையும் ஆராய்கிறது. எல்லோரும் ஏற்கும் மாற்றங்களைக் கண்டறிய முனைந்துள்ளது.

இந்தியாவின் நகரமயமாக்கலின் விளைவுகளைக் கருத்தாய்வ துடன் இவ்வரிசை தொடங்குகிறது. அதிவேக மக்கள்தொகை வளர்ச்சி—இதனால் ஏற்படும் இடநெருக்கடி குடியிருப்புப் பிரச்சினை கள், சுகாதார வசதிகள், குடிநீர் வினியோகம் மற்றும் சுற்றுப்புறச்

படிப்பகம்

www.padippakam.com



சீரழிவுகள் இங்கு அலசப்பட்டுள்ளன. நகரத் திட்டங்கள் இப் பிரச்சினைகளை மேலும் சீர்குலையச் செய்கின்றன. இங்குநகரப் பிரச்சினைகள் ஆராயப்பட்டுத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

எம்.என். புச் நமது திட்டங்களின் பரப்பளவு பல நோக்குடைய தாக இருக்கவேண்டும் என வலியுறுத்துகிறார். ஒவ்வொரு நகரக் குடியிருப்பும் அந்த மண்டலத்தின் சுற்றுச்சூழலையும், பொருளாதார பலத்தையுமே அடிப்படையாகக்கொண்டு திட்டமிடப்படவேண்டும் என்கிறார். திட்டச்செயல்பாடுகள் கிராமங்களில் தொடங்கி நகரங் களின் தனித்தனிப் பிரிவுகளுக்குப் பரவுமாறு வடிவமைக்கப்பட வேண்டும். மண்டலத்திட்டங்கள் தங்களது நகரக் குடியிருப்புகள் குறித்த தெளிவான முடிவுகளை வரையறுக்கும்போது, அவற்றின் செயல்பாடு குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயவேண்டும். இதனால் நிலப் பாகுபாட்டு முறைகள் விருத்தியடையும். நிலத்தின் முழுப்பயனையும் பெறமுடியும். இயற்கையும், இதனால் பாதிப் படையாது. மேலும் பொருளாதார வழிமுறைகள் கண்டறியப்பட்டு சுற்றுச்சூழலின் அழிவுநிலை சீர்செய்யப்படும்.

இறுதியாக நகரங்களின் அழகுணர்ச்சியின் முக்கியத்துவம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மிகவும் தூய்மையாக ஒரு நகரம் விளங்கலாம். அதே நகரம் வெறுமையாகவும் காட்சியளிக்கும். ஒவ்வொரு நகரமும் அதற்கே உரியதான உயிர்த்துடிப்புடன் விளங்க வேண்டும். நகரத்திட்டங்கள் சுற்றுச்சூழலின் எழில் தன்மைக்கு பங்கம் விளைவிக்கின்றன. போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய கலாச்சாரக்கூறுகளைப் புறக்கணிக்கின்றன. ஒரு நகரம் தனது தனித்துவ மான கலாச்சாரப் பின்னணிகளைச் சுற்றியே வடிவமைக்கப்பட வேண்டும். இங்கு வாழும் மக்கள் தங்களை இந்நகரத்துடன் பிணைத்துக்கொள்ள இது வழிவகுக்கும். இங்கு ஆசிரியர் வலியுறுத்துவதும் இதைத்தான்.

www.padippakam.com

# 1

# அறிமுகம்

*இனிவரும் ஆண்டுகளில் இந்தச் சிக்கலான காலகட்டங்களில் வளர்ந்து வரும் நாடுகளுக்கு நகரமயமாக்குதல் குறிப்பிடத்தக்க சிறந்ததொரு நிகழ்ச்சியென வரலாற்றுத்துறையினர் முடிவெடுக்கக்கூடும். கடந்த இருபது ஆண்டுகளாக ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நகர் மற்றும் பெரு நகரங்களின் மக்கள்தொகை எண்ணிக்கை இரண்டாகவும், மூன்றாகவும் பெருகிக்கொண்டிருக் கிறது. உலகிலேயே இரண்டாவதாக மக்கள்தொகையைக் கொண்ட இந்தியா இந்தச் சிக்கலான நிகழ்ச்சிக்கு மையமான ஒன்றாகும்.*

*(தேசிய நகரமயமாக்கும் பொறுப்பாண்மைக்குழு, இந்திய அரசு, ஆகஸ்ட், 1988 அறிக்கையின் முன்னுரைப்படி)*

ஆசிய - அமெரிக்கக் கண்டங்களிலுள்ள அநேக நாடுகள் பெரு மளவுக்கு கிராமப்புறப் பின்னணியைக் கொண்டே உருவானது மட்டுமல்லாமல், இன்றும் அந்நாடுகளில் விவசாயத்தையே நம்பி யிருக்கும் கிராம மக்கள்தொகையே, அதிகமாக உள்ளது. பெருமளவுக்கு மக்கள் நிறைந்த பகுதிகளான சீனா, இந்தியா, வங்காளதேசம், இந்தோனேஷியா மற்றும் தாய்லாந்து நாடுகளில் இன்றும் கணிச மான அளவில் மக்கள்தொகை கிராமத்தில்தான் உள்ளனர். இதன் காரணமாக விவசாயம் விளைபொருள் அளவிலும் கட்டாயமான தாக மொத்த தேசிய பங்கேற்பு அளவிலும் (GNP), மொத்த உள் நாட்டு விளைபொருளிலும் (GDP) பங்கேற்கவில்லையாயினும், வேலைவாய்ப்புத் தன்மையைக் கருத்தில்கொண்டு நோக்கும் போது விவசாயமும் அது சார்ந்த கிராமப்புறச் செயல்களும் நட வடிக்கைகளும் தொடர்ந்து மக்கள்தொகைக்குத் தனது பங்கை

www.padippakam.com



ஆற்றி வருகிறது. உதாரணமாக, இந்தியாவின் 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப்படி, தோராயமாக 4.6 சதவீதம் மக்கள்தொகை நகரத்திலும் மீதமுள்ளோர் கிராமத்திலும் வசிக் கின்றனர். வேலைவாய்ப்புக் கணக்குப்படி 68 சதவீதம் முக்கியப் பணியாளர்கள் விவசாயம் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த துறைகளில்தான் அமர்த்தப்பட்டுள்ளனர். எப்படியாயினும் மொத்த தேசிய விளைபொருள் அளவில் விவசாயத்தின் பங்கு 35 சதவீதம் மட்டுமே. மற்றபடி வளர்ச்சிக் கணக்குப்படி, இந்தியா வில் நகர மக்கள்தொகை 1971–1981 ஆண்டுகளில் 46 சதவீதம் அதிகரித்தும், அதேநேரத்தில் கிராம எண்ணிக்கை 19 சதவீதத்திற்குக் குறைவாகவும் உள்ளது. எனவே, இந்தியா போன்ற மக்கள் நிறைந்த நாடுகளில் நகரவளர்ச்சி விகிதம் கிராமங்களைக் காட்டிலும் இரண்டரை மடங்கு அதிகமாகவே இருந்து வருகிறது. ஆகவே கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை–1 காட்டுவதுபோல், இந்தக் குறிப் பிடத்தக்க நிகழ்ச்சியை ஆராய அல்லது கூர்ந்து கவனிக்க வேண்டிய அவசியம் வளர்ந்துவரும் நாடுகளில் மிக முக்கியமாக உள்ளது.

அட்டவணை - 1

நகர மக்கள்தொகை தகவுப் பொருத்தம்

| பரப்பு | மக்கள்தொகை (பத்து இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|
| | 1950 | 1975 | 1990 | 2000* |
| 1. உலகம் | 730(29) | 1590(39) | 2398(46) | 3132(51) |
| 2. வளர்ச்சியடைந்த பிரதேசங்கள் | 444(53) | 752(69) | 913(76) | 1011(79) |
| 3. வளர்ந்துவரும் பிரதேசங்கள் | 287(17) | 838(28) | 1485(37) | 2121(44) |
| 4. கிழக்கு ஆசியா | 113(17) | 332(30) | 510(38) | 668(45) |
| 5. தெற்கு ஆசியா | 116(16) | 286(23) | 520(30) | 770(37) |

* நெறிப்படுத்தப்பட்ட மக்கள்தொகையைக் குறிக்கிறது.
() அடைப்புக் குறியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் நகர சதவீதத்தைக் காட்டுகிறது.
ஆதாரம்:- மனிதக் குடியிருப்பு குறித்த உலக அறிக்கை, 1988,
ஐ.நா. மக்கள் குடியிருப்புக் குழு.

அநேக ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நகரமாக்கும் உந்துதலை நோக்குவோமேயானால், இனி வரும் ஆண்டு களில் நகரங்கள் அதிகமாவதைக் காணலாம். அதே நேரத்தில் உலக நகரங் களிடையே, மக்கள்தொகை அதிகரிப்பும்–அடர்த்தியும் பெருமளவுக்கு மாநகரங்களில் காணப்படுகிறது. இந்தியாவில் 1991-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப்படி முதல் தர மாநகரங்களில்,

www.padippakam.com



அதாவது 1,000,000-க்கு மேற்பட்ட மக்கள்தொகையைக்கொண்ட மாநகரங்கள், அவற்றின் தகவுப்பொருத்தம் மொத்த மக்கள்தொகைக் கணக்குப்படி 14.5 சதவீதமாக இருந்தபோதும், 65 சதவீதம் நாட்டுப் பெருநகரக் கணக்கின்கீழ் வருகின்றது (அட்டவணை – 2); எனினும் 65 சதவீதம் நகர மக்கள்தொகை, சிறிய அளவிலான குடியிருப்புக் களையும் மற்றும் பெரிய குடியிருப்புக்களையும் ஒப்பிடும்போது பெருங்குடியிருப்புக்களில்தான் வசிக்கின்றனர் என்பது பெரு மாநகரங்களின் வளர்ச்சியினைப் பார்க்கையில் சரிவரத் தெரிகின்றது. மேலும் அட்டவணை – 2 நகர மக்கள்தொகை 1901 முதல் 1991 வரையிலான அளவு மற்றும் வகுப்பு சதவீதப் பங்கீட்டைக் காட்டு கிறது (முதலாவது வகுப்பில் தலைநகரங்கள் உள்பட).

அட்டவணை - 2

நகர எல்லை மற்றும் பெருநகர மக்கள்தொகை அகரவரிசை அட்டவணைத் தொகுப்பு

| மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வருடம் | மொத்தப் பிரிவுகள் | I | II | III | IV | V | VI |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1901 | 100 | 26.00 | 11.29 | 15.64 | 20.83 | 20.14 | 6.10 |
| 1911 | 100 | 27.48 | 10.51 | 16.40 | 19.73 | 19.31 | 6.57 |
| 1921 | 100 | 29.70 | 10.39 | 15.92 | 18.29 | 18.67 | 7.03 |
| 1931 | 100 | 31.20 | 11.65 | 16.80 | 18.00 | 17.14 | 5.21 |
| 1941 | 100 | 38.23 | 11.42 | 16.35 | 15.78 | 15.08 | 3.14 |
| 1951 | 100 | 44.63 | 9.96 | 15.72 | 13.63 | 12.97 | 3.09 |
| 1961 | 100 | 51.42 | 11.23 | 16.94 | 12.77 | 6.87 | 0.77 |
| 1971 | 100 | 57.24 | 10.92 | 16.01 | 10.94 | 5.45 | 0.44 |
| 1981 | 100 | 60.42 | 11.63 | 14.33 | 9.54 | 3.58 | 0.50 |
| 1991 | 100 | 65.20 | 10.95 | 13.19 | 7.77 | 2.60 | 0.29 |

ஆதாரம்: இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 1991.

பத்து இலட்சம் மக்களைக் கொண்ட தலைநகரங்கள் நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 8.4 சதவீதமும், மொத்த நகர மக்கள் தொகையில் 33 சதவீதமுமாகும். தலைமைப் பதிவாளரின் கணிப்புப் படி 2001-ஆம் ஆண்டுக்குள் தலைநகரங்கள் மட்டும் நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 12 சதவீதமாக இருக்கும். இதுமட்டு மின்றி இப்போதுள்ள தலைநகரங்கள் பூதாகரமான மக்கள்தொகையுடன் வளர்ச்சியடையும் என்பதை எடுத்துக்கூறாவிடினும், தலைநகரங்களின் எல்லையைச் சூழ்ந்துள்ள மற்ற நகரங்கள் மக்கள் தொகை வளர்ச் சியில் பத்து இலட்சம் இலக்கைக் கடந்து தலைநகர் என்ற அந்தஸ்து பெற்றுவிடுமென்பதே நமது மக்கள்தொகையின் வரையறுப்பு.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவின் மொத்த மக்கள்தொகை, 1991-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, 8440 இலட்சங்கள் (தெளிவாக 843,930,8610). பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வளர்ச்சியடைந்து வரும் மக்கள்தொகை 1981-க்கும் 1991-க்குமிடையே 23.50 சதவீதமாகும். இதுவே 1971–1981 இறுதி மக்கள்தொகையான 24.66 சதவீதத்தைக் காட்டிலும் சிறிதளவே குறைவாக இருக்கிறது. இது மிகச் சரியானஎண்ணிக்கையில் 1610 இலட்சங்கள். இந்த வேகமான மக்கள்தொகை அதிகரிப்பு நகர்க் குடியிருப்பில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை உருவாக்குகிறது. அட்டவணை – 3 இதனை விளக்குகிறது.

1941-ஆம் ஆண்டுவரை நகர மக்கள்தொகை வளர்ச்சி மிகவும் மெத்தனமாகவும், மொத்த மக்கள்தொகையை ஒப்பிட்டுப்பார்க்கும் போது நகரக்குடியிருப்பில் குறைந்த பங்காக 1941-ஆம் ஆண்டில் 13.86 சதவீதமும், 1901-ஆம் ஆண்டிற்கான 10.46 சதவீதமாகவும் பிரதிபலிக்கிறது. எனினும் 1931–41 மற்றும் 1941–51 ஆண்டுகளில் நகர மக்கள்தொகை வளர்ச்சியின் அதிகரிப்பு, இரண்டாம் உலகப்போரின்போது உருவான சில நகரங்களின் காரணமாகவும், பிரிவினைகளால் மக்களின் பெருநகர மற்றும் சிறுநகரக் குடிபெயர்ப்பின் காரணமாகவும் ஏற்பட்டது. ஆனால் நகர வளர்ச்சி 1951–61-ல் குறைந்தும் பிறகு 1961 முதல் வளர்ச்சி விகிதம் கிராம வளர்ச்சி விகிதத்தைக்காட்டிலும் இரட்டிப்புக்கு மேலாகவும் உயர்ந்தது.

மேலும் எந்த வகையில் மக்கள்தொகைக் குவிப்பு உண்டானது என்பதை அட்டவணை - 4 காட்டுகிறது.

1901-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒரு நகரம் மட்டுமே பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகையைக் கொண்டிருந்தது. அதுவே 1991-ஆம் ஆண்டுக்குள் இந்திய எண்ணிக்கை 23-ஆக வளர்ந்துள்ளது. 1941-ஆம் ஆண்டுவரை இரண்டு நகரங்கள் மட்டுமே பத்து இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகையைக் கொண்டிருந்தன. 1981-ஆம் ஆண்டிற்கும் 1991-ஆம் ஆண்டிற்குமிடையேதான் 11 நகரங்கள் தலைநகரங்களின் பட்டியலில் சேர்ந்துகொண்டன. இப்போது நகரத்தின் மொத்த மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பத்து இலட்சத்திற்கும் மேலான மக்கள்தொகையைக் கொண்ட நகரங்களில் வசிக்கின்றனர்.

வளர்ச்சி விகிதத்தை நோக்கினாலும் பெருநகரங்கள் அவற்றைக் காட்டிலும் சிறிய உருவளவுடைய நகரங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் நிலையான உயர்ந்த போக்கினையே கொண்டுள்ளன. அட்டவணை – 5, 1901 முதல் 1991 வரையிலான வளர்ச்சிப்

படிப்பகம்

www.padippakam.com



அட்டவணை - 3

## நகர மையங்களில் மக்கள்தொகைத் திரட்டு

| மக்கள்தொகைக் கணக்கெடுப்பு | பெருநகரப்* பரப்பு மற்றும் சிறுநகர எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை | நகர மக்கள் தொகை | நகர மக்கள் தொகையில் சதவீதம் | பத்து ஆண்டு வளர்ச்சி விகித சதவீதம் | ஆண்டு வளர்ச்சி விகித சதவீத மடங்கு | நகர நோக்கு விசைவேகம் (ஆண்டு சதவீதம்) ஆண்டு ஆதாயம் | ஆண்டு விகித ஆதாயம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1901 | 1,827 | 238,396,327 | 25,851,873 | 10.84 | — | — | — | — |
| 1911 | 1,815 | 252,093,390 | 25,941,633 | 10.29 | 0.35 | 0.03 | -0.06 | -0.51 |
| 1921 | 1,949 | 251,321,213 | 28,086,167 | 11.18 | 8.27 | 0.79 | 0.09 | 0.86 |
| 1931 | 2,072 | 278,977,238 | 33,455,989 | 11.99 | 19.12 | 1.75 | 0.08 | 0.72 |
| 1941 | 2,250 | 318,660,580 | 44,153,297 | 13.86 | 31.97 | 2.77 | 0.19 | 1.56 |
| 1951 | 2,843 | 361,088,090 | 62,443,709 | 17.29 | 41.42 | 3.47 | 0.34 | 2.47 |
| 1961 | 2,365 | 439,234,771 | 78,936,603 | 17.97 | 26.41 | 2.34 | 0.07 | 0.41 |
| 1971 | 2,590 | 548,159,652 | 109,113,977 | 19.91 | 38.24 | 3.21 | 0.19 | 1.08 |
| 1981 | 3,378 | 683,329,097 | 159,462,547 | 23.34 | 46.14 | 3.83 | 0.34 | 1.72 |
| 1991 | 3,768 | 844,324,222 | 217,177,625 | 25.72 | 36.19 | 3.09 | 0.42 | 1.02 |

* நகரத் திரட்சிகள்

ஆதாரம் : இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, 1991, வரிசை எண் 1,2-ம் தாள்.

அட்டவணை - 4

## பெருநகர்ப்பரப்பு மற்றும் சிறுநகரத் திரட்டின் மிகுதியான சான்றுகள்

| மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆண்டு | பெருநகரப் பரப்புகள் மற்றும் சிறு நகரங்களின் எண்ணிக்கை (பத்து இலட்சத்திற்குக் கூடுதலாக) | பெருநகரங்கள் மற்றும் சிறு நகரங்களின் மக்கள் தொகை | சராசரி மக்கள்தொகை பெருநகரம் மற்றும் சிறு நகரத்துப்படி (பத்து இலட்சத்தில்) | பத்து இலட்சத்திற்கும் கூடுதலான பெருநகர அல்லது சிறு நகரங்களின் மக்கள் தொகை இந்திய சதவீதப்படி: மொத்த மக்கள்தொகை | நகர மக்கள்தொகை | பத்து ஆண்டுகளில் மாறுபட்ட மக்கள்தொகை (சதவீதத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1901 | 1 | 1,510,008 | 1.51 | 0.63 | 5.84 | — |
| 1911 | 2 | 2,763,586 | 1.38 | 1.10 | 10.65 | 83.02 |
| 1921 | 2 | 3,129,518 | 1.56 | 1.25 | 11.14 | 13.24 |
| 1931 | 2 | 3,406,869 | 1.70 | 1.22 | 10.18 | 58.86 |
| 1941 | 2 | 5,307,540 | 2.65 | 1.67 | 12.02 | 155.79 |
| 1951 | 5 | 11,746,616 | 2.35 | 3.25 | 18.81 | 121.32 |
| 1961 | 7 | 18,101,748 | 2.59 | 4.12 | 22.93 | 54.10 |
| 1971 | 9 | 27,831,065 | 3.09 | 5.08 | 25.51 | 53.75 |
| 1981 | 12 | 42,121,700 | 3.51 | 6.16 | 26.41 | 51.53 |
| 1991 | 23 | 70,661,259 | 3.07 | 8.37 | 32.54 | 67.76 |

ஆதாரம் : இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, 1991.

www.padippakam.com



அட்டவணை - 5

**பெருநகரப் பரப்புகள் மற்றும் சிறுநகரங்களின் வளர்ச்சிப்போக்கு 1901-க்கும் 1991-க்கும் இடையே**

| பத்து ஆண்டுகள் | மொத்தப் பிரிவு | பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 4 | பிரிவு 5 | பிரிவு 6 |
|---|---|---|---|---|---|---|---|
| 1901-11 | -0.14 | 5.54 | -7.07 | 4.71 | -5.39 | -4.23 | 7.48 |
| 1911-21 | 8.25 | 16.99 | 7.09 | 5.10 | 0.32 | 4.66 | 15.82 |
| 1921-31 | 19.08 | 25.11 | 33.50 | 25.66 | 17.22 | 9.30 | -11.74 |
| 1931-41 | 32.09 | 61.83 | 29.50 | 28.57 | 15.78 | 16.18 | -20.23 |
| 1941-51 | 41.49 | 65.19 | 23.34 | 36.00 | 22.21 | 21.73 | -39.21 |
| 1951-61 | 25.85 | 44.99 | 41.98 | 35.62 | 17.90 | -33.33 | -68.71 |
| 1961-71. | 37.91 | 53.51 | 34.06 | 30.34 | 18.22 | -10.75 | -20.71 |
| 1971-81 | 46.23 | 54.35 | 55.73 | 30.85 | 27.54 | 17.82 | 65.73 |
| 1981-91 | 36.09 | 46.87 | 28.14 | 25.30 | 10.72 | -1.27 | -21.70 |

ஆதாரம்: இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, 1991.

அட்டவணை - 6

**1901க்கும் 1991க்கும் இடையே பூனாவின் வளர்ச்சிப்போக்கு**

| ஆண்டு | மக்கள்தொகை |
|---|---|
| 1901 | 164,117 |
| 1911 | 172,884 |
| 1921 | 198,543 |
| 1931 | 250,787 |
| 1941 | 324,286 |
| 1951 | 605,504 |
| 1961 | 790,798 |
| 1971 | 1,135,034 |
| 1981 | 1,685,300 |
| 1991 | 2,485,014 |

ஆதாரம் : இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு,1991, வரிசை எண்.1, பக்கம்-2.

www.padippakam.com



போக்கினைக் காட்டுகிறது. அட்டவணை – 6, நம் பெருநகரங்களில் ஒன்றான பூனா எவ்வாறு 1901-க்கும் 1991-க்கும் இடைப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பில் வளர்ச்சியடைந்துள்ளது என்பதைக் கூறுகிறது.

பூனாவின் வளர்ச்சி 1901-க்கும் 1941-க்குமிடையே சீரான தாகவும் சாந்தமானதாகவும் இருந்தது. 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டில் வளர்ச்சி தோராயமாக 5.2 சதவீதமாகவும், 1911 முதல் 1921 வரை, 13 சதவீதமாகவும் 1921 முதல் 1931 வரை கணிசமான 20.7 சதவீதமும், 1931-க்கும் 1941-க்கும் இடையே ஏறத்தாழ 29 சதவீதமும், 1941 முதல் 1951 வரை 87 சதவீதமும், 1951 முதல் 1961 வரை சுமாராய் 31 சதவீதமும், 1961 முதல் 1971 வரை கிட்டத்தட்ட 43.5 சதவீதமும் மற்றும் 1971 முதல் 1981 வரை அதன் வளர்ச்சி 48.5 சதவீதமுமாகும். 1941-ஆம் ஆண்டுக்கும் 1951-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம் இரண்டாம் உலகப்போர் காலமும், அதையடுத்த அமைதியான நேரத்தில் பூனா ஒரு இராணுவத் தளமாகவும் ஆயுதத் தயாரிப்பு மையமாக வெகு வேகமாக வளர்ச்சி அடைந்தது. அதேபோல 1961-ஆம் ஆண்டு முதல் பூனா தொழில்மயமாக்கப்பட்டதன் காரணமாக மக்கள்தொகை வளர்ச்சியினை மேலும் உயர்த்தியது. இன்னும் சொல்லப் போனால், 1961-க்கும்–1981-க்கும் இடையேதான்பூனாவின் மக்கள்தொகை இரட்டிப்படைந்தது.

மேலும் முக்கியமானதென்னவென்றால், நகர மக்கள்தொகை வளரும்போது அதுவும் குறிப்பாகப் பெருநகரங்களில் குவிக்கப் பெறும் அதே நேரத்தில் கிராம மக்கள்தொகையில் வளர்ச்சியில்லாமல் தேக்கநிலை ஏற்படப் போவதில்லை. 1981-ஆம் ஆண்டில் இந்திய மக்கள்தொகை 523,866,550 ஆகவும் ஆனால் 1991-ஆம் ஆண்டில் 627,146,597 ஆகவும் மாறியுள்ளது. இது ஒரு கோடி கிராம மக்கள் தொகை அதிகரிப்பை பத்தாண்டு காலத்தில் சுட்டிக்காட்டுகிறது. கிராமத்தில் மக்கள் வசிக்கும் நிலப்பரப்பானது இந்த அதிகரிப்புக்கு வளைந்து கொடுக்கக்கூடிய தன்மையற்றதாக உள்ள காரணத்தினால் கிராமங்களில் மனித-நில விகிதத்தில் ஒரு நேரடித் தாக்குதல் ஏற் படுகிறது. இதுவே காலப்போக்கில் துண்டுகளாவதற்கும், நிலவுடைமை யில் இன்னும் சின்ன பாகங்களாகப் பிரிக்கப்படும் சாத்தியக் கூறு களுக்கும், கிராமத்தில் உள்ள பொது நிலங்களில் ஆக்கிரமிப்பதற்கும், காட்டும் நிலங்களிலும் — மேய்ப்பு நிலங்களில் அத்துமீறுவதற்கும் ஜீவராசிகளின் மேல் அழுத்தத்தை ஏற்படுத்தவும் ஏதுவாகிறது. இந்தியாவில் 60 சதவீதம் உழுது பயிரிடத்தக்க நிலமாகவும், எஞ்சிய 15 சதவீதமே தரிசு நிலமாகவும் மற்றும் நகர உபயோகத்திற்கு உட்பட்டதாகவும் உள்ளது. அதாவது கிராம மக்கள்தொகை

www.padippakam.com



ஆண்டுக்கு ஒரு கோடிக்கும் மேலாக அதிகரிக்குமேயானால், ஒவ்வொரு விவசாயியின் பயிரிடப்படுகின்ற நிலத்தின் அளவும் இயற்கையாகக் குறைகிறது. கிராமத்தைவிட்டு மக்கள் குறிப்பிட்ட அளவு வெளியேறுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக விளங்குகிறது. அஷிஷ்போஸ் என்ற மக்கள்தொகை, ஆய்வாளரின் கூற்றுப்படி கிராமத்திலானாலும் நகரத்திலானாலும் இயல்பாக பிறப்பின் மூலம் அதிகரிக்கும் மக்கள்தொகை ஏறத்தாழ ஒருமித்ததேயாயினும் சரிபாதி அதிகப்படியாயுள்ள நக்ர மக்கள் தொகை, கிராமத்தில் இருந்து வெளியேறியவர்களும் மற்றும் அதே போன்று நகரிலுள்ளோரே குடிபெயர்ப்பின் மூலம் தங்களுக்குள் அதிகரித்துக் கொண்டதன் தொகையுமாகும். இதைத்தான் அட்டவணை -7 காண்பிக்கிறது.

எல்லா மாநிலங்களிலும், பீகாரைத் தவிர, சராசரி சிறுநகரங்களின் (ஊர்களின்) தோராயமான மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் இயற்கைக்குச் சாதாரணமான அளவுக்கும் அதிகமான வளர்ச்சி விகிதமாக உள்ளது. ஆகவே, வேறு நகரத்திற்குக் குடியேறுதலே நகர மக்கள்தொகை வளர்ச்சிக்கும் முக்கிய காரணமும், பங்குமாக உள்ளது. இப்போக்கினைப் பார்க்கும்பொழுது எந்த அளவுக்கு கிராமத்தின் பொருளாதார நிலையில் அழுத்தம் அல்லது தாழ்வு ஏற்படுகிறதோ அதற்கேற்பவோ அல்லது அதற்கு மேலாகவோ நகரக்குடியேற்றமும் வளர்ச்சியும் இருக்கும் எனத் தெரியவருகிறது.

மேலும் வளர்ந்து வரும் நாடுகளில் அதிக அளவு நகரங்கள் குவிந்துள்ளன. அட்டவணை - 8, உலகத்தில் 2000-வது ஆண்டில் 35 பெருநகரங்களில் காணக்கூடிய மக்கள்தொகையை ஐக்கிய நாடுகள் திட்டமிட்டுள்ளவாறு கணிக்கின்றது.

இந்த 35 பெருநகரங்களில் 24 வளர்ந்து வரும் நாடுகளிலும், ஐந்து இந்தியாவிலும் மற்றும் ஏழு, இந்தியத் துணைக்கண்டத்திலும் உள்ளன. மேலும் இந்த அட்டவணையைக் கூர்ந்து கவனித்தால் வளர்ந்த நாடுகளில் உள்ள பெருநகரங்களின் மக்கள்தொகை ஸ்திரத் தன்மை அடைந்தோ அல்லதுகுறைந்துகொண்டோ வருகின்றது என்றும், இலத்தீன் அமெரிக்காவிலும், வளர்ந்து வரும் நாடுகளாகிய ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள பெருநகரங்களில் தொடர்ந்து வெடித்துவிடக்கூடிய வேகத்தில் இயற்கையான வளர்ச்சியின் காரணமாகவும் வேறு தேசங்களிலிருந்து வந்து குடிபுகுவதனாலும் வளர்ச்சி கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருக்கிறது என்பதனை எடுத்துரைக்கிறது. இதற்கு சீனா மட்டுமே அதன் முதலீட்டிற்கேற்ற வருவாய் கணக்கின் காரணமாக மற்ற வளர்ந்து வரும் நாடுகளை ஒப்பிட்டு நோக்குகையில், குறிப்பாக இந்தியாவுடன் ஒப்பிடுகையில்,

படிப்பகம்

www.padippakam.com



அட்டவணை - 7

## நகர மற்றும் கிராம - நகரக் குடியேற்றத்தால் நகர மக்கள் தொகையின் வளர்ச்சி

| மாநிலம் | பொதுவான சிறுநகரங்களின் பத்தாண்டு மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் (சதவீதம்) | பத்தாண்டில் இயல்பான மக்கள்தொகை வளர்ச்சி (சதவீதம்) | வித்தியாசம் (குடியேற்றத்தால்) (சதவீதம்) |
|---|---|---|---|
| மகாராஷ்டிரம் | 36.4 | 22.0 | 14.4 |
| உத்திரப்பிரதேசம் | 35.7 | 24.5 | 11.2 |
| தமிழ்நாடு | 18.4 | 17.8 | 0.6 |
| மேற்குவங்காளம் | 26.8 | 14.5 | 12.3 |
| ஆந்திரம் | 42.9 | 23.2 | 19.7 |
| மத்தியப்பிரதேசம் | 38.8 | 25.4 | 13.4 |
| குஜராத் | 32.1 | 23.5 | 8.6 |
| கர்நாடகம் | 29.8 | 21.8 | 8.0 |
| பீகார் | 25.5 | 26.0 | -0.5 |
| இராஜஸ்தான் | 36.0 | 25.6 | 10.4 |

ஆதாரம் : இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு, 1991. வரிசை எண் 1, பக்கம் 2.

அட்டவணை - 8

## ஐ.நா.வின் திட்டப்படி கி.பி.2000-த்தில் உலகின் மிகப்பெரிய நகரங்களின் மக்கள்தொகைப் பெருக்க விகிதம்

| *தரம் | | தொகுப்பு | திரட்சி/ தொகுப்பு | நாடு 1980-ல் (பத்து இலட்சத்தில்) | மக்கள்தொகை 2000த்தில் (பத்து இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | 5 |
| 1. | (3) | மெக்ஸிகோ | மெக்ஸிகோ | 15.0 | 26.3 |
| 2. | (4) | சாபாலோ | பிரேசில் | 12.8 | 24.0 |
| 3. | (1) | டோக்கியோ/ யோகோஹாமா | ஜப்பான் | 17.0 | 17.1 |
| 4. | (8) | கல்கத்தா | இந்தியா | 9.5 | 16.6 |
| 5. | (14) | கிரேட்டர் பம்பாய் | இந்தியா | 8.5 | 15.5 |
| 6. | (2) | நியூயார்க் | அமெரிக்கா | 15.6 | 13.5 |
| 7. | (15) | சியோல் | தென் கொரியா | 8.5 | 13.5 |
| 8. | (5) | சாங்ஹாய் | சீனா | 11.8 | 13.5 |
| 9. | (11) | ரியோ-டி-ஜெனேரோ | பிரேசில் | 9.2 | 13.3 |
| 10. | (24) | தில்லி | இந்தியா | 5.9 | 13.3 |
| 11. | (6) | பியூன்ஸ்-ஏர்ஸ் | அர்ஜன்டினா | 10.1 | 13.2 |

www.padippakam.com



அட்டவணை-8 தொடர்ச்சி

| 1 | | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| 12. | (19) | கெய்ரோ | எகிப்து | 7.3 | 12.8 |
| 13. | (21) | ஜகார்தா | இந்தோனேஷியா | 6.7 | 12.8 |
| 14. | (25) | பாக்தாத் | இராக் | 5.7 | 12.8 |
| 15. | (26) | டெஹரான் | இரான் | 5.6 | 12.8 |
| 16. | (28) | கராச்சி | பாகிஸ்தான் | 5.2 | 12.2 |
| 17. | (27) | இஸ்தான்புல் | துருக்கி | 5.3 | 11.9 |
| 18. | (9) | லாஸ் ஏன்ஜல்ஸ் | அமெரிக்கா | 9.5 | 11.2 |
| 19. | (35) | டாக்கா | வங்காளதேசம் | 4.9 | 11.2 |
| 1985 ஆம் ஆண்டுப் பட்டியல் | | | (1985-ல்) | | |
| 20. | (23) | மணிலா | பிலிப்பைன்ஸ் | 6.0 | 11.1 |
| 21. | (12) | பீஜிங் | சீனா | 9.1 | 10.8 |
| 22. | (16) | மாஸ்கோ | ரஷ்யா | 8.2 | 10.1 |
| 23. | (30) | பேங்காக் | தாய்லாந்து | 4.6 | 9.3 |
| 24. | (18) | தியான்ஜியான் | சீனா | 7.7 | 9.2 |
| 25. | (13) | பாரிஸ் | பிரான்சு | 8.8 | 9.2 |
| 26. | (31) | லிமா | பெரு | 4.6 | 9.1 |
| 27. | (7) | லண்டன் | இங்கிலாந்து | 10.0 | 9.1 |
| 28. | (33) | கின்ஷாஸா | சயர் | 5.8 | 8.2 |
| (1990-ல்) | | | (1990-ல்) | | |
| 29. | (10)( | ரீன்-ரூர் | ஜெர்மனி | 9.3 | 8.6 |
| 30. | (35) | லாகோஸ் | நைஜீரியா | 6.4 | 8.3 |
| (1995-ல்) | | | (1995-ல்) | | |
| 31. | (34) | சென்னை | இந்தியா | 4.4 | 8.2 |
| 32. | (34) | பெங்களூர் | இந்தியா | 6.5 | 7.5 |
| 33. | (17) | ஒசாகா | ஜப்பான் | 8.0 | 7.7 |
| 34. | (22) | மிலன் | இத்தாலி | 6.6 | 7.5 |
| 35. | (20) | சிக்காகோ | அமெரிக்கா | 6.8 | 7.2 |

* குறியீட்டில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கைகள் 1980-ஆம் ஆண்டின்படி தரத்தினைக் குறிக்கிறது.
ஆதாரம்:- மனிதக் குடிபெயர்ப்பு குறித்த உலக அறிக்கை, 1988, யு.என்.ஸி.எச்.எஸ்.

விதிவிலக்காக உள்ளது. ஆயினும் இந்திய அரசின் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கொள்கை செயல்திட்டங்கள் அதன் பிறப்பு, நோய் முதலியவற்றை சமுதாய வளர்ச்சியிலிருந்து தடுத்து விடுகின்றது. அதேபோன்று சாங்ஹாய் மற்றும் பீஜிங் போன்ற நகரங்களும் மக்கள்தொகையினை கட்டுப்படுத்தவோ அல்லது ஸ்திரப்படுத்தவோ முற்படுகின்றன என்பது தெரியவருகிறது. இந்த வேறுபாடுகளை அட்டவணை — 9 தெளிவாகக் காட்டுகிறது.

ஐக்கிய நாட்டின் மதிப்பீட்டின்படி வரவிருக்கும் கி.பி.2000-இல் 35 நகரங்கள் இந்தியாவில் ஒரு கோடிக்கும் மேலான மக்கள்தொகையைக் கொண்டதாகவும், அவற்றுள் ஏழு நகரங்கள் ஐம்பது இலட்சத்திற்கு மேலான மக்கள்தொகையைக் கொண்டதாகவும் இருக்கும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. தலைமைப் பதிவாளரது, சிறிது வித்தியாசமான கூற்றிலும் 36 நகரங்கள் கி.பி.2000-இல் பெருநகர

படிப்பகம்

www.padippakam.com



அட்டவணை — 9

## 2001 — ஆம் ஆண்டில் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நகரங்களின் மதிப்பிட்ட மக்கள் தொகை

| வரிசை எண் | நகர் | மதிப்பிட்ட மக்கள்தொகை (பத்து இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | 1981 | ஆர்.ஜி. 2001 | ஐ.நா 2000 |
| 1. | கிரேட்டர் பம்பாய் | 8.24 | 13.95 | 16.00 |
| 2. | கல்கத்தா | 9.19 | 12.93 | 16.53 |
| 3. | புதுதில்லி | 5.73 | 12.90 | 13.24 |
| 4. | பெங்களூர் | 2.92 | 7.63 | 7.96 |
| 5. | சென்னை | 4.29 | 7.37 | 8.15 |
| 6. | ஹைதராபாத் | 2.09 | 4.62 | 5.13 |
| 7. | அகமதாபாத் | 2.55 | 4.55 | 5.28 |
| 8. | பூனா | 1.69 | 3.31. | 3.69 |
| 9. | போபால் | 0.67 | 3.07 | 3.54 |
| 10. | சூரத் | 0.91 | 2.59 | 1.93 |
| 11. | கான்பூர் | 1.64 | 2.57 | 3.17 |
| 12. | பாட்னா | 0.92 | 2.50 | 1.38 |
| 13. | ஜெய்ப்பூர் | 1.02 | 2.38 | 2.21 |
| 14. | நாக்பூர் | 1.30 | 2.27 | 2.56 |
| 15. | இந்தோர் | 0.83 | 1.77 | 1.68 |
| 16. | ராஞ்சி | 0.50 | 1.75 | — |
| 17. | வதோதரா | 0.74 | 1.58 | 1.64 |
| 18. | உல்ஹாஸ்நகர் | 0.65 | 1.55 | 4.59 |
| 19. | ஜம்செட்பூர் | 0.67 | 1.52 | 1.34 |
| 20. | விசாகப்பட்டணம் | 0.60 | 1.50 | 1.77 |
| 21. | தன்பாத் | 0.68 | 1.47 | 2.34 |
| 22. | லக்னோ | 1.01 | 1.46 | 2.01 |
| 23. | மதுரை | 0.91 | 1.39 | 2.68 |
| 24. | ஜபல்பூர் | 0.76 | 1.39 | 1.67 |
| 25. | கோயம்புத்தூர் | 0.92 | 1.36 | 2.83 |
| 26. | விஜயவாடா | 0.54 | 1.22 | — |
| 27. | வாரானாசி | 0.80 | 1.31 | 1.57 |
| 28. | ஜோத்பூர் | 0.51 | 1.19 | — |
| 29. | கொச்சின் | 0.69 | 1.19 | 1.31 |
| 30. | லூதியானா | 0.61 | 1.18 | 1.50 |
| 31. | ஸ்ரீநகர் | 0.61 | 1.09 | 1.30 |
| 32. | மீரட் | 0.54 | 1.08 | — |
| 33. | ஆக்ரா | 0.75 | 1.00 | 1.59 |
| 34. | குவாலியர் | 0.56 | 1.00 | 1.15 |
| 35. | திருச்சிராப்பள்ளி | 0.61 | 1.00 | 2.05 |
| 36. | அலகாபாத் | 0.65 | 1.00 | 1.21 |
| 37. | அமிர்தசரஸ் | 0.59 | — | 1.03 |
| 38. | ஊப்ளி-தர்வாட் | 0.53 | — | 1.27 |
| 39. | சேலம் | 0.52 | — | 1.58 |
| 40. | திருவனந்தபுரம் | 0.52 | 1.16 | — |

ஆதாரம்: தலைமைப்பதிவாளர் (ஆர்.ஜி) மற்றும் ஐ.நா. மதிப்பீடு; ஐ.நா.வின் குடிபெயர்ப்புகள் குழு உலக அறிக்கையில் கூறியுள்ளபடி, 1988, யு.என்.ஸி.எச்.எஸ். 1987.

www.padippakam.com



அந்தஸ்தைப் பெற்றுவிடும் என உள்ளது, ஐ.நா.வின் திட்டக்கருத்துக்கு இது ஒருமிக்கிறது. ஆக, இந்த இரண்டு பட்டியல்களையும் ஒப்பிடுகையில் இந்தியாவிலுள்ள 40 நகரங்கள் அடுத்த பத்தாண்டுக் கணக்கெடுப்புக்குள் பெருநகரங்களாக மாறி இருக்கும் என்பது திண்ணமாகத் தெரியவருகிறது. அதேநேரத்தில் வேறுவிதமாகப் பார்த்தால் வளர்ந்த நாடுகளிலுள்ள நகரவளர்ச்சியும், சீனா போன்ற நாடுகளிலும் ஒரு நிலையான தன்மையை எட்டிவிடும்போது நம் நாட்டின் வளர்ச்சி ஒரு முடிவுறாத நிலையிலேயே இருக்கும். வளர்ச்சியை பார்த்தோமேயானால், சுற்றுப்புறமும், வாழ்க்கைத் தரமும் மக்கள் தொகையை ஒரு நிலைக்குக் கொண்டு வந்துவிட்ட நாடுகளின் பெருநகரங்களிலும், சிறுநகரங்களிலும் இடம் மற்றும் நேரம் முதலியன விருத்திக்கு ஏதுவாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதேநேரத்தில் இந்தியா, எகிப்து, ஈராக், வங்காள தேசம், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நகரங்களின் வளர்ச்சி மிக விரைவாகவும், உயிர் வாழ்தலுக்கே மிகவும் போராட வேண்டியதாகவும் இருக்கும்.

மற்றொரு கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, வளர்ச்சி அடைந்த பெருநகரங்கள் மக்கள்தொகை அழுத்தத்திலிருந்து விடுபட்டால், தனது நகரங்களில் விளைபொருட்களை முன்னேற்றத்திற்கு உபயோகப்படுத்தலாம். அந்நாடுகள் மேலும் ஆரோக்கியமற்ற குடிசைப்பகுதிகளை முற்றிலுமாக களைந்தெறியவும், நகரமாற்றியமைப்புத் திட்டம் மற்றும் பிறப்புரிமையால் பெற்ற மரபுரிமைக்கு பாதுகாப்பளிக்கவும் அதிக நேரத்தை ஒதுக்க ஏதுவாகும். மக்கள்தொகை வளர்ச்சியில் ஒரு சமநிலையை அடைந்துவிட்ட ஒரு நகரம் கம்பீரமாக சாய்ந்து அமர்ந்து கொண்டு தனது தலைமுறை தலைமுறையாக இருந்துவரும் பழமையான நகரத்தில் எந்தெந்த கலைத்திறன்களைக் கட்டிக்காப்பது என்று முடிவெடுக்கலாம். அம்மாதிரியான நகரங்கள் மேலும் தீவிரமான முன்னேற்றங்களுக்குத் தேவையான நேரத்தையும் இடத்தையும் திட்டமிட்ட வகையில் மாற்றியமைக்கத் தேவையான உள்ளமைப்பு, மக்கள்தொகைக் குறைப்பு, பொருளாதார மற்றும் வேலைவாய்ப்புக் கட்டமைப்பு இவற்றிற்கு முன்னுரிமை அளிக்க ஏதுவாகும். இந்நகரங்கள் அங்கு வசிக்கும் மக்களுக்கு ஓய்வு நேரத்தையும், சுற்றுப்புற முன்னேற்றத்தையும் வழங்கக்கூடிய நிலையிலிருக்கும். வளர்ந்துவரும் முடிவுபெறாத உலக நகரங்களில் அதிகமான பிரச்சினைகளும், பல்வகைப்பட்ட அடிப்படைத் தேவைகள் பூர்த்தியடையாமலிருக்கக் காணலாம். குடிசைகள் அபிவிருத்தியாவதும், நில ஆக்கிரமிப்பு அதிகரிப்பதும், வீடுகள் நன்கமையாமல் இருப்பதும், வறுமைக்கோட்டின் விளிம்பிலுள்ள மக்களைச் சுகாதாரமற்ற நிலையில் பல்வேறு நோய்களையும், அசுத்தத்தையும் மற்றும்

www.padippakam.com



அழுக்கையும் பெருகச் செய்யும். இதன் காரணமாக எந்த ஒரு தனிப் பட்ட நபரும் இன்றைய இந்தியாவின் நிலையை நன்கு புரிந்து கொள்ள வேண்டியதன் அவசியம் இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. அது மட்டுமில்லாமல் நம்மிடையே திட்டமிடப்பட்ட நிர்வாகத்தையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றோம்.

இவ்வகையான பிரச்சினைகள் இனிவரும் பகுதிகளில் இரண்டாகப் பிரிக்கப்பட்டுத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. முதல் பாகத்தில் வெளித்தோற்றங் கடந்த அடிப்படை உண்மைகளும், நிலஉபயோகத் திட்டங்களையும், அது சார்ந்த வளர்ச்சி — பராமரிப்பு— ஒருங்கிணைந்த நகரமைய சேவையும் பராமரிப்பும் மற்றும் இரண்டாம் பாகத்தில் ஆக்கத்திட்ட அணுகுமுறை, அது சார்ந்த சுற்றுப்புற விழிப்புணர்வு நகரவளர்ச்சிக்கு அவற்றின் தேவைகளும் விவாதிக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# 2

# அடிப்படை உண்மைகள்

சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் நகரத் திட்டத்தைப்பற்றி பேசுவதற்கு முன்னதாகவும், அதற்கு ஒரு மாற்று முயற்சியாகவோ அல்லது கண்டெடுப்பதற்கு முன்பாகவோ இந்திய நகரங்களில் உள்ள நிலங்களின் நிலைமையைச் சரிவரத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நமது நகர மையங்களின் உண்மை நிலைமையினை தேசிய நகரமயமாக்கும் குழு தனது அறிக்கையில் சரிவர வெளிக் கொண்டு வந்திருக்கிறது. அதன் அறிக்கையின் முதல்பாகத்தில் கூறுவதென்னவென்றால்:

நகர மையங்களின் அடர்த்தியையோ, அளவையோ மனத்தில் கொள்வதால் நம் மனநிலை குழப்பமாகவும் இருபொருள் படக்கூடியதாகவும் உள்ளது. ஒருபுறம் வளர்ச்சியில் நாட்டிற்குத் தேவையான திறன்களையும் செல்வத்தையும் உருவாக்கக்கூடிய பெருவிசைகளாகவும், கிராமப்புறத்திலிருந்து வருபவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாகவும் உள்ளது. அம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் அல்லது கருத்தில், சிறப்புமிக்க, அசாதாரண அணிசேர்த்த வேறுபட்டிருக்கும் நகரக் குடியிருப்பினையும் கொண்டதாக இந்தியாவைச் சிந்தித்துப் பார்க்கிறோம். நமது விளைநிலங்கள், நதிகள் மற்றும் பல இயற்கை அளித்துள்ள விளைப்பொருட்கள் முதலியவற்றை நமது தேசத்திற்கு சிறந்த சொத்தாகக் கருதுகிறோம்.

www.padippakam.com



மறுபுறத்தில், இந்நகரமையங்கள் மனித வளத்திற்கு ஒவ்வாத மோசமான வாழ்க்கை நிலைமையை அதுவும் மிக அதிகமான குடிமக்களை (சரிபாதி தில்லி மற்றும் பம்பாயில்) புறம்போக்குக் குடியிருப்புகளில் கொண்டுள்ளன. இந்த நெரிசலான குடிசைகளும் தண்ணீர் மற்றும் சுகாதாரமற்ற வாழ்க்கை, உடல் ஆராக்கியத்திற்கு பங்கமாக மட்டுமில்லாமல் இழிவான மனித வாழ்விற்கு ஒரு உந்து கோலாகவும் உள்ளது. இதிலும் இந்தியா மகிழ்ச்சியற்றதோர் முன்னிலையில்தான் உள்ளது - இதனை ஆய்வுசெய்ய விரும்புவோர் பயணம் செய்யவேண்டிய பாதை நமது நகரங்களில் உள்ளது போன்று மிகவும் கடினமான புரிந்துகொள்ளமுடியாத ஒன்றாகத்தான் இருக்கும். இனிவரும் பத்தாண்டு காலங்களில் இப்போதுள்ள அரசியல் இழுப்புவிசை மற்றும் சமூகக் கொந்தளிப்பினாலும், பணவீக்கத்தினாலும் அதைச் சுற்றியுள்ள ஏழ்மைநிலையிலுள்ள நெருக்கடி மற்றும் சுற்றுப்புற அசுத்தச் சூழலிலிருந்து வாழும் ஏழை மக்களின் எதிர்பார்ப்புக்களில் யாருக்குத் தெரியும் என்ன நடக்கப்போகிறதென்று?[1]

இக்குழு மேலும் கூறுவதாவது:

நாம் இதுவரை நகர அமைப்புகளைப் பற்றியும் இடத்திட்டத் தைப் பற்றியும் நிறையப் பேசிவிட்டோம். இனி, நாம் நமது கவனத் தைச் சிறுநகரங்களிலும் பெருநகரங்களிலும் வாழக்கூடிய மக்களின் பால் திருப்புவோம். இங்குதான், சந்தேகத்திற்கிடமின்றி, வெட்ட வெளிச்சமாகவும், வருத்தத்தைத் தரக்கூடியதாகவும் வறுமையானது நம்மைச் சுற்றியுள்ளதைக் காண்கிறோம். இது, வாதிப்பதற்கு, மிகவும் மோசமான மாசுபடிந்த தூய்மைக்கேடாகும்–குடிசை களில் உருவாகி சிறுநகரத்தையே ஆண்டு கொண்டிருப்பதும், பிச்சைக் காரர்கள் மத்தியிலிருப்பதும், வீதிகளில் பொருட்களை விற் போரிடமும் மற்றும் கூலிவேலை செய்யும் பணியாளர்களிடமும் தினப்படியுள்ள வாழ்க்கைத்தரத்தினைச் சார்ந்த ஒரு மாசாகும். அந்நகரங்களில் வசிக்கும் ஏழைகளால் அதைப் பகிர்ந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் பணக்காரர்களின் வீட்டையும் நகரத்தை யும் சுத்தம் செய்தும், வீடுகளில் சமைத்தும், தொழிற்சாலைகளுக்குப் பணியாளர்களை வழங்கியும் அங்காடிகளுக்கு வேலையாட்களை வழங்கியும், பல்வேறு சாமான்களை எடுத்துச் செல்வோராக இருந்தபோதிலும் அவர்கள் தொடர்ந்து ஏழைகளாகவே இருந்து வருகின்றனர். இந்நிலையினை, மாற்றியமைக்க நினைப்பது–ஒரு நகரக்குவிப்பு–கிராமச் சூழ்நிலையில் எங்கும் காணப்படும் வளர்ந்துவிட்ட வறுமை, சுதந்திர இந்தியாவை பயமுறுத்தும் பிரதிபிம்பமாகும்.[2]

www.padippakam.com



நகர சுற்றுப்புறச்சூழலைப் பாதிக்கக்கூடிய சில முக்கிய காரணங்கள் உள்ளன. நகரக்குடியிருப்புகள் மிகவும் நெரிசலாகவும், மேலும் குவிப்பின் காரணமாகவும், நெரிசலடைந்து வருகிறது. இந்த அடைசல் இடம், வீடு, சுகாதாரம், குடிநீர்வசதி மற்றும் மாசு உள்பட பல்வகையான பிரச்சினைகளைக் கொடுக்கிறது. உலகின் வளர்ந்துவரும் நாடுகளிலுள்ள நகரங்களில், குறிப்பாக இந்தியாவில் இதன் அழுத்தம் மக்கள்தொகை வளர்ச்சியில் அதற்கேற்ப திறமைகளையோ, சாதனங்களையோ ஏற்படுத்திக்கொடுக்க முடியாத நிலையிலும் நகரவாழ்வின் தரத்தினை உயர்த்தத் தேவையான நேரத்தை உருவாக்கவோ மற்றும் அடிப்படை பராமரிப்பை வழங்கவோ முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது. தொய்ந்துவரும் நகரச் சுற்றுப்புறத்தை உற்றுநோக்கினால் அதில் அடிப்படைச்சேவையும், பராமரிப்பும்கூட மிகவும் தாழ்ந்த போக்கினைத்தான் காட்டுகிறது. திட்டமிடுவோரின் கவனத்தை ஈர்க்கவேண்டிய சில முக்கியமான விளைவுகளாகவோ அல்லது முடிவுகளாகவோ இவைகளே இருக்கின்றன.

வெப்ஸ்டரின் ஒன்பதாவது கல்லூரிச் சொல்லகராதி சுற்றுச்சூழலை விவரிக்கும்போது கால இடச் சூழல், புறப்பொருள், ஒருவனைச் சுற்றிய சூழ்நிலைகள், சிக்கலான இயற்பொருள் சார்ந்த வேதியியல், பண்புசார்ந்த மற்றும் உயிர்சார்ந்த (தட்பவெப்பநிலை, மண் மற்றும் உயிர்ப்பொருள்கள்) உயிரின வாழ்க்கைச் சூழல் என்றும்; இறுதியில் அதன் உருவப்படிவத் தோற்றத்தினையும் உயிர்வாழ்தலையும் நிர்ணயம் செய்யும் பொருளாகவும் விவரிக்கின்றது. இதுவே ஒருவனது வாழ்க்கை மற்றும் கலாச்சாரநிலைமையினை ஒருங்கிணைப்பதாகவும் உள்ளது.

இந்த பரந்த கோணத்தில் எந்த மனிதச் செயலும் அல்லது மக்களமைப்பும் நிலப்பரப்பில் அல்லது உலகளவில் சுற்றுச்சூழலைச் சார்ந்துள்ளது. நாகரீக வாழ்விற்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளே பூர்த்தியடையாத நிலையில், சுற்றுச்சூழலில் நகரக் குடியிருப்பின் விளைவுகள் இயற்கையாக மோசமாகத்தானிருக்கும். நாம் இப்போது அவசரமான அத்தியாவசிய சுற்றுப்புற விழிப்புணர்வையும், அதுசார்ந்த திருத்தக்கூடிய பாதுகாப்பான நிலையினையும் நமது நாட்டில் எப்படிக் கொண்டிருக்கிறோம்.

### நிலம்

மனிதக் குடியிருப்புக்கள் பூமியில் பிழைத்திருக்க வேண்டியிருப்பதால் மொத்த சுற்றுச்சூழலில் நிலம் ஒரு முக்கியமான உள்ளுறுப்பாக இருந்துவருகிறது. அக்குடியிருப்புக்களை உள்ளடக்கிய நிலத்தின்

www.padippakam.com



நிலை, அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்பின் விளைவு மற்றும் நில உபயோகத்தின் மாற்றங்களைக் கண்டறிந்தால் அது அந்நிலங்களைச் சரிவரப் பயன்படுத்தியுள்ளோமா என்று தெரிந்துகொள்ள மிகவும் ஏதுவாக இருக்கும். எந்த ஒரு சுற்றுப்புறச் சூழலுக்கும் தகுந்த நகரத் திட்டமிடுதலும், நாம் அந்நிலங்களை எவ்விதம் செவ்வனே பயன் படுத்த முடியும் என்ற திட்டமான துவக்கமும் வேண்டும். ஆகவே, விவசாயச் சமூகங்களின் நிலஉபயோக மாதிரிகள் சுற்றுச்சூழலை மிகவும் ஒத்தியலக்கூடிய ஒன்றே. எனவே, விவசாயச் சமூகம் ஒரு தலையாய வேலையாக நிலப்பயிர்த் தொழிலையும் மற்றும் அது சார்ந்த அனைத்துப் பணிகளையும் கருத்தில்கொண்டே செயல் படவேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை–10 சராசரி இந்தியக் கிராமத்தில் நிலம் எவ்விதம் பயன்படுத்தப்படுகிறது என்று தெளிவுபடுத்துகிறது.

அட்டவணை–10

சராசரி இந்தியக் கிராமத்தில் நிலப் பயன்பாட்டின் மாதிரி

| கிராமப் பெயர் | கிராமத்தின் மொத்தப் பரப்பு (ஹெக்டேரில்) | மொத்தக் குத்தகைக்கு உட்பட்ட ஆக்கிரமித்த பரப்பு (ஹெக்டேரில்) | வீடுகளுக்கு உட்பட்ட பரப்பு (ஹெக்டேரில்) | சாலைகளுக்கு உட்பட்ட பரப்பு (ஹெக்டேரில்) | மேய்த்தல் மற்றும் இதரப் பொதுவான நோக்குகளின் பரப்பு (ஹெக்டேரில்) |
|---|---|---|---|---|---|
| சந்துகேடி | 868.04 | 773.23 | 8.76 | 44.39 | 50.16 |

ஆதாரம்: ஆணையர், நிலச் சான்றுகள் மற்றும் குடியிருப்புகள், மத்தியப் பிரதேச அரசு, 1989.

ஏறக்குறைய சராசரி கிராமத்தின் மொத்தப்பரப்பில் 89 சத வீதம் (மற்றும் குடியிருப்புப் பகுதி சதவீதமும்) விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. அசைவுத்தளம் மற்றும் சாலைகள் மொத்தக் கிராமப்பரப்பில் ஐந்து சதவீதம் சேர்ந்துகொள்கிறது. கிராமப் பொதுநிலம் மற்றும் மேய்த்தல் நிலமாக ஐந்து சதவீதத் திற்கும் சற்றே அதிகமான பரப்பும் இறுதியாக உண்மையான விவசாயம் மற்றும் அது சார்ந்த அலுவல்களுக்கு மொத்தப் பரப்பில் 94 சதவீதமும் சேர்க்கப்படுகிறது.

நிலத்தின் மிகுதியான பங்கு சுழற்சியில் பருவத்திற்கேற்ற வாறு உழுது அல்லது பயிரிடப்படாத தரிசலாகவும், ஒருசில நேரத் தில் விவசாயத்திற்கும் மற்ற உபயோகத்திற்கும் பயன்படுத்தப் படுகிறது. விவசாயச் சுழற்சி இயற்கையை ஒத்த ஒன்றாக இருக்க வேண்டியதால் அவ்வகையான நிலங்கள் பெரும்பாலும் சுற்றுச்

www.padippakam.com



சூழலுக்கு இணக்கமானதாவும், மனிதனுக்கும் இயற்கைக்கும் முரண்பாடான ஒன்றாக இல்லாமலும் இருக்கின்றது. அட்டவணை–11 இதற்கு மாறுபட்டு அமைந்துள்ளது.

வீட்டுமனைகள் கட்டிக்கொள்ளப் பயன்படுத்தும் மொத்தத்தில் ஏறத்தாழ ஒரு சதவீத நிலப்பரப்புக்கு ஏதிராக, 45 சதவீதத்திற்கும் மேலாக உஜ்ஜயினி, இந்தோர் மற்றும் போபால் என்ற மூன்று நகரங்களின் நிலப்பரப்புக்களும் வசிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. மொத்த நிலப்பரப்பில், போக்குவரத்துக்கு 15 சதவீதத்திற்கும் மேலான நிலமும், பொழுதுபோக்கிற்கு ஐந்து சதவீதத்திற்கும் குறைவான நிலமும் பயன்படுத்தப்படுகிறது. இது பெருநகரங்களிலும், சிறுநகரங்களிலுமுள்ள நிலைமையைக் காட்டிலும் மிகவும் மாறுபட்டதல்ல. உதாரணமாக, புதுதில்லி-2001-க்கான வல்லமை படைத்த திட்டமாக மொத்த நிலப்பரப்பில் 12 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிலத்தை சுற்றோட்டத்தலமாக ஒதுக்கி வைத்துள்ளது. மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியான புதுதில்லி 148,639 ஹெக்டேர் நிலத்தில் 45,000 ஹெக்டேர்கள் அல்லது ஏறத்தாழ 51 சதவீதம் வல்லமை படைத்த திட்டத்தின் கீழ் நகரமயமாக்கப்பட்டது. அதன் இரண்டாவது வல்லமை படைத்த திட்டம் இன்னும் 37,000 ஹெக்டேர்கள்கொண்ட நிலத்தினை நகரமயமாக்குதலின் கீழ்க் கொண்டுவந்து பெருநகரமாக்கக் கோருகிறது. இதன்மூலம் தெரிவது என்னவென்றால் கி.பி. 2001-ல் தில்லியின் 55 சதவீத மொத்த நிலப்பரப்பும் கட்டி முடித்த சுற்றுச்சூழலின்கீழ் வந்துவிடும் எனத்தெரிகிறது. அதிலும் சுமாராக 15 சதவீத நிலமே பொழுதுபோக்கு வசதிகளுக்கும், பூங்கா அமைப்பதற்கும், தோட்டங்கள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படும். மீதமுள்ள நிலப்பரப்புகள் செங்கல், சிமெண்ட் கலவை மற்றும் நிலக்கீலின் கீழ் புதைந்துவிடும். அதாவது 2001-ல் தில்லி தனது சரிபாதி நிலத்தை சுழற்சி முறையில் பயன்படுத்தமுடியாத ஒருமுறையில், இயற்கைக்கு எதிராகப் போட்டியிடும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடைப்பட்ட நில மேலாண்மைப் பேதத்தினை தேசிய நகரமயமாக்கும் குழு நன்றாகக் காட்டுகிறது. இதன் கூற்றுப்படி, இந்த கடினமான நிலையினை நிர்வாகம் செய்வது நகரிலானாலும் கிராமத்திலானாலும் வித்தியாசமான ஒன்றாகும். கிராம நிலம் உற்பத்தி வகையைச் சார்ந்த ஒன்றாகும். விவசாயமே கிராமத்தின் முக்கியப் பொருளாதார நடவடிக்கைக்கு முக்கியமானது ஆகும். நகர நிலங்களோ, இதற்குமாறாக, மொத்தத்தில், அதன்மேல் கட்டமைப்பு வேலைகளுக்கு ஒரு அடித்தளமாக உள்ளது. கிராம நிலம் பெரிதும் சுழற்சி முறையின்கீழ்

www.padippakam.com



அட்டவணை-11

சில நகர மையங்களின் நில உபயோக மாதிரிகள்

| வரிசை எண் | நிலஉபயோகம் | உஜ்ஜயினி (சதவீதத்தில்) | இந்தோர் (சதவீதம்) | போபால் (சதவீதம்) |
|---|---|---|---|---|
| 1. | குடியிருப்பு | 46.7 | 46.5 | 47.5 |
| 2. | வாணிபம் | 3.9 | 5.7 | 1.9 |
| 3. | தொழிற்சாலை | 13.7 | 12.3 | 10.8 |
| 4. | பொது மற்றும் பொதுசார்ந்த வகை | 14.6 | 13.9 | 11.8 |
| 5. | பொது உபயோகங்கள் | 1.7 | 2.0 | 4.9 |
| 6. | பொழுதுபோக்கு | 3.6 | 4.4 | 6.3 |
| 7. | போக்குவரத்து | 15.8 | 15.2 | 16.9 |
| | மொத்தம் | 100.00 | 100.00 | 100.00 |

ஆதாரம்: நகர மற்றும் திட்டத்துறையின் நில ஆராய்ச்சிப்படி.

விதைத்தல், வளர்த்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்றவற்றிற்குப் பயன்படுகிறது. அதேநேரத்தில் நகர நிலமானது ஒரே முறையில் கட்டுமான வேலைக்கு மாற்றுவதற்கோ அல்லது திசை திருப்புவதற்கோ நிரந்தர முறையிலானது. கிராமநிலத்தைத் தொடர்ந்து உபயோகப்படுத்துவதால் அது பொதுவாக நகர நிலத்தைவிட நன்கு நிர்வகிக்கப்படுகிறது. அதேசமயத்தில் நகர நிலமோ ஒட்டு மொத்தமாக ஒருமுறை லாபத்திற்காக, நெடுங்கால விளைவுகளை மனதில் கருதாமல் உபயோகப்படுத்தப்படுகிறது. இதுவே பெரும்பாலும் நமது நலத்திட்டத்தில் நகரப்பரப்பு மட்டுமே இடம்பெறுவதற்கு எடுத்துக்காட்டாக உள்ள வல்லமை படைத்த திட்டங்களாகிறது. இதன் உள்ளடங்கிய தன்மை அல்லது பொருள் என்னவென்றால் நமது கிராமநிலங்கள் சரிவர உபயோகிக்கப் படுத்தப்படுகின்றன என்பதே.

நமது பரந்த முயற்சி என்னவென்றால் நிலத்தினை உபயோகப் படுத்தத் திட்டமிடல் என்பது நகரத்தின் பரபரப்பான அழுத்தத்தில் மனித நடவடிக்கையும், நகரத்திலுள்ள தற்போதைய குழப்பத்தையும் சரிவரப் பிரித்துப் பார்த்து ஆய்வதேயாகும். ஆனால் நில உப யோகத்திட்டம் மட்டுமே நகரத்திலுள்ள குழப்பத்தை நிவர்த்தி செய்ய முடியாததாயினும் நில நிர்வாகம் நிச்சயமாக நல்ல முன் னேற்றத்தைத் தந்து நிலத்திற்குரிய தனித்தன்மையையும் நிலை

அட்டவணை–12

## ஆசிய மற்றும் பசிபிக் மண்டலங்களுக்கு இடைப்பட்ட நாடுகளில் நில உபயோக வகை

| நிலவகை | சீனா | இந்தியா | இந்தோ நேஷியா | மலேசியா | தாய் லாந்து | ஜப்பான் | பர்மா | கொரியா | ஆப் கானிஸ் தான் | பாகிஸ் தான் | வங்காள தேசம் | மங் கோலியா | பிலிப்பைன்ஸ் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சாகுபடி நிலம் | 10 | 60 | 07 | 04 | 32 | 11 | 14 | 03 | 13 | 22 | 62 | 03 | 25 |
| காடு மற்றும் கானகம் | 10 | 20 | 70 | 70 | 32 | 66 | 48 | 05 | 05 | 05 | 18 | 07 | 40 |
| நிரந்தர மேய்ப்பு | 20 | 05 | 07 | – | 04 | 05 | 03 | 80 | 80 | 08 | 08 | 80 | 05 |
| மற்றவை | 60 | 15 | 15 | 26 | 32 | 18 | 35 | 06 | 06 | 65 | 12 | 10 | 30 |

ஆதாரம்: யு.என்.இ.எஸ்.ஸி.ஏ.பி., மனிதக் குடிபெயர்ப்பு : ஆசிய மற்றும் பசிபிக் மண்டல வரைபடம் (பாகம் 1), 1984.

www.padippakam.com



நாட்ட ஏதுவாகும். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு விவசாயி தனது நிலத்தை உழுவதற்கோ அல்லது அதனை தரிசாக விட்டு விடுவதற்கோ முடிவுசெய்வதும், அதையே ரபி பருவத்திற்கோ அல்லது சம்பா சாகுபடிக்கோ உபயோகப்படுத்துவது போன்ற முடிவுகள் பெரும்பாலும் சந்தையையும், காலநிலையையும் மற்றும் விதையின் கையிருப்பையும் பொருத்ததாகவே இருக்கும். இம் மாதிரியான நிலஉபயோகமுறை வளைந்துகொடுக்கக்கூடிய தன்மை யுடையது. அதுவே நகரில் பார்த்தோமானால், நகரத் திட்டமிடு பவரோ எவ்வாறாயினும் ஒரு முக்கியமான உபயோகத்தையே நிலத்திற்கு வழங்குகின்றார். மேலும் இதனையே அதிகார மனப் பான்மையுடையவர் ஆமோதித்து மாறிவரும் சூழ்நிலையை மனத்தில் கொள்ளாமல் அதன் விதியினை நிர்ணயம் செய்துவிடுகின்றார்.[3]

நிலமானது விரிந்து சுருங்கக்கூடிய தன்மையற்ற வழங்கீட்டினை அதிகப்படுத்த முடியாத ஒன்று. அட்டவணை—12 ஆசிய-பசிபிக் மண்டலங் களுக்கிடையேயுள்ள 13 நாடுகளின் நிலஉபயோகத்தை விவரிக்கிறது.

வங்காள தேசத்திற்கு அடுத்ததாக இந்தியாவில்தான் பயிரிடக் கூடிய நிலம் ஏறத்தாழ 60 சதவீதம் விவசாயத்திற்காக உள்ளது. மேலும் 25 சதவீதம் காடுகளாகவும், பசும்புல் தரைகளாகவும் உள்ளது. இந்நிலையை நாம் சீனாவுடன் ஒப்புமைப்படுத்திப் பார்க்கையில் அங்கு 60 சதவீதம் நிலம் விவசாயத்திற்கோ அல்லது காடுகளாகவோ மற்றும் பசும்புல் தரைகளாகவோ உபயோகத்திற்கு இல்லை எனத் தெரிகிறது. இதன் மூலம் நமக்குப் புலப்படுவது என்னவென்றால் இந்தியாவிலுள்ள விவசாயத்திற்கென்றுள்ள நிலத்தினை வேறு வழியில் திருப்பினால் மேய்ச்சல் நிலமாகவோ, காடாகவோ மாறுகிறது எனலாம். மத்திய அரசின் விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சித் துறை தனது 1981–82 மற்றும் 1982–83 அறிக்கையில் 17 இலட்சம் ஹெக்டேர் கிராம உபயோகத்திலிருந்த நிலத்தினைக் காடுகளாகவும், மேய்ச்சல் நிலமாகவும், உழுநிலமாகவும், பண்படுத்தப்பட்ட நிலமாகவும், தரிசல் நிலமாகவும் மற்றும் பண்படுத்த முடியாத தரிசல் நிலமாகவும் பொதுவான கிராம உபயோகத்தின் மற்ற தேவைகளுக்காக மாற்றியமைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மாற்றியமைப்பு தொழிற்சாலைகள், அணைக்கட்டு முதலியன உள்பட வளர்ச்சிச் செயல்பாட்டினை இலக்காகக் கருதிச் செய்ததாயினும், உண்மைநிலை என்னவென்றால் அந்நிலங்களில் நகரபொருட்களின் காரணமாக நில உபயோகங்கள் ஏறத்தாழ இயல்பான தோற்றங்களுக்கு வெகுவாக மாறிவிட்டது. கடந்த முப்பதாண்டுகளாக சீனாவில் 60 இலட்சத்திற்கும் மேலான ஹெக்டேர் நிலங்கள் நகர உபயோகத்திற்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.இம்மாதிரியான சுற்றுச் சூழல் மாற்றியமைப்பதன் விளைவு மதிப்பிடப்பெறாத

www.padippakam.com



ஒன்றாகும். இதன் கொள்முதல் விலை, பூமியின் வாங்கும் சக்திக் கும் அப்பாற்பட்டதாக உள்ளது.

ஆகவே நிலத்தினை மாற்றியமைக்க வழங்கும் செலவினைக் கண்டறிய வேண்டுமானால் அந்நிலம் இதற்கு முன்பாக வேறு எந்தத் தொழிலுக்கு உபயோகப்படுத்தப்பட்டது என்ற விவரம் தெரியவேண்டும். எப்படியிருப்பினும், நிலம் முழுவதுமாக தவ றான நிர்வாகத்தின்கீழ் நமது நகரம் மற்றும் கிராமத்தில் இருந்து வருவதால் அதற்கும் மேலாகத் திட்டமிடுதல் ஒரு முக்கியப் பங்கு வகிப்பதால், அங்கு நிலச்சான்றுகள் எதுவுமிருக்காது. நகரஅளவு நிர்ணயித்தல் பழமையானதும், போதுமான அளவில் கூறப் படாததும் மற்றும் ஒரு திட்டக் கருவியாக உள்ளதில் மதிப்பற்றது மாகும். மற்றபடி, '... நகரத்தின் கொள்விலை அதிகரிப்பது, அங் கிருக்கும் நிலங்கள் சுழற்சியினின்று மாற்றியமைக்கப்படும் போது கட்டப்படும் சுற்றுச் சூழலுக்கு ஒத்ததாகவும், அந்த நிலத் திற்குப் போதுமான நில மதிப்பீடுகள் மற்றும் விவசாயத்தில் உப யோகத்தால் மதிப்பற்ற தன்மையும் உருவாவதைப் பொருத்ததே. இதையே நகரத்தின் உட்பட்ட திட்டமாக நோக்குகையில், அம் மாதிரியான சான்றுகளற்ற நிலங்கள் உபயோகத்திற்குஉதவாததாக வும், காய்கறிகளைப் பயிரிடுவதற்குமே பயன்படுத்தப்படுகிறது. இங்கு தில்லியை உதாரணமாக எடுத்துக்கொண்டால், பலனளிக் காத நிலத்தினை மிகுந்த பொருட் செலவில் தோட்டமாக மாற்றியும், நல்ல வளமான நிலம் சிமெண்ட் கலவைக்கும் நிலக்கீலுக்கும் அடியில் சமனப்படுத்தப்படுகிறது'.[4]

### நில உபயோகத்தைத் திட்டமிடுதல்

நில உபயோகத்தைக் குறித்த போதிய தகவல் இல்லாத காரணத் தினால் நாம் நமது நகரங்களை எந்த ஒரு நோக்கமுமில்லாமல் வடிவமைத்துச் சுற்றுச் சூழலுடன் ஒரு போராட்டமே நடத்து கின்றோம். இது இந்தியாவிற்கு மட்டும் தனிப்பட்ட முறையில் ஏற்பட்டுள்ளதல்ல. ஏனெனில் நகரமயமாக்குதல் தனக்குள்ளேயே உலகிலுள்ள எல்லா சிறப்புமிக்க உபயோகங்களையும் விழுங்கிக் கொண்டிருக்கிறது. 1973-ஆம் ஆண்டில் ராக்பெல்லர் நிறுவனம் ஒரு தனிச் செயல்பிரிவினை நகரமயமாக்குதலின் விளைவுகளைக் குறித்து எழக்கூடிய சிக்கல்களைக் கவனிக்க வேலைக்கு அமர்த்தியது. அதன் அறிக்கையின் தலைப்பாக "நில உபயோகம் — ஒரு குடிமகனின் நகர வளர்ச்சிக் கையேடு" என்பதில் அச்செயல் மேலும் கூறியுள்ளதாவது:

> தடுத்து நிறுத்தப்படாத, துண்டாடப்படும் நகரமாக்குதல்— பண்டைக்காலந்தொட்டு வளர்ச்சியை நல்ல வாழ்க்கையுடன் ஒப்பிட்ட மதிப்புமுறை–நம்மிடையே பல வளர்ச்சியில்லாத

www.padippakam.com



சுற்றுச்சூழலை அழிக்கும் ஒரே மாதிரியான வாழ்க்கையைக் கொண்ட புறநகர் ஒன்றை உருவாக்கியுள்ளது; தெளிவற்ற நகர மையங்களையும் அதிகமாகத் திட்டமிட்டிருக்கிறது; விரிவு படுத்தப்பட்ட பூமியின் உபயோகங்களை திறமையற்ற தன்மையில் நிர்வாகம் செய்து பொதுமக்களிடம் அதிருப்தியை வளரச் செய்திருக்கிறது.

அமெரிக்காவில் பிரச்சினைகளை இந்தச் செயல்பிரிவு பின்வரும் வாக்கியங்களில் காட்டியுள்ளது.

வரலாற்றின்படி, பொதுமக்களின் எண்ணம் வளர்ச்சியினை, அதன் சுற்றுச்சூழலின் விளைவை நோக்காமல், ஆதரித்தே வந்துள்ளது. நமது இயக்கங்களும், சட்டங்களும், மிகுதியாக உருவான நேரத்தில் நமது தேசியஎண்ணம், வளர்ச்சியாக இருந்த போது, வளர்ச்சி ஒருபக்கப் பிரதிபலிப்பாகிறது... நில உரிமையாளர்கள் தங்களது விருப்பப்படி நிலச்சொத்துகள் வளர்ச்சியடைய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்களே தவிர அதுவே விஞ்ஞானத்தையோ, உயிரின வாழ்க்கைச் சூழலையோ மற்றும் கலாசாரத்தையோ பாதிப்பதாக இருப்பினும் அவர்கள் அது குறித்து வருந்துவதாகத் தெரியவில்லை.

இந்தச் செயல்பிரிவினர், கீழ்க்கண்டவாறு தங்களது பரிந்துரைகளை வழங்கியுள்ளனர்.

“மக்களைப் பாதிக்கக்கூடிய சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டுமானால் நகரங்கள் தன்னிடத்தே நிலஉபயோக முடிவினை வைத்துக்கொள்ள வேண்டும்.” இந்த அறிக்கை, மேலும் “நாம் இனியும் நல்ல சுற்றுச்சூழ்நிலையுடைய சமுதாயத்தினை அமைத்துக்கொள்ளக்கூடிய அளவிற்குப் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்கின்றோம்” என வருந்துகிறது.

அமெரிக்கா போன்ற வளரும் நாடுகளில் நகர முறையானது சுற்றுச் சூழலை ஒத்த ஒன்றாக இருக்கவேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட்ட போதிலும், அதுபோன்ற ஒருமித்த எண்ணமோ எழுச்சியோ இந்தியாவில் இல்லை என்பதைவிடக் குறிப்பாகத் திட்டமிடுதலையே தொழிலாகக் கொண்டவர்களிடமும் இல்லை எனலாம். இதன் காரணமாகத்தான் புதுதில்லிநகரின் வளர்ச்சித் திட்டம் புதுதில்லியில் 2001–ல், அதிகரித்துக்கொண்டே இருக்கும் மக்கள்தொகையைச் சமாளிப்பதற்கு மேலும் அதிகப்படியான நிலங்களை முழுதும் இதுவரை நகரமாக்கப்படாத கிராமங்களில் இருந்துதான் பெறவேண்டும் என்கிறது. சுற்றுச்சூழல் என்ற பகுதியில் இதன் காரணமாகத்தான், நிலமாக தில்லியையும் நதியாக யமுனையையும் எடுத்துரைத்தோம்.

www.padippakam.com



ஆனால் அத்திட்டத்திலும்கூட விவசாயநிலங்களைப் பறித்துக் கொண்டு கட்டுமானத் தொழிலைச் செய்வதை விவரித்தபோது இணைத்து பேசப்படவில்லை. யமுனை நதிக்கரைத் திட்டத்தில் கூட ஒருமூலையில், அதாவது மேற்கேயுள்ள ஒரு நீளமான துண்டு தவிர, மற்ற எல்லாப் பகுதிகளையும் வீடுகள் கட்டுவதற்கும் மற்றும் வளர்ச்சிப்பணிகளுக்கும் வல்லமைத் திட்டத்தில் கொடுத்து விட்டோம். இதுவே கட்டிடவேலை நதிக்கரையின் ஓரத்தில் தொடங்க வேண்டுமேயானால் இத்திட்டத்தில் சுற்றுப்புறச்சூழலுக்கு அதுவும் இதுபோன்ற எளிதில் புறத்தூண்டுதலுக்குட்பட்ட, உடனுக்குடன் மாறுபடுகிற இடத்தில் என்ன பாதுகாப்பு அளிக்க இயலும்? எனவே, இது ஒரு முன்னோடியாக நமது திட்டவல்லுனர்களின் நில உப யோகத்தில் எவ்விதம் அறுகிய அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது நமது தலைநகரின் உதாரணத்துடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நகரத்தின் வளர்ச்சி நிச்சயமாக ஒரு அழுத்தத்தை உருவாக்கினாலும் எல்லா நகர நிலங்களையும் கட்டுமான வேலைக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது, நமது சுற்றுச்சூழலுக்கு நாமே அக்கறை காட்டாமல் இருப்பதை வெளிக்காட்டுவதுடன் இம்மாதிரி விளைவுகள் ஏற்படக் காரணமாக உள்ளது.

நகரத்தின் நுண்ணிய பகுதிகளில்கூட, விவசாய நிலத்தைப் பிரித்ததன் விளைவாகத்தான் நகர வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இங்கு ஒரு பெரிய நகரச் செயல்பாட்டினை நோக்குவோமேயானால் அது சுற்றுச்சூழலுக்கு எவ்வளவு கொடூரமான முடிவுகளைத் தேடித் தருகிறது என்பதையும் நாம் அறிவோம். ஆகவே இட ஆய்வு என்பது நகருக்குள்ளேயோ அல்லது நகருக்கு வெளியிலோ மற்றும் நகரங்களுக்கு இடையிலோ சுற்றுப்புறச்சூழலுக்கு மிகவும் முக்கியமான ஒரு கருவியாகிறது. இதனை எடுத்துக்கூற மூன்று உதாரணங்கள் போதுமானதாக உள்ளது. தில்லியை தலைநகரமாகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக, எட்வர்ட் லுதன்ஸ் என்னும் நகரக் கட்டிடவியல் நிபுணர் பல இடங்களைச் சுற்றுச்சூழலைக் காரணம் காட்டி ஒதுக்கிவிட்டார். அது மட்டுமின்றி, அவர் நமது பழைமையை மிகவும் மதித்து யமுனை நதிக்கரையோரத்தே அமைந்திருந்த பல தாழ்ந்த பகுதிகளை வெள்ள காலங்களில் இவை உடைத்துவிடும் என்று சொல்லியும், இதைச் சார்ந்த குன்றின் அடிவாரங்களிலும் — ஆரவல்லி மலைத்தொடரில் அமைந்துள்ள சுற்றுச்சூழல், நகருக்கு மெருகையும் அதே நேரத்தில் அது மக்களுக்கு தாவர வளர்ச்சியை அளிக்கின்றதனால் கட்டுமான வேலையை ஏற்க முடியாது என்றும் கூறிவிட்டார். இவருக்கு அடுத்தாற்போல் வந்த சுதந்திர இந்தியாவின் அரசியல்வாதிகளும், நிர்வாகிகளும் மற்றும் கட்டிடக்கலை வல்லுநர்களும் இந்தக் குறிப்புகளை மதிக்காது கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு யமுனையின் அழகினை அழித்துவிட்டனர்.

www.padippakam.com



அவ்வப்போது மக்கள் வெள்ளத்தினால், நீர்தேக்கத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையே, உண்மையான உபயோகத்தை, திட்ட வல்லுநர்கள் புரிந்திருந்தால், சுற்றுப்புறச் சூழலைக் கருத்தில் கொண்டிருந்தால், அங்கு கட்டுமான வேலையை நிராகரித்திருப்பார்கள். அது மட்டுமின்றி அதன் கரையோரத்தில் உள்ள இயற்கையாய் அமைந்த சிறுகுளம், சதுப்புத் தாழ்நிலம், குன்றுகளின் தொடர்ச்சி, புல்வெளி மற்றும் மரங்கள் — ஊர்வன, பறப்பன போன்றவை சுற்றுச்சூழலுக்கு ஏதுவாகவும் மாற்றியமைக்க வழி விடாமலும் இருந்திருக்கும். யமுனை நதிக்கரையோரம் இருந்த இயற்கையழகை அழித்ததால் அத்துடன் தாவர சம்பந்தப்பட்ட மற்றும் விலங்கினச் சரித்திரத்தையும் கூடவே அழித்துவிட்டனர். இதன் விளைவுதான் தில்லியின் நிலப்பரப்பு வறுமையானது.

இரண்டாவது உதாரணமாக மத்திய பிரதேசத்தில் உள்ள பீதாம்பூரை எடுத்துக்கொள்வோம். மோவ் என்ற இடத்திற்கும் இந்தோருக்கும் அருகில் அமைந்துள்ள இந்த பிற்படுத்தப்பட்ட பகுதி தொழில்மயமாக்கப்பட்டதுடன், குறிப்பாகத் தானியங்கு மோட்டார் வண்டித் தொழிற்சாலைக்கு தேர்வு செய்யப்பட்டது. 6,000 ஹெக்டர்கள் கொண்ட நிலம் இதற்காக ஒதுக்கப்பெற்று தொழில் உபயோகத்திற்கு மாற்றியமைக்கப்பட்டது. புவியியல் ரீதியாகப் பார்த்தால், பீதாம்பூர் தாவர வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் அடிவாரம் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். எந்த ஒரு சிறந்த திட்டக் கணிப்பும் இக்குன்றுகளை விவசாயத்திற்காகத் தக்க வைத்துக் கொண்டிருக்கும். பதிலாக மலைச் சரிவுகள் தொழிற்கூடங்களை அமைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. மலைச்சாதியினர் பயிரிடுதலுக்குப் பயன்படுத்திய நிலம், இப்போது தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டது. மலைச்சாதி மக்கள்தொகை இதன் பிறகு அந்த வெறிச்சோடிய பள்ளத்தாக்கை விட்டே வெளியேறினர். இச்சமவெளி அவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுக்க முடியவில்லை. மேலும் இப்பகுதியில் மண்ணரிப்பும் காணப்படுகிறது. வெகு குறுகிய காலத்தே இப்பள்ளத்தாக்கு வெறிச்சோடத் துவங்கிவிட்டது. அதற்கும் மேலாக அங்கு இயல்பாக இருந்து வந்த நீரை உறிஞ்சும் சக்தியும் அழிக்கப்பட்டு இங்கு கட்டிடங்கள் வளரத் தொடங்கிவிட்டன. இப்பகுதியில் தற்போதுள்ள இயற்கை விளைவு தண்ணீர் தட்டுப்பாட்டில் முடிந்துள்ளது.

நிலத்தின் உபயோகம் மிக மோசமாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது, மூன்றாவது உதாணரமாக குஜராத் மாநிலம். பம்பாயை அடுத்துள்ள குஜராத் மாநிலத்தின் தெற்கு பாகம், மிகவும் செழுமையான

www.padippakam.com



மணற்பாங்கையும் அடர்த்தியான மழையையும் கொண்டது. இம்மாநிலத்தின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகள், தண்ணீர் தட்டுப்பாடுடைய வறண்ட பாலைவனங்கள். பழத்தோட்டங்கள், அங்காடிகள், சந்தைகள், தோட்டங்கள் மற்றும் பண்ணைகள் கொண்ட தெற்கு குஜராத் மிகப் பிரசித்தமானதும், கொய்யாப் பழங்கள், மாம்பழங்கள், சீதாப்பழங்கள் மற்றும் வாழைப்பழங் களையும், கரும்பு, காய்கறிகள், அரிசி போன்ற உபயோகமுள்ள பயிர்களையும் கொண்டதாகும். அகமதாபாத்திற்கும் லிம்ப்டிக் கும் இடையே 60 கிலோ மீட்டர் பரப்பிலுள்ள கார்பட்டி (Khar Patti of the Bhal) எனப்படும் இடம், தெற்கு குஜராத்திற்கு முற்றிலும் வேறுபாடுடையதாக உப்புத்தன்மையுடைய நிலங்களைக் கொண்டதாகவும், ஒரு துண்டுப்புல் கூட முளைக்க முடியாத நிலையில் விவசாயத்திற்கும், கானகத்திற்கும் மற்றும் தாவர வளர்ச்சிக்கும் அருகதையற்றதாகவுமுள்ளது. எந்த ஒரு அறிவுள்ள திட்ட நிபுணரும் இந்தச் சூழலைத் தொழிற்சாலைக்கான மிகச் சிறந்த இட — நகர நடவடிக்கைகளுக்குத் தேர்ந்தெடுத்திருப்பார். தெற்கு குஜராத்தை விவசாயம் மற்றும் தாவரவியல் பண்ணையாக மாற்றியிருப்பார். ஆனால், இதுவே பம்பாய்க்கு அருகாமையில் இருப்பதால், அங்குள்ள தொழில் மற்றும் நகர நடவடிக்கைகள், ஒரு கழுத்து குறுகிய குடுவைக்கு அடியில் உள்ள அழுக்கைப் போன்று, இங்கும் வியாபித்துள்ளது. இதனால் இதைச் சுற்றியுள்ள நகரங் களான சூரத், பல்சார், நவாசரி மற்றும் பாருச் போன்ற இடங் களுக்கு அபாயம் காற்று மற்றும் நீரின் மூலமாகப் பரவுகிறது. மேலும் இங்குள்ள இயல்பான பாதாளச் சாக்கடைகள் அழிக்கப் பட்டுள்ளன. இதுவே குஜராத் ஒரு சிறந்த வாய்ப்பினை, தனது திட்ட நிபுணர்களின் நில உபயோகம் குறித்த தவறான சிந்தனை யின் காரணமாக இழந்துவிட்டதற்கு எடுத்துக்ககாட்டாக அமை கிறது. மேலும் இது கார்பட்டியின் தரிசல் நிலங்கள் தொழிற்சாலை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டும், தெற்கு குஜராத்தில் செழுமை இயற்கையின் உபயோகத்திற்கு ஒத்தாற்போல் ஒருங் கிணைக்கப் பெறும் வாய்ப்பையும் இழந்துள்ளது.

ஒரு நகரம் எவ்வளவு பெரியதாக உள்ளதோ அதற்கேற்ப அதன் நில வேட்கையும் ஆக்கிரமிப்பும் இருக்கிறது. ஒரு நகர மையம் நிர்வகிக்கக் கூடிய அளவு இருந்தால் அது தன்னிடத்தே குறைவான நிலை தேவையையும் மற்றும் உள்ள நிலப்பரப்பினைப் பிற்காலத்தில் வளர்ச்சிக்குத் திட்டமிடவும் ஏதுவாகிறது. கஜீரா ஹோவும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளும், ஒரு சிறந்த நிலப்பரப் பாகக் கருதப்படுவதால், முக்கியமான நகரமைப்பையும் ஏழு கிராமங்களையும் கொண்டதாகவும் உள்ளது. 1971-ஆம் ஆண் டில் இதன் மக்கள்தொகை 14,000. பிறகு நிலையாக அதிகரித்து

www.padippakam.com



1981-ஆம் ஆண்டில் 21,000 ஆனது. இச்சிறந்த கஜுராஹோ தன்னிடத்தே 10,255 ஹெக்டேர் நிலப்பரப்பையும் அதில் 89% இன்றும் விவசாய உபயோகத்திற்கும் அதுசார்ந்த நடவடிக்கை களுக்கும் அளித்து வருகிறது. இங்கு நிலம் ஆட்கொண்டுள்ள விகிதம் ஐந்து முதல் ஆறு மனிதர்களுக்கு ஒரு ஹெக்டேராகவும், வளர்ச்சி யடைந்த மொத்தப் பரப்பில் ஒரு ஹெக்டேருக்கு 70 ஆட்களுமாக உள்ளது. இதற்கு ஒப்பாக உஜ்ஜயினியின் மக்கள்தொகை அடர்த் தியை ஆய்கையில் ஒரு ஹெக்டேருக்கு 211 ஆட்களைக் கொண்ட தாக உள்ளது. உஜ்ஜயினி ஒரு பெருநகரம். ஆகவேதான் இன்றும் ஒரு நகரமயமாக்குவதற்கு நிலங்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது அதன் அடிப்படைத் தேவையாக நில உபயோகம் விவசாயத்தைச் சார்ந்ததாகவும் அதே நேரத்தில் அந்நிலத்திற்குக் கொள்விலை குறைவாக இருக்க வேண்டியதாகவும் திட்ட வல்லுநர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள பெருநகரங்களின் நிலங்களை நகர உபயோகத்திற்கே முழுதுமாக அர்ப்பணிக்க வேண்டிய கட்டாய மான சூழ்நிலை, சிறிய நகரங்களில் மிகவும் குறைவாகத்தான் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் அங்கெல்லாம் பெருகியிருக்கும் தாவரம் சம்பந்தப்பட்ட நிலங்கள் சுற்றுச்சூழலை கட்டிக்காப்பதே. திறந்த வெளியாக உள்ள நிலங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை உறிஞ்சிக் கொள்கிறது. குறைந்த மக்கள் குவிப்பு நல்ல திட்டமாகும். மற்றபடி கழிவுகளை அகற்றும் பணிகளை எளிதாக்குகிறது. மக்கள் நெரிசல் குறைகிறது. நீர் நிலைகள் பாது காக்கப்படுகிறது. ஒரு பெரிய நகரம் தன்னிடமுள்ள விவசாய நிலத்தைக் குறைப்பதும், சிறிய விவசாயிகளை வேலை இழக்கச் செய்வதும் மற்றும் திறனற்ற வேலைக்கு அவர்களை உந்தவும் செய் கிறது. இதன் காரணமாக சுயமாக-வேலையிலிருந்த ஒரு விவசாயி, நில உரிமையிலிருந்து விவசாய தொழிலைக் கைவிட்டு ஒருவீடு கூடத் தனதாக்க முடியாத ஒரு நிலைக்கு — நகரக் குடிசையிலும் சுகாதாரமற்ற சூழ்நிலைகளிலும் வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாகின்றான். மேலும், கிராம நிலத்தை பேராவலுடன் விழுங்கு கின்ற பெரிய நகரம் புழுக்கத்தையும், வாழ்க்கைத் தரக்குறைவையும் கண்முன் கொண்டு வருகிறது.

இதையே வேறுவிதமாகச் சொன்னால், நிலம் குடியிருப்புக் கும் வாழ்விற்கும் தேவையான ஒன்றாக இருப்பதால், சுற்றுப்புறச் சூழலின் முதன்மையான ஒன்றாகவும் உள்ளது. குடியிருப்பின் நிலஅளவு நகரமாக்குதலுக்கு ஒரு காரணியாயமைவதால் நிர்வகிக்கத் தேவையான விகிதம் முடிவு செய்யப்பெற வேண்டும். நகரத் திட்ட மிடுவோர் இந்தக் கருத்துக்களில் பொதுவாக நகர அளவின்

www.padippakam.com



வரைமுறைகளில் கேள்வியில் பாரபட்சமாகவே இருந்து வந்துள்ளனர். ஒரு சாரார் முக்கியமாக மேற்கத்தியத் திட்ட வல்லுநர்களினால் உந்தப் பெற்று, பொருளாதார மற்றும் நகர திட்டமிடலில் பொது அறிவினை உபயோகித்தல் வரையறையற்ற நகர வளர்ச்சியினைத் தடை செய்யப் பேருதவியாக இருக்கும் என விவாதிக்கின்றனர். இந்த விவாதம் பொருளாதாரக் குழுமத்தின் கூட்டுத்தொகை மற்றும் குடும்பநல முறையாட்சியினைச் சார்ந்ததாகும். அதுவே சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயத்தில் பெருந்தொகையின் மூலம் பெறப்படவேண்டிய குடும்ப நல முறையாட்சியாக இருக்கக்கூடாது; ஏனென்றால் நாம் இன்னும் நம்மை அல்லது நமது திறமையை சுற்றுச்சூழலின் விரிவுக்கு வளர்த்துக் கொள்ளவில்லையென்பதே காரணம். நிலஉபயோகத் திட்டத்தை இந்தியா மற்றும் வேறு இடங்களிலும் போதுமான அளவிற்கு எவ்வகையான நிலத்தினை நகர உபயோகத்திற்காக மாற்றியமைக்கலாம் என்ற விவரமற்ற நிலையிலிருப்பதாலும், அவ்வாறு செயல்படுவதற்கான செலவினை அறியாதிருப்பதாலும், நிலஉபயோகத் திட்டமும் — நகர அளவும் முழுமையாக சுற்றுச்சுழலையும், அதன் மதிப்பையும் பொருட்படுத்தாமல் விட்டுவிடுகின்றது.

## நிலம், நகர அளவு மற்றும் செயல்பாடு

நிலம், நகர அளவு, சரியான இடம் மற்றும் ஆட்சியுரிமையைப் பன்முகப்படுத்துதல் முதலியன செயல்பாட்டுக்கு முக்கிய உதவிக் கருக்கள். நமது இந்திய அனுபவம் என்னவென்றால், விவசாயம் நன்கு வளர்ச்சி அடைந்துள்ள இடத்தில் விவசாய அதிகரிப்பும் — சந்தைகள் மற்றும் தொண்டூழியம் போன்றவை நகரத்தின் முக்கியச் செயல்பாடுகளாக உள்ளதால் அங்கே மண்டி (Mandi) எனப்படும் கிராமங்கள் நிறுவப்படுகின்றன. பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசத்தின் வடக்கு மாவட்டங்கள் ஆகியவை பெருத்த விவசாயநிலங்களில் விளையும் சந்தைப் பொருட்களை கிராமங்களுக்கு அளிக்கின்றன. ஏறத்தாழ எல்லா மண்டிக் கிராமங்களும் மற்ற கிராமங்களின் வியாபாரத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலும், முக்கியத் தொடர்புள்ள விவசாய வேலைகளிலிருந்து வணிகப் பொருட்களையும்—போக்குவரத்தையும் மற்றும் சேவை செய்வதையும் தன்னிடம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இருத்தல் வேண்டும். ஆகவே அம்மண்டிக் கிராமத்திலிருந்து மற்ற கிராமங்களுக்குச் செல்லும் பராமரிப்புப் பணிகளான கல்வி, உடலாரோக்கியம், கடன் மற்றும் நுகர்பொருள்களின் சில்லரை வியாபாரம் போன்றவற்றில் தொடர்புடைய வலிவான உறுப்பாக உள்ளது. சாலைமுறைகளும் வெகுவாக

படிப்பகம்

www.padippakam.com



வளர்ச்சியடைந்துள்ளதற்குக் காரணம் சாமான்களின் சந்தைப் போக்குவரத்தேயாகும். உதாரணமாக, பஞ்சாபில் விவசாய விளைபொருள் வியாபாரக்குழு, சட்டத்தின் உதவிகொண்டு, ஒவ்வொரு மண்டியிலிருந்தும் ஒருசிறு தொகையை அதனைச் சார்ந்த கிராமங்களின் சாலைகள் வளர்ச்சிக்காக ஒதுக்கி வைத்து விடுகிறது. இதனை வியாபாரிகள் ஆதரிப்பதற்கான முக்கிய காரணம் சாலைகளின் வளர்ச்சி அவர்களது பொருட்களின் போக்குவரத்துக்கும்—அதிக இலாபத்திற்கும் துணையாயிருப்பதே.

இன்னும் சிறிது கோர்வையாகப் படிநிலை அமைப்பில் இதனையே பார்த்தால் இன்னும் சில பெரியநகரங்களில் பொருள் தயாரிப்பு மையமும்—போக்குவரத்தும் ஒருங்கிணைந்துள்ளது புலப்படும். சிறிய கிராமத்திற்கும் சிறுநகரத்திற்கும் தொடர்புள்ளதால், குடியிருப்புகளை ஈர்த்து கவரக்கூடிய தன்மை இவற்றினிடையே காணப்படுகிறது. இங்கு இல்லாமற்போவது பெருநகரங்களே. எனவே பொதுவாக வளர்ச்சியும் விவசாயம் போன்ற வெற்றிகரமானதாக உள்ளதால் விவசாயத்திற்கு வசப்பட்ட நிலம் மிகஅதிகமான மதிப்புடைய ஒன்றாகிறது. ஆகவே நகர ஆக்கிரமிப்புக்களை, இக்கிராம விவசாயிகள் தங்களது பசுமையான நிலத்தில் விவசாயத்துக்கு அதிக வாய்ப்பிருப்பதால், முற்றிலுமாக எதிர்க்கிறார்கள். இங்கும் நில உபயோகம் சரிவரத் திட்டமிடப் படுவதில்லையாயினும் பொருளாதார உண்மைநிலை சுற்றுச் சூழலுடன் பொருந்துவதால் நிலஉபயோகத்தின் பயன்கள் நகரத்தைப் போன்றல்லாமல் தெளிவாகப் புலப்படுகின்றன.

இங்கு மட்டும் நல்லதோர் திட்டம் தீட்டினால் விவசாயத்தினால் செழுமையான பகுதிகள் நமது நகரங்களிலும் இல்லாத சுற்றுச்சூழலை ஏற்படுத்த முடியும்.

ஓர் உதாரணம் இக்கூற்றை எடுத்துரைக்கும். சம்பல் பகுதியில் மொரீனா என்பது தலையாய மாவட்டமாகும். ஒருங்கிணைந்த பாசன முறை இங்கு உண்டு. இதன் மக்கள்தொகை 50,000 முதல் 1,00,000-க்கும் இடைப்பட்டதே. மொரீனாவின் வளர்ச்சி விகிதம் 1961 முதல் 71 வரையிலான பத்தாண்டில் 64.85 சதவீதமும்; 1971–81 ஆண்டுகளில் அதுவே 55.60 சதவீதமாகும். மொரீனா இரயில் இருப்புப்பாதை சந்திப்புக்கு அருகாமையிலும் தேசீய நெடுஞ்சாலையினால் இணைக்கப்பெற்றதுமாகும். இந்தச் சிறுநகரம் வளர்ச்சியடைந்துள்ளதாகவும், இன்னும் அதிவேகமாக வளர வாய்ப்புள்ளதாகவும் தோற்றமளிக்கிறது. இச்சிறு நகரிலிருந்து சிறிது தொலைவில் தியோரி என்றொரு கிராமம் குன்வாரி எனப்படும் நதிக்கு அருகாமையில் உள்ளது. எந்த ஒருநேர்மையான நகரத் திட்டமும் இந்த மொரீனாவைச் சுற்றியுள்ள இடங்களை விவசாயத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com



முன்பதிவு செய்வதோடு நகரநடவடிக்கைகளுக்கு தியோரியையும் தயார்செய்யும். ஆனால் அங்கு அம்மாதிரியான திட்டமிடப்படுதல் எதுவும் இடம்பெறாததனால் அந்தச் சிறுநகரம் செழுமையான, மதிப்பற்ற பாசனநிலமாக விரிவடைந்தது. இதன் காரணமாக நிலத்தின் விலை மிகவும் அதிகப்பட்டது. அதற்கு அருகாமையில் உள்ள இடங்களில் விவசாயத்தை இது குன்றிவிடச் செய்துவிட்டது. இம்மாதிரியான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விவசாய நிலங்களில்கூட, நமது திட்டங்களின் தோல்வி மிகமோசமான சுற்றுச்சூழலை ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம் சென்று பார்த்தால் தேவையான மூலதனமுள்ள தொழிற்சாலைகள் அதன் மூலப்பொருட்கள் கிடைக்கும் இடத்துக்கு அருகாமையில் உள்ளது புலப்படும். இங்கு நாம் தாது மற்றும் கனிமப் பொருட்களைக்கொண்ட அதாவது எஃகு, அலுமினியம், சிமெண்ட் மற்றும் பல தொழிற்சாலைகளை முக்கியமாகக் குறிப்பிடவேண்டியுள்ளது. இத்தொழிற்சாலைகள் உள்ள இடங்கள் அனைத்தும் பிற்படுத்தப்பட்ட, சிறிய கிராமக்குடியிருப்புக்களைக் கொண்ட, மலைவாழ் மக்களாகவும்—ஒரே தொழிலைச் செய்பவர்களாகவும் உள்ள மக்கள்தொகையைக் கொண்டதாகவும் உள்ளது. ஒரு பெரிய எஃகுத் தொழிற்சாலை, உதாரணமாக, ஆயிரக்கணக்கான பணியாட்களைக் கொண்டதாக உருவாகி, அதனிடையில் திடீரென ஒரு பெரும் நகரம் ஒன்றும் உருவெடுத்தது என்று மனதில் கொள்வோம். உதாரணமாக, பிலாஸ்பூரை அடுத்த கோர்பா மாவட்டம் 800 மக்களை மட்டுமே கொண்ட சிறுகிராமமாக 1971-ஆம் ஆண்டில் தொடங்கி இன்று 1991-இல் 1,24,365 மக்களைக் கொண்டதோர் நகரமாக வளர்ந்துள்ளது. இவையனைத்தும் அலுமினியத்தையும் மற்றும் வெப்பச் சக்தி தயாரிப்பையும் அடிப்படையாகக்கொண்டது எனக் கூறுகின்றனர். இவ்விடத்திற்கு இவ்வளவு வேகமான வளர்ச்சி, பொருளாதார மாற்றத்தை உண்டாக்கும் என யாரொருவரும் மனதில் கருதலாம். ஆனால் உண்மையில் நடப்பது என்னவென்றால் கோர்பா இப்பொழுது சுற்றுச்சூழல் பாதிப்பில் சிக்கித்தவிக்கிறது என்றால் அது மிகையாகாது. அங்கு நிலக்கரிச் சுரங்கங்களினால் காடுகளும், நிலவெளிகளும் அழிந்து, நீர் நிலைகள் மாசுபட்டு ஹஸ்தோ நதி உட்பட, கிராமத்து மக்களை நிலமின்றி நிலைகுலையச் செய்துவிட்டது. கோர்பாவின் இந்நிகழ்ச்சிகள் தொழிற்சாலை முன்னேற்றம் என்ற செயற்பெயர் கொண்டதாயினும், நடவடிக்கைகளின் வீச்சு நிச்சயமாக சுற்றுச் சூழலை அழித்துவிட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மிகப்பெரிய நோயாளி யாரென்றால் அது நிலமே. மேலும் இந்நிலையில், சீரான சந்தை வளர்ச்சியில் விவசாயத்திற்கோ அல்லது அதுசார்ந்த நடவடிக்கைகளுக்கோ

படிப்பகம்

www.padippakam.com



இடமளித்தலையோ அல்லது பொருளாதாரரீதியில் தொழிலுக்கு மூலதனமளிப்பது போல விவசாயத்திற்கு–முக்கியத்துவமளிப்பதையும் கிராமத்திற்கும் மூலதனமளித்து சுற்றுச்சூழலை கவனிப்பதற்கும் எவ்வித திட்டமோ நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை.

அங்கிருந்து பெருநகரங்களுக்கும் மகாநகரங்களுக்கும் சென்றோமேயானால் அதன் அளவு மற்றும் செயல்முறைகள், நிலங்களைப் பொறுத்த வரையில், முக்கியமான ஒன்றாக உள்ளது. இந்தியாவில், சீனா போன்ற மற்ற நாடுகளைப் போன்ற அளவிற்கு இல்லையென்றாலும், குவிப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படுவது நன்கு தெரிகிறது. இந்தியாவின் 1991-ஆம் ஆண்டின் மொத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்புப்படி முதல் வகுப்பு மற்றும் பெரு நகரங்களின் பங்கு 65 சதவீதமாகவும், இதில் பெரு நகரங்களின் பங்கு மட்டும் ஏறத்தாழ 35 சதவீதமாகவும் உள்ளது. மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 35 சதவீதம் தொடர்ந்து சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில்தான் வசித்துவருகின்றது. அதுவே சீனாவில் 1953-ஆம் ஆண்டில் 102 முதல்வகுப்பு நகரங்களும் மற்றும் ஒன்பது பெருநகரங்களுமாக இருந்தன.[5] நகர மக்கள்தொகையில் சிறுநகரங்கள் 23 சதவீதமும், நடுத்தர நகரங்கள் 15 சதவீதமும், பெருநகரங்கள் 62 சதவீதமும் உள்ளன. இதுவே 1982-ஆம் ஆண்டில் இதன் நிலைமை முற்றிலும் மாறுபட்டுவிட்டது. சீனாவின் முதல் வகுப்பு நகரங்கள் 261-ஆகவும் பெருநகரங்கள் 46-ஆகவும் வளர்ந்துவிட்டது. நகரமக்கள் தொகையில் பெருநகரங்கள் 75 சதவீதமாகவும், நடுத்தர நகரங்கள் 18 சதவீதமாகவும், சிறுகிராமங்கள் ஏழு சதவீதம் மட்டுமே என்ற நிலையில் மாறுபட்டுள்ளது.

இந்தியா மற்றும் சீனா இவ்விரு நாடுகள் நிலையினை ஒப்பிட்டுப் பார்த்தோமானால், சீனாவில் விவசாயமும் அது சார்ந்த நடவடிக்கை உடைய சிறுகிராமங்களும், நடுத்தர நகரங்களும் தங்களிடையே படிப்படியான ஒத்துழைப்பை மிகவும் குறைத்துக் கொண்டும், இந்தியாவில் இதுவே இன்னமும் பொருளாதாரத்திற்கு முன்னோடியாகவும் இருந்து வருவதைக் காண்கிறோம். இக்கூற்றினை உறுதிப்படுத்துவதுபோல இந்தியாவில் பெருநகரங்களின் வளர்ச்சி குன்றியும் அதே சமயம் இடைநிலையிலுள்ள பட்டணங்களில் வளர்ச்சி மிகஅதிகமாகவும் உள்ளது. 1971–81 ஆண்டின் கணக்குப்படி 600 நகரமையங்களில் வளர்ச்சிவிகிதம் தேசிய சராசரியான 46 சதவீதத்தைவிடக் கூடியுள்ளது. இவற்றுள் நான்கு பெருநகரங்கள். 13 நகரங்களில் இலக்குக்கு அதிகமான 50 இலட்சம் மக்கள்தொகையும், மற்றவை சிறிய மற்றும் நடுத்தர நகரங்களிலுமாகக் காட்சியளிக்கின்றன.

www.padippakam.com



இந்தியாவின் நகர நிலையிலிருந்து இரண்டு முடிவுகள் வெளி வருகின்றன. முதலாவதாக, பெருநகரங்கள் தொடர்ந்து தங்களது மக்கள்தொகைப் பங்கை அளித்துவரும். முதல்வகுப்பு நகரங்கள் அதிகரித்தும் மக்கள்தொகை அதிகரித்தும் காணப்படும். அதே நேரத்தில் சிறிய மற்றும் நடுத்தர கிராமப்புறத்தின் வளர்ச்சி யின் காரணமாக இந்தியக்குடியிருப்பு மற்றும் குடிபெயர்ப்பு நிலையில் விரும்பத்தக்கதோர் முன்னேற்றமும் மாற்றமும் ஏற்படும். இந்நிலையே நகர வளர்ச்சிக்குக் குடியிருப்பு சமத்துவத்தை அளிப் பதால், சீனா போன்றில்லாமல் பெருநகரங்களும் சிறு நகரங்களும் நில உபயோகத்தில் போட்டி மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள ஏதுவாகிறதால் சுற்றுச்சூழல் பாதிப்படையும்.

அதே நேரத்தில் இப்போதுள்ள சூழல் திட்டஎண்ணங்களுக்கு ஒருநிலையாய தன்மையை உண்டாக்க உதவுவதாக இல்லை. நகரங்கள் ஸ்திரத்தன்மையை எட்டமுடியாததால் கிராம—நகர குடிபெயர்ப்பு வேட்கையைத் தணிக்க முடியவில்லை. மக்கள் அதிக அளவு குடி யேறும் பிரச்சினையற்ற சிறுநகரங்கள் வளர்ச்சியினை, முதலாவதாக தனது இருப்புள்ள நிலங்களின் சுழற்சியின்மூலமும், பிறகு நிதான மாக அதன் வெளிப்புறங்களின் வாயிலாக—செழுமையற்ற அல்லது விவசாயத்திற்குப் பயன்படுத்தாத நிலங்களின் மூலம் கையாள லாம். குடிபெயர்ப்பினை அதிகமாகக் கொண்ட பெரியநகரங்கள், அதுவும் தனது திட்டத்தை நிலங்களின் மூலமாக மாற்றியமைக்க நேரமற்ற நகரங்கள், பசுமையான நிலங்களில், மக்கள் ஆக்கிரமிப் பின்மூலம் குடியேறுவதனால், இந்த பிரச்சினைக்குள்ளாகின்றன. இம்மாதிரியான வளர்ச்சி, திட்டமிடப்படாத வகையில் செழுமை யான நிலத்தினைக் கட்டிடமாக்குவதும் சுற்றுச்சூழல், தண்ணீர் வசதி முதலிய இயற்கையான தாவரச் சூழ்நிலைக்கு ஊறுவிளை விக்கும்வண்ணமும் அமைகிறது. உதாரணமாக, பம்பாயிலுள்ள தாராவி என்னும் குடிசைப் பகுதி தாழ்ந்த உவர் நிலப்பகுதியாக வும்—சதுப்புநிலமாகவும் உள்ளதால், தாவரவகைகளுக்கு மோசமான சூழ்நிலையினை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் நிலத்துக்கும் — நீர்த்தேக்கங்களுக்கும் இயல்பான தன்மைகளை அழித்து மாசுபடுத்தி விட்டது. மக்கள் குவிப்புதான் இதற்குக் காரணம். அவர்களுக்கு மாற்று நிலங்களை அதிகாரிகளால் வழங்க இயலாததுதான் முக் கியமான கூற்றுமாகும். பெங்களூரிலும், ஹைதராபாத்திலும், தில்லியிலும், சென்னை மற்றும் அகமதாபாத்திலும் இதே நிலைமை நிலவிவருகின்றது. இவை சில உதாரணங்களே. இவை எல்லாவற்றி லும் முக்கியகாரணியாக இருப்பது நகரஅளவே. எனவே, நிலத் தினைத் தாவர அழிப்பிலிருந்தும் சுற்றுப்புறச் சூழல் சிதைவிலிருந்தும்

www.padippakam.com



பாதுகாக்கவேண்டுமானால் சுற்றுப்புற விழிப்புணர்வுடைய திட்ட வல்லுநர் நகரஅளவைக் கருத்தில்கொண்டு தனது முழுநேரத்தை இதற்காகச் செலவிடவேண்டும்.

### மண்டல அளவிலான திட்டங்கள்

நிலம் ஒரு முக்கியமான சுற்றுச்சூழல் காரணியாக உள்ளபடியால், ஒரு நகரம் முதலாவதாக அதன் நிலப்பகுதி அழுத்தத்தையும், இரண்டாவதாக நகருக்குள் அதன் நிலங்கள் எவ்வாறு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கவனித்தல் வேண்டும். நிலப்பகுதி எவ்வாறு கவனமாகத் திட்டமிடப்படுகிறதோ அதைப்பொறுத்துத்தான் அந்நகரத்திலுள்ள மற்ற நகர உபயோகங்களும், தொழிற்சாலை உபயோகங்களும், நகர்சாரா உபயோகங்களும் மற்றும் விவசாயப் பயன்பாடுகளும் இடம்பெறும். ஆகவே மண்டல அளவிலான திட்டமிடல் முற்காலத்திலிருந்தது போன்றில்லாமல் சுற்றுச்சூழலுக்கு மிகவும் ஒத்ததாக இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி விவசாயத்திற்கென்று திட்டமிடப்பட்டுஅங்கு விவசாய சம்பந்தப்பட்ட செயல்களோ அல்லது சந்தை ஊக்குவித்தலோ மற்றும் பிற நகரச் செயல்பாடுகளோ தொடர்ந்து இருந்து வரலாம். நாம் அதனை எவ்வாறு விவரித்தோம் அல்லது எதிர்பார்க்கிறோம் என்பது முக்கியமான ஒன்றாகயில்லாமல் ஒரு நகருக்குத் தேவையான மொத்த நிலப்பரப்பு, நீர்நிலைகள், நீர்ப்பாசனங்கள், இயற்கையான நிலவளர்ச்சி, காடுகள், மேய்ச்சலுக்கான பசும்புல் தரைகள், தாவரவியலுக்கு உதவாத தரிசுநிலங்கள், கனிம மற்றும் தாதுப்பொருட்களுக்கு உதவக்கூடிய நிலங்கள் பயிரிடும் நிலங்கள், கட்டிட அமைப்புக்கு ஏற்ற நிலங்கள் உள்ளனவா என நோக்குதல் வேண்டும். இதிலும் கடைசியாகக் கூறிய நடவடிக்கை தரிசு நிலங்களை தன்வயப்படுத்தும் தன்மை இன்று மனிதக்குறுக்கீட்டின் காரணமாக தாவர ஜீவிகளின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துவது. பிரேசர் ரீகி தனது கூற்றில் இதை அழகாகக் கூறியுள்ளார்: "மனிதன், மற்ற ஜீவராசிகளுக்கு ஈடாகத் தன்னை எந்தநிலைக்கும் மாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி மட்டும் பெற்றவனல்ல; தனது சுற்றுச்சூழலையே மொத்தமாக மாற்றக்கூடிய நுண்ணறிவு பெற்றவனாகவும் உள்ளான்".

ஆகவே மனித நுண்ணறிவானது தனது சுற்றுப்புறத்தினை இயற்கையாக அமைத்துக்கொள்ளத்தக்க விதத்தில் திட்டமிடப் பயன்படுதல்வேண்டும் என்பதே நிலவல்லுநர்களது கோரிக்கையாக உள்ளது.ஆகவே மண்டல அணுகுமுறையில் நிலம் எவ்விதம் உபயோகப்படுத்தப்படுகிறது என்பதும் கருத்தில்கொள்ளவேண்டிய

www.padippakam.com



செயல்முடிவுகளும் திட்டமிடலின் முக்கிய அம்சமாக விளங்கு கின்றன. எந்த ஒரு குடியிருப்பும் தனித்த ஒரு தீபகற்பமாகாது. எனவே, அதன் வளர்ச்சியானது நிலப்பரப்பில் காடுகளை அழிப்பதோ, நீர்நிலைகளை மாசுபடுத்துதலோ, சுரங்கங்களினால் நிலங்களை அழிப்பதோ அல்லது விவசாயநிலங்களில் கட்டிடம் கட்டுவதோ நிலப்பரப்பில் சுற்றுச்சூழல் பாதிப்பை உண்டாக்குவதோ அல்ல. குடியிருப்புகள் தாவரவளர்ச்சியினை பாதிக்காத வகையில் வளர்ச்சி யடையச்செய்தலே திட்டமிடுதலை நாம் சரிவரப் புரிந்து கொண்டதற்குச் சான்றாக அமையும். இந்தியாவில் இதற்கான நகர மற்றும் நகர்ப்புற சட்டதிட்டங்கள் பல இருந்தும் நாம் அவற்றை கடைப்பிடிக்காததே நமது திட்டத்தோல்விக்கு முக்கியமான காரண மாகும். மேலும் நமது தேசிய மண்டல நிலைத்திட்டமிடுதல் தில் லியை மையமாகக்கொண்டு அது போன்றதொரு வளர்ச்சியையே மற்ற நகரங்களும்கொள்ளுதல் வேண்டும் என்பதோ அல்லது மற்ற நகர மையங்களில் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தினால் தில்லியிலும் மக்கள்தொகை நிர்வகிக்கக்கூடிய அளவிற்கு தானா கவே குறைந்துவிடும் எனப்படும் வாதமோ ஏற்கத்தக்கதாக இல்லை. இன்னமும் நாம் உண்மையான சோதனைக்கு ஏற்றுக்கொள்ளப் பட வேண்டிய மண்டலப் பகுதியையோ அல்லது எவ்வகை யான நிலஉபயோகம் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்ததாக அமையும் என்பதையோ சரிவரத் தெரிந்துகொள்ளவில்லை. அதன் விளைவு தான் காசியாபாத், நோய்டா, சோனேபட் பகுதிகளைச் சுற்றியுள்ள நல்ல விவசாயநிலங்கள் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு உரு மாறியிருப்பது. மேலுமொரு எடுத்துக்காட்டு ஹிந்தான் பள்ளத்தாக்கு. இப்பகுதியிலுள்ள பாதாளச் சாக்கடைகள் பிரச்சினைகளாக உரு மாறியுள்ளது. அடிப்படைநிலையிலான உபயோகத்தைக்கூடத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக இன்னமும் நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது இதன்மூலம் புலப்படுகிறது.

இடைநிலையிலிருந்து நகரின் உட்பகுதிகளுக்குச் செல்வோமே யானால், நம் கண்களுக்குத் தென்படுவது நிலமும் அதன் சுற்றுச் சூழலின் முக்கியத்துவமும் அறியாதிருக்கும் நிலையே. நமது பழைய குடியிருப்புகள் மிகஅதிகமான, நகர எல்லைக்குட்பட்ட நடவடிக்கைகளை மையமாகக் கொண்டிருந்தது. அப்பொழுது நமது பண்டைய நகரங்களில் பாதுகாப்பும், தற்காப்பும் முக்கிய மான ஒன்றாக இருந்துவந்தது என்றாலும், ஒரு கிராமத்தில் எவ்வாறு எல்லாநடவடிக்கைகளும் விவசாயத்தைச் சார்ந்ததாக உள்ளதோ, அதேபோன்று நகரத்தில் இடைக்காலத்தில் பொருளாதாரமும் அதுசார்ந்த நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெற்றன. இன்றும் பழங்காலத்தைப்போன்றே செழுமையான நிலங்களைப் பாது காக்க வேண்டிய அவசியத்தை நகரத்திட்டமிடுதலில் முக்கியக்

www.padippakam.com



கூறாகக் கருதலாம். வரலாற்றின் இடைநிலைக் காலத்தில் இந்திய நகரங்கள் தங்களிடையே பண்ணைகளையும் பழத்தோட்டங்களையும் மற்றும் பால் பண்ணைகளையும் மேலும் பசுமையான அல்லது செழுமையான நிலங்களின்மூலம் கட்டங்களின் ஆக்கிரமிப்பு ஏற்படாமலும் பாதுகாத்துவந்தன. இன்றும் கற்களால் கட்டப்பட்ட நகரமான தில்லியின் அடர்த்தி ஏறத்தாழ ஹெக்டேருக்கு 2000 மக்களைக்கொண்டதாகவும், தற்போதுள்ள அடர்த்திநிலை செயல்திட்டத்தின்படி ஹெக்டேருக்கு 200 முதல் 600 மக்களை இதன்இதர பாகங்களில் மட்டுமே கொண்டதாகவும் உள்ளது. அங்கு வாழ்க்கைத்தரம் கவனிக்கப்படவேண்டியதாக உள்ளது. அடர்த்தியாகக் கட்டப்பட்ட பகுதிகளில் மக்கள்தொகையின் காரணமாக மட்டும் இல்லாமல் சுற்றுச்சூழலைக் கருத்தில்கொண்டாலும் மிக அவசியமாக உள்ளது. ஏனென்றால் இன்னமும் அங்குள்ள 25 சதவீத வீடுகளில் வடிகால் வசதியில்லை. 50 சதவீத வீடுகளில் சரியான கழிவகற்றும் வசதிகள் இல்லை. அங்கு எவ்வளவு நெரிசல் இருந்தாலும், அதன் காரணமாகக் குறைபாடுகள் எவ்வளவு இருந்தாலும், நகரைச் சுற்றிலும், அதாவது கரோல்பாக் பகுதியோ அல்லது ஷாலிமார் பகுதியாயினும், அவற்றைச் சுற்றியுள்ள பழத்தோட்டங்களும்–பண்ணைகளும், அதனைச் சுற்றியுள்ள நிலங்களும் கட்டட வேலைப்பாடுகளுக்கு உகந்ததாக இருக்கின்றது. ஆனால் இவற்றில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்நிலங்கள் விவசாயத்திற்கு உகந்ததல்ல என்று முடிவு செய்ததற்குப் பின்னரே கட்டடவேலைக்கு எடுக்கப்பட்டது. தற்போது எல்லா பண்ணைநிலங்களும்–பழத்தோட்டங்களும் நகரத்தின் உபயோகத்திற்குத் திசைதிருப்பப்பட்டுவிட்டது. ஆகவே, புதுதில்லி, இப்போது சுவாசிப்பதற்கு நுரையீரல் இல்லாத நிலையாக, நெரிசலுக்கிடையே வாழ்க்கையானது வாழ்வதற்கு உகந்ததாக இல்லாமலிருக்கிறது. முன்பு தில்லி இவ்வாறு இருக்கவில்லை என்பது உண்மை.

## குறிப்புகள்

1. தேசிய நகரமயமாக்கும் குழு (தே.ந.கு) அறிக்கை, பாகம்1.
2. மேலது பாகம் 1, அத்தியாயம் 1.
3. மேலது 1988–ஆம் ஆண்டு, பாகம் 2, பிரிவு 3, அத்தியாயம் 6.
4. மேலது.
5. இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் முதல்வகுப்பாகக் கருதப்படும் 100,000-க்கும் மேலான மக்கள்தொகை கொண்ட நகரம் மற்றும் பத்து இலட்சத்திற்கும் மேலான மக்கள்தொகை கொண்ட பெருநகரமும் பயன்படுத்தப்பட்டன.

www.padippakam.com

# 3

# பராமரிப்புகள்

நிலமானது குடியிருப்புக்கு இடையீட்டுப் பொருளாகப் படைக்கப் பெற்றிருப்பதால் இதற்கு அடிப்படைத் தேவையான பொருட்கள் வாழ்க்கைத் தரத்திற்கு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. பொது வாகச் சொல்லப்போனால் தண்ணீர்வழங்குதல், சுகாதாரம், வடிகால் வசதி, போக்குவரத்து, செய்தித்தொடர்பு, மின்சாரம் மற்றும் நகரச் செயல்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை விநியோகித்தல் தொண்டூழியச் செயல்களின் கீழ்வருவன. இவையே அங்கு வசிக் கும் மக்களுக்கு வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் கொடுக் கின்றன. ஒரு சிறியகிராமத்திற்கும், பெரிய நகரத்திற்குமிடையே யுள்ள வேறுபாட்டை வெளிக்கொணரும் சக்தி இந்த பராமரிப்புப் பணிகளிலும் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலுமுள்ளது. கிராமத்தில் வசிப்பவர்கள் தாங்கள் வசிப்பதற்குப் பயன்படுத் தாத இடங்களை விவசாயத்திற்கு வைத்துக்கொள்வார்கள். ஒவ் வொரு உழவுத் தொழிலாளியும், நிலமற்ற தொழிலாளியும் மற்றும் கிராம வினைஞர்களும் சொந்த வீட்டிற்குத் தகுதிபெற்று உரிமை யாளர்களாக அங்கேயே கால்நடைகள் மற்றும் பொருட்களைச் சேமித்து வைக்க நல்ல பாதுகாப்பான இடமும் ஒருங்கிணைந் தார்ப்போல அமையப்பெறுகிறார்கள். பொதுவாகவே கிராம வீட்டுக்குப் பின்னால் சிறுதோட்டங்கள் வசதியாக அமைக்கப் பெறும். இம்மாதிரியான கிராம வீடுகள் மக்கள்தொகை அடர்த்தி நகரத்தைக் காட்டிலும் குறைவாக உள்ளதை உறுதி செய்கின்றன. கஜுராஹோ இதற்குச் சிறந்த உதாரணம். நெரிசல் குறைவாக

www.padippakam.com



உள்ள காரணத்தினால், சமூகத்திற்குத் தேவையான கிணறுகள் மாசுபடிவது நகரத்திலுள்ளது போன்றில்லாமல் குறைவாகவே உள்ளது. இவற்றுள் சில வீட்டிற்குள்ளேயே அமைந்துவிடுகிறது. சில கிராமங்களில் சமூகக்கிணறுகள் மாசுபடிய வாய்ப்பு இருப்பதால், தண்ணீர்வழங்குதல் குழாய்களின் மூலமாக முறையாக ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதற்காகக் குடிநீர் வழங்கும் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், கழிவறைகள் இல்லாமல் இருந்தாலும் கிராமங்களில் திறந்தவெளி நிலத்தில் மனிதனின் கழிவுப் பொருட்களை கிரகித்துக்கொள்ளக்கூடிய தன்மையும் வசதியும் உள்ளது. இதனால் உடல்நலத்துக்கு எந்தக் கேடும் ஏற்படுவதில்லை. நகரத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசுபடியும் அபாயமும், நடைபாதைகளும் பொதுச்சாலைகளும் கழிவறைகளாக மாறி ஊறுவிளைவிக்கின்றன. ஆகவே மலஜலத்தை அப்புறப்படுத்த நகரத்தில் முறையான ஏற்பாட்டினைச் செய்தே தீரவேண்டும். நகரமக்களுக்கு இது ஒருவேண்டாத பொருளாக இருந்தாலும், கிராமமக்களுக்கு, முக்கியமாக விவசாயிகளுக்கு, நிலஉரமாக இது உபயோகப்படுகிறது. போக்குவரத்திற்கு கிராமமக்கள் தங்கள் கால்களையும் மாட்டு வண்டிகளையும் பயன்படுத்தி வயல்களுக்கும், வேறு இடங்களுக்கும் சென்றுவருகிறார்கள். ஆனால் நகரத்தில் தனியாரதுவாகனத்தையோ அல்லது பொதுவாகனங்களையோ நம்பித்தான் இருக்கவேண்டும். மேலும், நகரமக்கள் தங்களது பொழுதுபோக்கு மையங்களுக்கும், வீட்டிற்குமிடையே அடிக்கடி சென்றுவர நல்ல சாலைகளையும், வாகனங்களையும், அமைத்துக் கொள்வது அவசியமாகிறது. கிராமத்திலோ சாலைகள் எப்படியிருப்பினும் மக்களால் அதைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும். எனவே, செய்தித்தொடர்பும், போக்குவரத்தும் கிராம–நகரத் தேவைகளுக்கு, பராமரிப்பு நிலையில், வித்தியாசமானதாகத்தான் உள்ளது.

### குடிநீர் வழங்குதல்

மனிதக் குடியிருப்பு தண்ணீரை நம்பியே வாழ்கின்ற காரணத்தினாலும், மனிதன் உயிர்வாழத் தண்ணீர் மிகமுக்கியமாக இருப்பதனாலும் சுத்தமான குடிநீர் வழங்குதல் சமூகத்தினிடையே தலையாய சேவையாக அல்லது தொண்டூழியமாக உள்ளது. ஏழாவது திட்ட ஆவணப்படி 'சராசரிக் குடிநீர் வழங்குதல் நாடு முழுவதுமாக 81 சதவீதமும், குறிப்பிட்ட சிலநகரங்களில் மட்டும் 50 சதவீதமுமாகும். மேற்குறிப்பிடப்பட்ட புள்ளிவிவரங்கள்தண்ணீர்த் தட்டுப்பாட்டையோ அல்லது நகர ஏழைகளின் பற்றாக்குறைகளையோ தெளிவாக எடுத்துக்கூறவில்லை... அதிகமான இறப்புநிகழ்ச்சி

www.padippakam.com



மற்றும் நோய் முதலியன நகர ஏழ்மைக் குடியிருப்புக்களில் சுத்த மற்ற தண்ணீர் மற்றும் சுகாதாரத்தின் வசதியைப் பொறுத்தே ஏற்படுகிறது.'[1]

உண்மையில் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலுக்கு குறைவாக நாட்டம் காட்டப்படுவதால் நகரத் திட்ட ஒதுக்கீட்டில் குடிநீர் வழங்குதலுக்கும், சுகாதாரத்திற்கும் ஏழாவது திட்டப்படி 1.6 சதவீதம் மட்டுமே மொத்த திட்டவரையிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதற்காக மத்தியஅரசின் பங்கெதுவும் வழங்கப் படவில்லை. இத்துறைக்குக் குறைந்த முக்கியத்துவம் வழங்கியுள்ளதை, ஆறாவது திட்ட ஒதுக்கீடான 17,575.60 மில்லியன்களே வெளிப்படுத்துகிறது என்பது மட்டுமல்லாமல் இத்துறையின் அதிகபட்ச பற்றாக்குறை இத்தொகையின் 20 சதவீதமாகவும் உள்ளது. திட்டக்குழு இது சம்பந்தமாக வானளவுக்குப் பேசினாலும் இதனால் இத்துறைக்கு இதுவரை எதுவும் செய்ய இயலவில்லை என்பதே உண்மை. குறிப்பாக 'கையிருப்பு பற்றாக்குறையாயிருப்பினும் நகரங்களின் தேவைகளான தண்ணீர் மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளுக்கான நாட்டம் உதாசீனப்படுத்தப்படமாட்டாது. எனவே, தண்ணீர் வழங்குவதை அதிகரித்தும்—மேம்பாட்டையச் செய்தும் நகரம் மற்றும் நடுத்தர நகரங்களில் ஏழாவதுதிட்டத்தின் போது விரிவாக்கம் செய்வதையும் கருத்தில் கொள்வோம்.'[2]

இவ்வாறு அதிகஅளவில் கூறிவிட்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிநீர் விநியோகத்திற்கும், சுகாதார வசதிகள் மேம்பாட்டிற்கும் 29,356.40 மில்லியன்கள் மட்டுமே: அதாவது முன்பிருந்த அதே 1.6 சதவீதமே. நாட்டின் சுற்றுப்புறச்சூழலின் இன்றியமையாத ஒன்றாகத் தண்ணீரும்—சுகாதாரமும் இருந்துவந்த போதிலும், மத்திய அரசு அதனைப் பொருட்படுத்தாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாய் உள்ளது. மக்கள் குடியிருப்பு மேம்பாட்டை எட்டத் தடையாகவும் உள்ளது.

குடிநீர் வழங்குதலுக்கு நாட்டிலுள்ள தற்போதிய நிலையினைத் தேசிய நகரமயமாக்கும் குழுவின் அறிக்கை நன்கு வெளிக் கொணர்ந்துள்ளது. அக்குழு கூறியுள்ளதாவது:

நகர மக்கள்தொகையின் கணக்கினைப் புள்ளிவிவரப்படி எடுத்துரைக்கும் அதேநேரத்தில், முறையாகக் குடிநீர் வழங்கும் துறைக்குப் புள்ளிவிவரக் கணக்கினைத் தெளிவாக எடுத்துக்கூற வில்லை. ஹரியானா, தமிழ்நாடு, மேற்குவங்கம், உத்திரப் பிரதேசம், கர்நாடகம், இராஜஸ்தான், குஜராத் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களில் சராசரிக்கும் குறைவாகவே நகரங்களுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. தமிழகம் மற்றும் ஆந்திரத்தின் பெரும்பகுதி களில், குறிப்பாகச் சென்னை, ஹைதராபாத் போன்ற பெருநகரங்களில்

www.padippakam.com



நீர்நிலையங்களும்–குடிநீரும் வீடுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிலில்லை என்பதும் குழாய்கள் சேதமுறுவதும் – மாற்றுமுறையின்மையும் சமூகத்தில் தற்போதைய நிலையாகும். ஏன் தலைநகரமாகிய தில்லியில்கூடத் தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக உள்ளது என்பதற்கு அதன் புறநகர்வழங்கீட்டு முறையை நோக்கினால் நன்கு தெரியவரும். போதுமான அளவுக்குத் தண்ணீர் வழங்கப்படுவதில்லை என்பதைவிட, வழங்கப்படும் தண்ணீர் பெரும்பாலும் சுத்தமானதாக இருப்பதில்லை என்பதுதான் உண்மை. பெரும்பாலான பழைய நகரமையங்களில் குடிநீர் வழங்கீட்டு முறை பழுதுபார்க்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது. மேற்குவங்க அரசினால் இந்தக் குழுவிற்கு வழங்கப்பட்ட புள்ளிவிவரத்தின் படி கல்கத்தா முழுவதிலும் உள்ள மொத்தப் பங்கீட்டுமுறையையே மாற்றி அமைக்க வேண்டியநிலையில் இருக்கிறது எனத் தெளிவாகக் கூறியுள்ளது. பங்கீட்டுமுறை சரிவர இல்லை என்பதைவிட வசதியுள்ளவர்கள் அதிக அளவு பங்கீட்டையும், மறுபுறம் நடுத்தரவர்க்கத்தினர் பொதுப்பங்கீட்டுமுறையையும், சிலநேரங்களில் நகர நிர்வாகத்தில் அடங்காத பிற வழிகளிலும் குடிநீரைப் பெறவேண்டியுள்ளது. இதில் முக்கிய பிரச்சினைக்குரிய விவரம் தண்ணீர் தட்டுப்பாட்டைக்காட்டிலும் சமமற்ற அல்லது நேர்மையற்ற வழங்குமுறையே எனலாம்.[3]

உலகவங்கி மற்றும் உலகச் சுகாதார இயக்கத்தின் நீர்வழங்கும் முறையின் சட்டத்திற்குச் செல்வதற்கு முன்னால் இந்தியாவிலுள்ள தற்போதைய குடிநீர் வழங்கும் நிலைமையை மதிப்பிடுதல் அவசியமாகிறது. தேசிய நகரமயமாக்கும் குழு தனது மதிப்பீடாகச் சராசரியாக முதல்வகுப்பு நகரத்தில், தண்ணீர் வழங்குதல் ஏறத்தாழ நாளொன்றுக்கு 125 லிட்டர் எனக்கூறுகிறது. முதல்வகுப்பு நகர மக்கள் தொகையான 65 சதவீதத்திற்கு இது ஏறத்தாழ ஆண்டுக்கு 65,000 இலட்சம் கன மீட்டராகும். மேலும் அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் மீதமுள்ள நகரமக்கள்தொகைக்கு நாளொன்றுக்கு 100 லிட்டரும், அதிகமாக வருடத்திற்கு 30,000 இலட்ச கன மீட்டர் குடிநீரும் கிடைக்கும். நகர மையங்களுக்கு வருடத்திற்கு ஏறத்தாழ 95,000 கனமீட்டர் வழங்கப்படுகிறது. 1988-ஆம் ஆண்டின் நகர மக்கள்தொகை 2000 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. 2001-ஆம் ஆண்டில் நகர மக்கள்தொகை 70 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்திருக்கும். இப்பொழுதுள்ள மதிப்பீட்டின் படியே ஏறத்தாழ ஆண்டுக்கு 160,000 இலட்சம் கனமீட்டர் ஆகும். அதாவதுபத்தாண்டுகளில் 65,000 இலட்சம் கனஅளவு தண்ணீர் கூடுதலாகத் தேவை. ஆக குடிநீருக்குப் பத்து இலட்சம் கன மீட்டருக்கு ரூபாய் 3,000 இலட்சமாகவும், அதில் சேமிப்பதற்கு மிகுதியாக ரூ 500 மில்லியனும், முதலீடாக ரூபாய் 1.95 மில்லியனும் குடிநீர்

www.padippakam.com



வழங்குவதற்கு மட்டுமே 2001-ஆம் ஆண்டில் தேவைப்படும். மேலே கூறப்பட்டுள்ள தொகை தற்பொழுது நிலவிவரும் பணப் புழக்கத்தைக் கணக்கிட்டுப் பகுத்ததாகும். வருங்காலத்தை மனதிற் கொண்டு உயர்த்தப்பட்டதல்ல. நாம் குடிநீர் வழங்குதலை நாளொன்றுக்கு 300 லிட்டர்களாக உயர்த்தினால் 2001-ல் முதலீடு மேலும் ரூ 8.5 மில்லியன் மில்லியன்களுக்கு இருக்கும். ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் வரையறையைக் கணக்கிட்டால், ஆண்டின் தேவையான நான்கு சதவீத நிதியுதவிக்கு ரூ 1.95 மில்லியன் மில்லியன்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியப் பெருநகரங்களில் முறையான குடிநீர் விநியோகமோ, இனிவரும் ஆண்டுகளில் இதுமேம்படும் என்ற உணர்வோ துளியும் ஏற்படப்போவதில்லை என்பதே உண்மை.

குடிநீர் வழங்கீடு போதுமான அளவில் இல்லையென்பது ஒருபுறமிருக்க, அதன் பங்கீட்டுமுறை சரிவரயில்லை என்பது அதனைச்சார்ந்த மற்றொரு வருத்தப்படவேண்டிய நிலையாகும். பங்கீட்டுமுறை நகரிலுள்ள பணம்படைத்தவர்களுக்கு மட்டும் சராசரிக்கு அதிகமாகவும், வறுமையில் வாழும் மக்களுக்கு உயிர் வாழத் தேவையான பங்கீட்டு நிலையை எட்டிப்பிடிக்கவே இயலாத விஷயமாக உள்ளது. இதுமட்டுமன்றி சமீபகாலத்துத் தகவலின்படி, பணம்படைத்தவர்கள் தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கென்று தொட்டிகளை வைத்துக்கொள்வதும் இப்பிரச்சினைக்கு புதுவடிவத்தைக் கொடுத்துள்ளது. ஏழைகளால் பொதுவிநியோக முறையில் அதிகளவுத் தண்ணீரைச் சேமித்துக்கொள்வது என்பது முதலாவதாக இயலாதகாரியமாக இருப்பினும், அதைச் சேமித்து வைக்கப் போதுமான கொள்கலத்தினை வாங்கக்கூட முடியாத நிலையில் உள்ளனர். எனவே, அவர்களுக்குக் கழுவுவதற்கும், தோய்ப்பதற்கும் கூடப் போதுமான தண்ணீர் இல்லாதது சுகாதாரக் கேட்டினை உருவாக்குகிறது. இதற்கும் மேலாக, பங்கீட்டு முறையில் வீணடித்தலும், தூய்மை கெடுதலுக்கும் மாசு படிதலுக்கும் வாய்ப்புள்ளது. இதுவும் நகரத்தில் உள்ள உடல்நலப்பிரச்சினைகளுக்கு பங்கம் விளைவிக்கிறது.

சுற்றுப்புறச் சூழலின்படி, தொடர்ச்சியான தண்ணீர் தட்டுப்பாடு பலவிரும்பத்தகாத விளைவுகளை உண்டுபண்ணும். முதலாவதாக, உடல் சம்பந்தப்பட்ட நேரடி இடையூறுகள் உருவாகின்றன. மேலும், நீரில் உற்பத்தியாகும் கிருமிகள் இறைப்பை-குடல் சார்ந்த நோயையும், நச்சுக்காய்ச்சலையும், வாந்திபேதியையும் மற்றும் பலதரப்பட்ட நோய்களையும் உண்டாக்குகிறது. இவை அனைத்திற்கும் நல்ல, சுத்தமான குடிநீர் இல்லாததுதான் காரணம். இது உண்மையிலேயே நாட்டில் மிகமோசமாக சுற்றுப்புற இடையூறானாலும், மேலே கூறியதுபோல், இப்பகுதியினை அரசு அக்கறை

www.padippakam.com



காட்டாமல் உதாசினப்படுத்திவிட்ட பிறகு, விளைவுகளை அனுபவிக்க வேண்டிதுதான் என்ற கட்டாயத்தில் நாளைய இந்தியா உள்ளது. சுகாதாரக்கேடு போதுமான அளவு தண்ணீரை உபயோகிக்காததனாலும் ஏற்படும். சமூகவியல் ரீதியாகப் பார்த்தோமேயானால், போதுமான அளவு குடிநீர் கிடைக்காத நிலை பொதுக் குழாய்களில் சண்டையையும், சில நேரங்களில் கொலையையும் செய்யத்தூண்டுகிறது. பொருளாதாரரீதியில் பார்த்தால், தொழிற்சாலையையும், வியாபாரத்தையும், இது பெரிதும் பாதிக்கிறது. வருமானம் பாதிக்கப்படுவதால், போதுமான ஊட்டச்சக்தி இல்லாமை காரணமாக சத்துணவின் தட்டுப்பாடும் ஏற்படுகிறது. ஆகவே, எல்லாவற்றிற்கும் முக்கியத் துணைக்கூறாக இருப்பது தண்ணீர் தட்டுப்பாடே.

### சுகாதாரம்

தண்ணீருடன் இணைசேர்ந்தது வடிகால்வசதிகளும் பாதாளச் சாக்கடைகளும் ஆகும். தண்ணீருடன் சேர்ந்த வடிகால் அமைப்பு என்பது ஒரு உயர்மட்ட மக்களுக்கே கிடைக்கப்பெறும் இன்ப வாழ்க்கைப் பொருளாகும். இதனை ஒருசிலரே அனுபவிக்க இயலும். ஜப்பான் போன்ற பணக்கார தேசத்திலும்கூட இத்தகைய வசதி மொத்த நகர மக்கள்தொகைக்கு வழங்கமுடியாமலுள்ளது. அதே நேரத்தில் மனிதனது கழிவு மண்ணுக்கும் தண்ணீருக்கும் மாசுபடுதலை உண்டாக்குகிறது. இது மண்ணுடன் ஒத்துப்போகும் தன்மையுடையதாக இருப்பதால் இதனை ஏன் மண்ணுக்கு ஊட்டச் சத்தியாக பயன்படுத்தக்கூடாது என்பது ஒருநல்ல கேள்வியாகும். ஆனால், இதனைச் சரிவரச்சேகரித்துப் பதப்படுத்தவேண்டும். இதில் ஒரு விரும்பத்தகாதமுறை என்னவென்றால், திறந்தவெளியில் சுகாதாரமற்றமுறையில் ஆசியா மற்றும் பசிபிக் மாகாணங்களில் சுற்றுப்புறத்திற்கும் குடியிருப்பிற்கும் ஊறுவிளைவிக்கும் வகையில் மலஜலம் கழிப்பதுதான்.

இந்தியக் துணைக்கண்டத்தில்தான் இந்தச் சுகாதாரமற்றமுறை மிகவும் அதிகமாக நிகழ்கிறது. சுத்தமான கிராமப்புறச் சூழ்நிலையில் இதனை அங்கிருக்கும் நிலப்பரப்பு சூரியஉதவியுடன் நோய்க் கிருமிகளின் மாசுபடியாமல் பாதுகாத்தாலும், இப்பழக்கம் நகரச் சூழலில் மிகவும் மோசமான விளைவுகளையும், அருவறுப்பான கழிவுப் பொருளையும் மற்றும் வியாதிகளையும் உண்டு பண்ணி விடுகின்றது. திறந்தகலத்தினால் தயாரித்த கழிப்பறை, கழிவுப் பொருட்களை மனித உதவியினால் சேகரிக்கும்முறை போன்றவை திருப்தியளிப்பதாக இல்லை. ஏனென்றால் இம்முறையில் சேகரித்த கழிவுப் பொருட்களில் ஈக்களும், வியாதிகளைப் பரப்பும் பூச்சிகளும்

www.padippakam.com



தோன்றுவதாலும், அதை அப்புறப்படுத்தும் பணியாளர்களை இழிவாக நினைத்துப்பார்ப்பதும், பிற்காலத்தில் இம்முறை யினையே பூமிக்கடியிலான பாதாளச்சாக்கடைகளாக மாற்றி யமைத்தது. இதன் விளைவாக மண்ணும்–மாசுபட்டது. நிலத்தடி நீரும் சீனாபோன்ற நகரங்களில், குறிப்பாக அதன் கிராமப்புறங் களில், கழிவுப்பொருட்களைச் சேகரித்து வயல்களில் உரமாகப் பரவலாகக் கொட்டிவிடுவார்கள். இதுநிச்சயமாக பணியாட்களிடையே நோய்களை ஏற்படுத்திகிருமிகளை உருவாக்கி அந்நிலங்களில் பயிரிடப்படும் தாவரங்களையும், பயிர்களையும் அழித்துவிடும் வாய்ப்புள்ளது. ஜப்பானில், இக்கழிவுப் பொருட்களை வண்டலாகப் பிரித்து நீர்உள்வாங்கும் பள்ளத்தில் சேகரித்து, இப்பணிக்காகத் தனியாகத் தயாரிக்கப்பட்ட வாகனங்களின்மூலம் அப்புறப்படுத்தி விடுவார்கள். பிறகு அதனைப் பதப்படுத்தும் மையத்திற்கு எடுத் துச்செல்வார்கள். வண்டலை விவசாயத்திற்குப் பயன்படுத்துவர். அங்கும் சிறியகுடியிருப்புகளுக்குக் கழிவறைத் தொட்டிகளைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்து வருகிறது. அதற்கென தகுந்த திட்டமும் வகுத்துள்ளார்கள். எனினும் கழிவறைத்தொட்டிகள் போதுமான அளவிற்குப் பதப்படுத்தும் தன்மையை அளிக்காததும், அதன் காரணமாக அதனின்று வெளியாகும் கழிவுநீர்ப்பொருட்கள் பாதாளச் சாக்கடையில் கலந்து குடிநீர்க் குழாய்களிலும் புகுந்து பயங்கரமான விளைவுகளை உண்டாக்குகிறது.

பொதுவாக கழிவுநீர் ஒரு பிரச்சினையானாலும் தொழிற் சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகள் பெருத்த நாசங்களை ஏற்படுத்துகிறது. ஒருவேளை சிறிய அல்லது இடைத்தரமான நகரத் தில் இந்தப்பிரச்சினை ஊறுவிளைவிக்காமல் இருக்கலாம். ஆனால், திட்ட நிபுணர்கள் இதைக்கருத்தில்கொண்டு தகுந்த நடவடிக்கை களும் முன்னேற்பாடுகளும் செய்யவேண்டும். மேலே கூறியது போன்ற ஒருமுகப்படுத்தப்பட்ட கழிவுநீர் வெளியேற்றும் முறை நகராட்சிகளுக்கு அவற்றின் சக்திக்கு மீறிய விலையுயர்ந்த ஒன்றாக இருக்கிறது. எனவே, பதப்படுத்தும் முறையும் அதன் செலவினங் களும் நினைத்துப்பார்க்க முடியாத கேள்விக்குறியாகிவிடுகிறது. அதேநேரத்தில் மாசுபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடந்துகொண்டுதான் இருக்கும். இந்நிலையில், தொழிற்சாலைகளின் சமூகப்பொறுப்புகளை நினைவுகூர்தல் மிகவும் அவசியமான ஒன்றாகும். எந்தஒரு தொழில்திட்டமும் அதன் பொருளாதாரகராதி யில்தான், அதாவது அதன் மூலதனம், நடத்தும் செலவினங்கள் மற்றும் எதிர்பாராத நஷ்டங்களையும் லாபங்களையும் கொண்டே நிர்ணயம் செய்யப்படுகிறது. எனவே, தொழிற்சாலை தனது லாபத்தை அதிகரிக்கச் சமுதாயத்தைப் பயன்படுத்துகிறது. அதே போன்று, சமுதாயமும் இத்தொழிற்சாலைக் கழிவுப்பொருட்களைப்

www.padippakam.com



பதப்படுத்துவதற்கான மூலதனத்தையும், மாசுப்படுத்தும் நச்சுப் பொருட்களை அப்புறப்படுத்தத் தேவையான செலவினங்களை யும் தொழிற்சாலையின் நிர்வாகத்திடம் ஒப்படைத்தல் நலம் எனக்கருதப்படுகிறது. எனவே, எந்த ஒரு தொழிற்சாலைக்கும், அதனின்று வெளிப்படும் திட, திரவ மற்றும் வாயுப்பொருட்களை அப்புறப்படுத்தும் செலவினங்களுக்குப் பொறுப்பேற்காதவரை யில் இடமளிக்கக்கூடாது. அவற்றிற்கு உரிமப்பத்திரம் வழங்கக் கூடாது. ஆனால், துரதிருஷ்டவசமாக, எல்லா நகரநிர்வாகிகளும், நிர்வாகங்களும் இத்தொழிற்சாலைகள் வேறு இடங்களுக்குச் சென்று விட்டால் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படும் என்ற பயத்தின் காரணமாக நகரத்தின் அழகையும், பொருளாதாரத்தையும் அழித்து விடுகின்றனர். இங்குதான் உண்மையில் தேசியக் கொள்கைகள் முக்கியப்பங்கு வகிக்கவேண்டும். மத்திய அரசுகள் சில நிபந்தனை களை முன்மொழிந்தும், தரக்கட்டுப்பாடினை விதித்தும், சில பாது காப்புச் சட்டக்கோட்பாடுகளை விதித்தும், உத்தேசமூலதனத் தினில் இச்செலவினங்களை உட்படுத்தியும் சுற்றுச்சூழலுக்கு முக் கியத்துவமும்–பாதுகாப்பும் அளிக்கவேண்டும். இன்றே கட்டுப் பாடாக இருப்பது பிற்காலத்தில் ஏற்படும் கடினமான நிலை களைக் களைவதற்குப் பேருதவியாக இருக்கும்.

மற்றொரு முக்கியமான செயல் குப்பைக்கூளங்களைச் சேகரிப்ப தும் வேண்டாத திடப்பொருட்களை அழிப்பதுமாகும். இன்று இந்தியச் சாலைகளில் குப்பைகளை சர்வசாதாரணமாகக் குவித் திருப்பதைக் காணமுடிகிறது. மாநகராட்சித்தொட்டிகள் ஏற்படுத்திக் கொடுத்தும் மக்கள் தங்களுக்குள் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளாமல் உள்ளனர். நோய்பரப்பும் பன்றிகளையும், தெரு நாய்களையும், பூனைகளையும் பிற ஜீவராசிகளையும் வளரச் செய்து தாங்களே சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் கருவிகளாக விளங்குகின்றனர். நமது நகரங்களில் குப்பைகளைச் சேகரிப்பதும் – அப்புறப்படுத்துவதும் திருப்திகரமாக இல்லை. தில்லியிலுள்ள ஜெகத் எனப்படும் திரைப்படக்கொட்டகையின் முன்னிலையில், மாநகராட்சித் துப்புரவாளர்கள் மலைப்போல் குவித்து வைக்கும் குப்பைக்கூளங்களிலிருந்து கோடைக்காலங்களிலும் மழைக்காலங் களிலும் வெளிப்படும் துர்நாற்றத்தைப்பற்றி எவரும் கவலைப் படுவதில்லை. இது என் சொந்த அனுபவம். சுற்றுச்சூழலுக்கு மாசு மட்டுமல்லாமல், அந்தப்பகுதிகளில் வசிப்போர் பயன்படுத்தும் நீரில் கலந்துவிடும் நச்சுக்கிருமிகளால் ஏற்படும் நோய்களும் இறப்புக் களும் இதற்கு உதாரணங்கள். இந்நிகழ்ச்சி பூமிக்கடியில் குப்பைக் கூளங்களைப் புதைத்துவிடும் தன்மையுடைய ஒருநாட்டில்தான் ஏற்படுகிறது. எனென்றால், நமது நாடு இன்னமும் வியாபார ரீதியில் அமெரிக்காவைப்போலவோ அல்லது ஐரோப்பாவைப் போலவோ

www.padippakam.com



வளர்ச்சியடையவில்லை. நமது கிராமங்களில் இன்னமும் குப்பையும், மிருகங்களின் கழிவுப்பொருட்களும், எருவாகக் கருதப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது. நகரச்சூழ்நிலையில் திடக்கழிவுப் பொருட்கள் சுற்றுப்புறச்சூழலின் எதிரிகளாகும்.

*மாசு*

மனிதர்களை, நகரமயமாக்கும் நோக்கத்தில், நகர குடியிருப்புகளாகத் திரட்டுவது உயிரினவாழ்க்கைச் சூழலுக்கு மாசு விளைவிப்பதாகும். இரண்டு முக்கியவிளைவுகள் சுற்றுச்சூழல் மற்றும் நகரக்குடியிருப்பை இணைக்கின்றன. முதலாவது, அவ்விரண்டின் வெளிப்புற விளைவுகளே. அதாவது எந்தஅளவுக்கு நிலத்தில் கிடைக்கின்ற வளமிக்க பொருட்களை உபயோகித்து அதற்கு இணையாக அல்லது பிரதிபலனாக நிலத்திற்கு வழங்கும் கழிவு, நச்சு மற்றும் மனிதவாழ்க்கையில் ஊறுவிளைவிக்கும் பொருட்களைக் கூறலாம். இரண்டாவதாக, ஒரு நகரம் அங்கு வசிக்கும் மக்களுக்கு சுற்றுச்சூழலை எந்தவிதத்தில் அமைத்துக்கொடுக்கின்றது என்பதைப் பொருத்தது. அதிலும் குறிப்பாக அதிகநெரிசல் குவிப்பு, கூடுதலான ஒலி அளவு மற்றும் சமூக–மனத்தத்துவ சாஸ்திர விளைவுகளைக் கூறலாம். இவ்விரு நகரமாக்குதலின் விளைவுகளும் சுற்றுப்புறச்சூழலை மோசமானதாகவோ அல்லது மாசு படிந்ததாகவோ ஆக்குகிறது. தேசிய நகரமயமாக்கும் குழுவின் அறிக்கையின்படி:

> நமது நகரமையங்கள் பெருமளவில் காற்று, தண்ணீர் மற்றும் மண் சம்பந்தப்பட்ட மாசுக்களைத் தயாரிப்பவை. இத்துடன் ஒலி அளவையும் சேர்த்துக்கொள்ளலாம்... அதிகபட்சமான மாசு மனிதக் கழிவுப்பொருட்கள் மற்றும் வீட்டுக்குப்பைக்கூளம் ஆகியவற்றால் உருவாகிறது... தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசு என்பது மற்றொரு விஷயம்... இம்மாசுகளை பரப்புவோரிடம் தயாளகுணத்துடன் இருப்பது மற்ற சராசரிக் குடிமக்களுக்குச் செய்யும் துரோகமாகும். எந்த ஒரு குடியரசும் அக்கிரமச்செயலை ஆதரிக்கமுடியாது. தனியார் மற்றும் பொதுப்போக்குவரத்து, பழுதடைந்த இன்ஜினையே உபயோகிப்பதால் வாகனப்புகை எனப்படும் மாசினைக் காற்றில் பரப்பி நமது நகரங்களில் வியாபிக்கச்செய்கின்றன. வானங்களின் இயந்திரங்களிலிருந்து வெளிப்படும் சப்தத்தையும், உயர்ந்த ஒலிஅளவில் முடுக்கப்பட்டஒலிபெருக்கியின்மூலம் வெளிப்படும் மதம் சம்பந்தப்பட்ட ஒலிபரப்பையும் இதனால் உண்டாகும் மாசுகளையும் நாம் குடிக்கும் நீரைவிடவோ

www.padippakam.com



அல்லது நாம் சுவாசிக்கும் காற்றைவிடவோ சாதாரணமாக நினைக்கக்கூடாது.

மாசு சம்பந்தப்பட்ட விஷயத்தில்கூட கிராமமக்களுக்கும், நகர மக்களுக்குமிடையே மிகவும் வித்தியாசமான நடத்தையைக் காண்கிறோம். கிராமத்து மனிதன் குறிப்பிட்ட அளவிற்குத்தான்சுற்றுப்புறச்சூழலினால் பாதிக்கப்படுகின்றான். ஏனென்றால் அவன் நிலத்தில் முதலீடுசெய்வதைப் பொறுத்துத்தான் அவனது நிலத்திலிருந்து திரும்பப்பெறுவதும் அமைகிறது. இதற்குமாறாக நகரச் சூழ்நிலையிலோ மனிதனும் அவனது குடியிருப்பும் இறுதி வளங்களின் ஆற்றலைக் குறைப்பவர்கள். அவர்கள் நிலத்தினை ஒருமுறை உபயோகத்தின் மூலம் உண்டுவிடுகின்றனர். மேலும் அவர்கள் நிலத்திலிருந்து அதிகபட்சமானஇயற்கை வளங்களை வாய்ப்பினை உதாரணமாக காற்று, பயிர்வகைகள் மற்றும் எரிபொருள் போன்றவற்றை உட்கொண்டு அதற்குப் பிரதிபலனாக எதுவும் திருப்பிக் கொடுக்காமல் மேற்குறிப்பிட்டவற்றை அழிக்கும் வடுக்களை தாதுக்களாகவும், மாசுபடிந்த நீராகவும் மற்றும் விஷம்கலந்த கழிவுப் பொருட்களாகவும் திருப்பிக்கொடுக்கின்றனர். ஆனால் அதுவே கிராமச்சூழ்நிலையில், இயற்கைச் சுழற்சியினால் வளம்மிக்கதாக இருக்கும் நிலை, நகரத்திரட்சியில் காணமுடியாத ஒன்றாக உள்ளது.

தொழிற்சாலைகள், வாழ்விற்குத் தேவையான பொருளாதாரத்தைத் தரக்கூடியதாயினும், சுற்றுச்சூழலை கொல்லும் கருவியாகவும் உள்ளது. போபாலில் டிசம்பர்1984-ல் நிகழ்ந்தது. யூனியன் கார்பைடு தொழிற்சாலை உண்மையில் ஒரு கொல்லும்சாதனமாக மாறி விஷப்புகையினை வெளிப்படுத்தி, 4000 உயிர்களைக் குடித்தும்—200 ஆயிரம் மக்களைத் துன்புறுத்தியும்விட்டது. சமையல் புகையும் காற்றினை மாசுப்படுத்தவல்லது. வேறுவிதமாகப் பார்த்தால் இரசாயனம் மற்றும் காகிதத் தொழிற்சாலையின் மூலம் ஏற்படும் கசிவு நீர், மண் மற்றும் காற்றினை ஒரேநேரத்தில் சேதப்படுத்துகின்றது. இவைகள் நகரத்தின் வடுக்கள். வளர்ச்சியினை எட்டும்போது விளைப்பொருள்கள் பெருக்கமடைவதும், அதுவே மாசுக்களை அதிகரிப்பதும் உதாசீனப்படுத்தக்கூடிய ஒன்றல்ல. ஆகவே அவற்றை விரைவாகக் கண்டுபிடித்து, மாற்று வழியினை உருவாக்கி மேலும் அவை ஏற்படாமல் செய்யவேண்டியதும், முக்கியமான நகரத்திட்டத்தின் சுற்றுச்சூழல் அமைப்பின் முக்கிய அம்சமாகும்.

## குடியிருப்புகள்

வசதியும் ஒரு குடிமகனின் வாழ்க்கைத் தேவைகளாகும். இந்தியாவில் பெருமளவிலான வீடுகளும் அதன் சுற்றுச்சூழலும் மனிதத்

www.padippakam.com



தன்மையை மறக்கடிக்கும் ஒன்றாகவே உள்ளது. இதன் உண்மை நிலை, இந்தியாவைப் பொறுத்தவரை, என்னவென்று பார்ப் போம். நகர மக்கள்தொகையில் 45 சதவீதத்திற்கும் மேலான மக்கள், ஒரு அறையைக்கொண்ட வீடுகளிலேயே, ஐந்து பேர்களாகத் தங்கி யுள்ளனர். ஏறத்தாழ 40 சதவீத வீடுகள் மின்வசதியற்றும், 66 சதவீதம் கழிவறையற்றும் இருக்கின்றன. ஏழாவது திட்ட ஆவணம் வீட்டு வசதி ஒரு இன்றியமையாத சுகாதாரத் தேவையென்று தனது சுற்றுச் சூழல் அறிக்கையில் அங்கீகரித்துள்ளது. அதன் ஆவணத்தில் வீடு, எனப்படும் அத்தியாயத்தில் கூறுவதாவது:

> இந்தியாவில் வீடு என்பது அடிப்படைத் திட்டக்குறியிலக்காக இருந்து வருகின்றது; தங்க வசதியளித்தலும், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதலும், குறிப்பாக ஏழைமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதும்; செயல்துணையான ஒரு அமைப்பினை மக்களுக்கு அமைத்துக்கொடுக்கவும், உடல் ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவற்றில் எட்டுவதற்கு குறி யிலக்கை அமைப்பதும்; மேலும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரநிலையில் நடவடிக்கைகளை குறிப்பிட்ட அளவிற்கு உயர்த்துதலும்; நகர முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதும் மனி தரிடையே பேதங்களைக் கைவிட்டு வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதும்; இறுதியாக தாமாக முன்வந்து அதிகமாகச் சேமிக் கும் பழக்கத்தை உருவாக்குதலுமே வீட்டின் நோக்கங்கள்.

சுற்றுப்புறச் சூழலின்படி வீடு எனப்படுவது சுத்தமானகுடிநீருக்குச் சமம். இரைப்பை–குடல் சம்பந்தப்பட்ட வியாதிகள் எவ்வாறு சுகாதாரக்கேட்டினாலும் சுத்தமற்ற தண்ணீர் வழங்குதலாலும் தோன்றுகிறதோ அதுபோன்றே பாதுகாப்பற்ற வாழ்க்கை சுவாசம், பார்வை சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு வழிவகுக்கும். நெரிசலின் நேரடி விளைவுகள் இவை. மேலும் குறைவான வெளிச்சவசதி, அதிகக் குவிப்பு மற்றும் திருப்தி அளிக்காத வாழ்க்கைநிலை முதலியன வீடு சம்பந்தப்பட்டவையே. உண்மையில் ஏழ்மைநிலையில் வாழும், ஊட்டசக்தியற்ற குறைந்த உணவுப் பங்கீடு முறையிலுள்ள ஏழை மக்கள் குடிசை மற்றும் குறைந்த வசதியுடைய வீடுகளில் வசிக் கின்றனர். சுற்றுச்சூழல் பிரச்சினைகளை இவை உருவாக்குகின்றன. எனவே முறையான வாழ்விடம் சுற்றுச்சூழலின் நோக்கமாகும். இதுவே முக்கியமான தேவையுமாகும். ஏனென்றால் வரைமுறை யற்ற வீடுகள் சமூக அமைப்பின் தரத்தினைக் குறைப்பது மட்டு மன்றி வரைமுறையற்ற குடியிருப்புகளும் கவனிப்பாரற்ற— தேவையில்லா, வசிப்பிடங்களும் சுற்றுச்சூழலைப் பெரிதும் பாதிக் கின்றன. சுற்றுச்சூழலுக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



## எரிபொருள்

மனிதன் தனது எரிபொருள் தேவைகளை மண்ணில் புதைந்து கிடக்கும் புராதன காலத்து மிருகம் அல்லது தாவரம் மிஞ்சிய பகுதிகள் அல்லது கல்லினுட்பதிந்த படிமம் (fossil fuels) போன்றவற்றி லிருந்து எரிபொருளாகப் பெற்றும், உயிரியல் மாற்றங்களால் பெற்ற எரிபொருளாலும், இயற்கை எரிவாயுவாலும் மற்றும், நீர்வீழ்ச்சி களின் மூலம் மின்சக்தியை உற்பத்திசெய்தும் பூர்த்திசெய்து வருகிறான். சமீபகாலமாக அவன் மற்ற எரிபொருட் தடயங்களை உதாரண மாக, சூரியவெப்பசக்தி, காற்று மற்றும் சாண எரிவாயு (BIOGAS) போன்றவற்றையும் பயன்படுத்துகிறான். நிலக்கரியையும், எண் ணெய்ப் பொருட்களையும் எரிபொருள் தேவைகளுக்காகத் தோண்டி எடுக்கத்தொடங்கியது முதல் இயற்கையின் வடிவமைப்பினைச் சிதைக்கத்தொடங்கிவிட்டான். இதனால், நிலப்பரப்பிலும் அழிக்க முடியாத வடுக்களை சுரங்கங்களின் வாயிலாக உருவாக்கினான். இவற்றின் வழங்கும் சக்தி குறைந்தகாலத்திற்கே உள்ளதால் மனிதன் இதனை ஒரு நிரந்தர எரிபொருள் தடயமாக நம்பமுடியாது.

மற்றுமொரு எரிபொருள் மூலதனமாக இயற்கைப் பொருட் களான மரம், மற்றும் விவசாயக் கழிவுப்பொருட்களும் இருந்து வருகின்றன. இவை இரண்டும் தொடரக்கூடிய எரிபொருள் சக்தியாக நிலத்திலிருந்து கிடைப்பதால் அதனை வளர்ப்பது நமக்கும் நாட் டுக்கும் நல்லது. மரங்களைப் பொருத்தமட்டில் எரிபொருளுக் காக மட்டும் நடப்படுவதில்லை. மரங்களையும் காடுகளையும், திரும்பத்திரும்ப வெட்டுவதும், அழிப்பதுமாக இருப்பதால், சுற்றுச் சூழலில் இதன் நடுநிலைத்தன்மை, உலகம் முழுவதும் தடுமாற்றத்தில் உள்ளது. இந்தியாவில் தேரிகார்வால் என்னும் மாவட்டத்தில் மட்டும் 27,000 ஹெக்டேருக்கு மேலாக சிந்தூரத் தேக்குமரக்காடுகள் வெட்டப்பட்டும் 14,000 ஹெக்டேர் மண்ணோடு மண்ணாக்கப் பட்டுமுள்ளது. ஆகவே, இப்பொழுது அந்த மாநிலத்தைப் பார்த்தால் மரமே இல்லாத பாலைவனத்தைப்போன்று தோற்றமளிக்கிறது.

நகரீயங்களின் பிரச்சினைகளில் ஒன்றான தொழிற்சாலை போக்குவரத்து மற்றும் எரிபொருள் அளவு, நகரத்தின் அளவைக் காட்டிலும் அதிகமாகவே தேவைப்படுகிறது. ஒரு சிறிய கிராமமோ அல்லது நகரமோ இயந்திரம் பொருத்தப்பட்ட போக்குவரத் தையே நம்பி இருக்கவில்லை. பெட்ரோல் போன்ற எண்ணெய் பொருட்களையும் நம்பியில்லை. அவற்றை அதிகமாக உபயோகிப்பது மில்லை. மேலும் அச்சிறு கிராமங்களில் இரவு நேரத்தில் எவ்வித வேலையும் இல்லாததால் அங்கு மின்சாரத் தேவையுமில்லை. அதுவே பெரிய நகரங்களிலும், வியாபாரத் தலங்கள் மற்றும்

படிப்பகம்

www.padippakam.com



விளையாட்டு மைதானங்களிலும் மின்சாரத்தை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். பெரிய நகரங்களில் பயணம் செய்ய வேண்டிய தூரம் அதிகமாக உள்ளதால் எரிபொருள் உபயோகம் மோட்டார் வாகனங்களில் பெரிதும் அதிகமாகவும், மிதிவண்டியின் உபயோகமோ அல்லது மிருகங்களைக்கொண்டு ஓட்டிவந்த வண்டிகளோ மிகவும் குறைந்துவிட்டது. சிறிய குடியிருப்புக்களில் சமையலுக்குத் தேவையான எரிபொருள் தேவைகள் குறைவாகவே உள்ளபடியால், அதன் ஒருபகுதி மரத்தினாலும், மறுபகுதி விவசாயக் கழிவுப்பொருட்களினாலும் சமாளிக்கப்படுகிறது. விவசாயக் கழிவுப் பொருட்கள் பெருநகரங்களில் உபயோகிக்கப்படுவதில்லை. மரங்களை எரிவாயுவாக உபயோகிப்பதால் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கப்படுவதோடு தொடர்ந்து காடுகளை அழிப்பதும் நடக்கிறது. அதுவே கரி; மண்ணெண்ணை அல்லது எரிவாயுவை உபயோகித்தால் நிலத்துக்கு அடியிலிருந்து கிடைக்கும் பொருட்களின் நிலைகுறைந்து விடுகிறது. கரியின் உபயோகத்தினால் புகைமாசு படர ஏதுவாகிறது. அதற்காகச் சமையலுக்கும் மின்சார எரிபொருள் சக்தியைப் பயன்படுத்தினால், அதன் விளைவும் மேலும் மின்நிலையங்களை அமைக்க அவசியமான நிலக்கரியை வெட்டியெடுக்கவேண்டிய சூழ்நிலை உருவாகி, சுற்றுச்சூழலுக்கு ஊறுவிளைவிக்கிறது. எனவே, எரிசக்தியும், எரிசக்தித் தேவையும் மற்றும் அதன் உபயோகமும் சுற்றுப்புறச் சூழலின் ஒரு முக்கிய கருவியாகக் குடியிருப்புத்திட்ட வடிவமைப்புகளுக்கு அமைகிறது.

### நகர வசீகரம்

நமது திட்டமுறை வடிவமைப்புகளில் நிலஉபயோகத்தைக் கருத்தில் கொண்டுள்ளோமே தவிர, இதுவரை ஒரு நகரத்தின் அழகுணர்ச்சி மிக்க வசீகர விளைவாக அதனைக் கருதவில்லை. தேசிய நகரமயமாக்கும் குழுவின் தலைவர் சார்ல்ஸ் கோரியா என்பவர் தனது குழு அறிக்கையில் கூறியுள்ளதாவது:

> வரலாற்றில் இதுவரை, குறிப்பாகக் கடந்த ஆண்டுகளில், நகரங்களுக்கும், கட்டடங்களுக்கும் ஒத்துப்போகும் சொந்தமானது — இயந்திரங்களுக்கும் அதன் உதிரிப் பொருட்களுக்கும் எவ்வகையான தொடர்பு இருந்ததோ அதுபோன்று இருக்கிறது. ஆகவே, ஒரு உதிரிப் பாகத்தைச் சேர்ப்பது என்பது எளிது. ஏனெனில் நமக்கு இயந்திரத்தின் முழுவடிவமும் தெரியும். உதாரணமாக ஒரு புதியவீட்டை ஜெய்சால்மரிலோ அல்லது ஹைதராபாத் கடைவீதியிலோ சேர்த்துவிடமுடியும். ஏனென்றால், இன்று நமது நகரமையங்கள், அமெரிக்க உள்நகரங்களைப்

படிப்பகம்

www.padippakam.com



போன்று, சிறு சிறு உதிரிப் பொருட்களால், சேர்க்கப்பட வேண்டிய ஒன்றாகக் காட்சியளிக்க வேண்டிய காரணம், யாருக் கும் எதுவும் புரியாமலும்–நிர்வகிக்கும் தன்மையற்றும்–இது என்ன இயந்திரம் என்று அடையாளம் காணமுடியாமல் இருப் பதன் காரணம்தான்.[5]

சுற்றுச்சூழலின் ஒரு முக்கியமான ஆழ்ந்த சிந்தனை, ஒரு நகரம் மொத்தமாக எவ்வாறு காட்சியளிக்கிறது என்பதே. அதன் பகுதிகளை முறைப்படுத்தினால், எவ்விதம் காட்சியளிக்கும் என்பதல்ல. நமது சிந்தனை ஒரு வீதி எவ்விதம் காட்சி அளிக்கவேண்டும் என் பதாகத்தான் இருக்கவேண்டுமேயல்லாது, ஒரு கட்டிடம் ஒரு தனி நிலத்தில், அதே வீதியில் எவ்விதம் இருக்கவேண்டும் என்பதல்ல. தேசிய நகரமயமாக்கும் குழுவின் அறிக்கையிலிருந்து ஒரு பகுதியை மீண்டும் ஆராய்வோம். ‘இந்தியாவில், ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ காலந்தொட்டே, விஜயநகர ஹம்பி வழியாக — ஜெய்சிங்கின் ஜெய்ப்பூர் வரை, சிற்ப நுண்கலைத் திறன்படி, சுற்றுச்சூழல் எவ்வாறு இருக்கவேண்டும் என்பது விளங்கியது. கட்டிடங்களைத் தோன்றிய இடங்களில் அமைப்பதற்கு எந்த வீதியிலும் உரிமம் வழங்கப்படவில்லை. அவற்றை எங்கெங்கு அமைத்தால், பொதுமக்களின் கவனத்தைக் கவரும் என்பதை கருத் திலிருத்தி உரிமம் வழங்கினர். எனவேதான், ஜெய்ப்பூர் நகரின் வீதிகளும் பொதுஇடங்களும் அழகே உருவெடுத்தது போன்று, மாபெரும் சிற்ப வேலைப்பாடுகளைத் தன்னகத்தே கொண்டும், அமைந்துள்ளது.[6]

உண்மையில் இந்தியாவில் நகரமையங்களில், வீதியழகு சிதைந்து காணப்படுகிறது. மேலும் சுற்றுப்புறச்சூழலின் விளைவு கள் மனிதனது அழகுணர்ச்சியை உணரும் தன்மையின்றி பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தொகுத்துக் கூறுவோமேயானால், இதுவரை திட்டமிடலில் உள்ள பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், நிலம் மற்றும் அதன் நகரமயமாக மாற்றியமைக்கும் முயற்சிகளில் சுழற்சி முறையினின்று நிலையானதொரு வடிவத்தில் குறிப்பாக இடம், நகர அளவு, தொண்டூழியங்கள், மாசு, வீடு, எரிபொருள் எதிர்பார்ப்பு மற்றும் நகரமயமாக்குதலில் எதிர்பார்ப்புகள் போன்றவை நகரமயமாக்குத லின் முக்கியநோக்கங்களாகக் கண்டறிந்தோம். நமது தற்போதைய திட்டமிடும் முறைகளின் வடிவமைப்பில் நகரக் குடியிருப்பினை அதனுள்ளேயே, ஒரு முழுமையான உருவமாகக் கருதிவந்தோம். உண்மையாக அம்மாதிரியான திட்டங்களை நிலத்தின் உபயோகத் துடனும் மற்ற நகர நடவடிக்கைகளுடனும் ஒப்பிட்டுப்பார்க்கையில்,

www.padippakam.com



இவை நகரவளர்ச்சியுடன் ஒத்த தன்மையதாகவோ பிற புறக் காரணிகளை உள்ளடக்கியதாகவோ இல்லாதது விளங்கும். இது போன்ற இரு பரிமாணத் திட்டமிடல் இறுதியில் இந்தியாவில் உள்ளதுபோல், திட்டமிட்ட பணக்கார நகரமாகவும், ஏழைகளுக்கு திட்டமிடாத ஒன்றுமாகமாறி இருவிளைவுகளைக் கொடுக்கிறது. திட்டவல்லுநர்கள், நிர்வாகிகள் சரிவர திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கவில்லை என்று குறை கூறுவதும், நிர்வாகிகள் திட்டவல்லுநரை உயிரற்ற திட்டங்களை உருவாக்கியதற்காகக் குறை கூறுவதுமாக, இறுதியில் இவர்களுக்கிடையே குடிமக்கள் தான் துன்புறவேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, நாம் நகரங் களை நிர்மானிக்கவேண்டுமானால், அதுவும் சுற்றுச்சூழலுடன் ஒத்ததாக இருக்கவேண்டுமென்றால், நிச்சயமாகக் குடிமக்களின் நலத்தினைக் கருத்தில்கொண்டு, தற்போதுள்ளபடி இல்லாமல் முழுவதும் மாறுபட்ட ஒரு திட்டஅணுகுமுறையையும், ஆராய்ச்சியையும், கையாள வேண்டும்.

## குறிப்புகள்

1. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம், பாகம் 2, அத்தியாயம் 2, பத்தி 12 - 61 பகுதி 4, அத்தியாயம் 10.
2. மேலது.
3. தேசிய நகரமயமாக்கும் குழுவின் அறிக்கை, ஆகஸ்ட், 1988, பாகம் 2, அத்தியாயம் 14.
4. மேலது பாகம் 2, பகுதி 5, அத்தியாயம் 14.
5. மேலது பாகம் 2, பகுதி 4, அத்தியாயம் 10.
6. மேலது.

படிப்பகம்

# 4

# திட்ட அணுகுமுறை

ஒவ்வொரு நகரக் குடியிருப்பும் இறுதியில் அதனைச் சுற்றியுள்ள பிற குடியிருப்புகளைச் சார்ந்தே செயல்பட வேண்டியுள்ளது. சிங்கப்பூர் — மலேசியாவை உதாசீனப்படுத்த முடியாது. ஏனென்றால், மலேசியா வின் ஒரு பகுதியான ஜோஹோர் என்ற மாநிலத்திலிருந்துதான் சிங்கப்பூர் தனது மொத்தக் குடிநீரையும் பெறுகிறது.

சந்தேகத்திற்குச் சிறிதும் இடமின்றி சிங்கப்பூரின் பொருளா தாரம் முன்னேற்றப் பாதையை எட்டிப் பிடித்துவிட்டது என்றாலும், அதே நேரத்தில் இவைகள் மறைந்துவிட்டால் சிங்கப்பூர் மிகவும் வறுமையான நகர — நாடாகிவிடும். அதுபோல, இந்தியாவிலும் ஒவ்வொரு நகரக் குடியிருப்பும் அதன் பொருளாதாரம் மற்றும் சமூகத் தொடர்புகள் அதன் மாகாணத்துடனும், நாட்டின் மற்ற மாநிலங்களுடனும் அமைத்துக் கொண்டுள்ளது. சுரு, ஜுன் ஜீனு மற்றும் ராஜஸ்தானிலுள்ள ஜெய்சால்மர் ஆகியவை தார்ப் பாலைவனத்திலுள்ள தனித்த நகரங்கள் அல்ல. அவைகள் பண் டைய வர்த்தகப் பாதைகளின் முக்கிய முடிச்சுகள். இந்த நகரங் களிலிருந்து வரும் வணிகர்கள் இந்தியாவில் தொழில் துறையிலும், வணிகத் துறையிலும் முன்னணியில் விளங்குகின்றனர். எல்லையில் பாகிஸ்தானுடன் நட்புறவு முன்னேற்றமடைந்தவுடன் ஜெய்சால்மரின் வளர்ச்சியை அதன் புதிய பகுதிகள் உருவானதைக் கொண்டே தெரிந்துகொள்ள முடிகிறது. இந்த வளர்ச்சி ஜெய்சால்மரின் நகர அமைப்பின் நிலையை மாற்றுகிறது. மக்கள்தொகை அதிகரிப்பு அங்கு பாலைவன உயிரின வாழ்க்கைச் சூழலை பாதித்துள்ளது.

www.padippakam.com



மேலும் இயற்கை நீர்நிலைகள் மாசுபட்டுள்ளன. ஜெய்சால்மரின் இந்த உதாரணம் இங்கு அளிக்கப்பட்டதன் காரணம், நகரத் திட்டம் மட்டுமே எந்த விதத்திலும் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பு அளிக்காது என்பதை எடுத்துக்காட்டவேயாகும். முன்பு கூறியதுபோல மாகாணத் திட்டம் முழுவதையும் ஒன்றாகக் கருத்தில் கொண்டுதான் சுற்றுச் சூழலைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்குப் பிறகுதான் அந்த நகரத் திற்கு ஒரு விரிவான முன்னேற்றத் திட்டம் தீட்டப்பட வேண்டும்.

தேசியத் தலைநகர்ப் பிரிவுத் திட்டம் (NCR) பொதுவாக முன்னேற்றமடையும் மாகாணங்களின் முதல் முயற்சியாக உள்ளது. துரதிஷ்டவசமாக இந்தத் திட்டம் சில முக்கியக் குறைபாடுகளின் காரணமாகப் பாதிக்கப்பட்டது. ஒரு திட்டப் பயிற்சியாகத் தொடங்கியது முதலில் அந்த மாகாணத்தைக் கருத்தில் கொள்ளாமல், தில்லி அடக்கமாக, ஒவ்வொரு தனிப்பட்ட நகரக் குடியிருப்பையும் அதனுடன் ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறது. தில்லியில் தொடங்கி, பிறகு ஒவ்வொரு தனிப்பட்ட நகரக் குடியிருப்பையும் ஆய்வு செய்துள்ளது. அம்மாகாணத்தின் முக்கிய நோக்கங்களை உதாசீனப்படுத்தியவாறும் அழித்தவாறும் அமைந்தது. இந்த நகரத் தலைநகர்ப் பிரிவுத் திட்டம் தன்னகத்தே தில்லியின் வளர்ச்சி யினைக் கட்டுப்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டதால், இதன் மூலதனத்தை, மற்ற நகரங்களுக்குஇத்திட்டத்தால், முன்னமே தேர்வு செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஒதுக்கிவிட்டது. அதனால் தான் இன்றும் இத்திட்டம் ஒரு பரந்த கண்ணோட்டத்துடன் அம் மாகாணத்தில் செயல்படுத்த முடியவில்லை. எனவே, இதனை ஒரு மாகாணத் திட்டமாகக் கருதுவது தவறான சொல் வழக்காகும்.

இதுவல்லாது வேறு முயற்சிகளும் மாகாண அளவில் இருந் தது. உதாரணமாக பம்பாய்த் திட்டம், பம்பாய் பெருநகர் மண்டல முன்னேற்ற வாரியத்தாலும்; அடிப்படை முன்னேற்றத் திட்டம், கல்கதத்தாவிற்கும்; சென்னைக்கு,சென்னைப் பெருநகர் மண்டலத் திட்டம் என்ற பெயரிலும் இருந்தது. பம்பாய்த் திட்டம் தனது முக்கிய நகர வாரியத்தின் செயல் உறவு முறைகளில் பம்பாய் பெரு நகர மாநகராட்சியுடன் குறைபாடுகளைக் கொண்டதாயிற்று. மேலும், இதன் செயல்பாடுகள் இம்மண்டலத்திலேயே இயங்கி வந்த மற்ற வாரியங்களால், குறிப்பாக நகர மற்றும் தொழில் முன்னேற்ற நிறுவனம், தானா பெருநகர் மாநகராட்சி, கல்யாண் பெருநகர் மாநகராட்சி மற்றும் வேறுபல மாநகராட்சிகளால், நிர்வாக வசதியின் அவசியத்தினால் பிரிக்கப்பட்டதால்,சிக்கல்கள் உருவாயின. ஆகவே, தில்லியைப் போன்று மற்றப் பகுதிகளிலும் இதன் செயல்பாடு தோல்வியைத் தழுவியது. கல்கத்தாவிலும், சென்னையிலும் மண்டலத் திட்டங்கள் முதலீட்டு நிகழ்ச்சிகளாகவே

www.padippakam.com



இருந்ததே தவிர, பரந்து விரிந்த உருவத்தை அடையவில்லை. ஆகவே இதனுடன் மற்ற நகர மையங்களும் முன்னேற்றம் அடையவில்லை.

இதனால்தான் மண்டலத் திட்டத்தினை அதன் செயல்பாட்டு முறை மூலமாகப் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியத்துவம் ஏற்படுகிறது. உதாரணமாக, ஒரு விவசாய ரீதியான செழுமை நிறைந்த ஒரு கிராமத்தில் முக்கியச் செயல்பாடு சந்தைக்குத் தேவையான பொருட்களை அதிகமாகத் தயாரித்தலே. அதுபோல ஒரு சிறுநகரத்தின் முக்கிய நிகழ்ச்சி தயாரித்தவற்றிற்கு விற்பனை மையங்களை ஏற்படுத்திக் கொடுப்பதே. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நடுநிலை நகரத்தின் முக்கியச் செயல் அப்பொருட்களை வகைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்தி, பெருநகரங்களுக்கு அனுப்புவதே. ஒரு பெருநகரின் முக்கியச் செயல்பாடு அப்பொருட்களை வாங்கும் நுகர்வோரையும் — சந்தையையும் ஒருங்கிணைப்பதும் மற்றும் அங்குள்ள மக்கள்தொகைக்கு மண்டலத்திலேயே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே. இங்குதான் பலவகையான குடியிருப்புக்களின் செயல் உறவு முறைகளும் படிப்படியாக அமைதலும், மொத்த அமைப்புடன் பல்வேறு நிலைகளில் இணைத்துக் கொள்வதும் நிகழ்கிறது. ஆகவே, இம்மாதிரியான மண்டலத்திற்குள்ளான திட்டமிடல் தனது நடுநிலையினை எல்லாவகையிலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கம் கொண்டதாகவும், ஒவ்வொரு குடியிருப்பும் செயல்பாடுகளில் திறமையாயிருத்தலும் வேண்டும். ஒரு மண்டலம் அங்கு எளிதில் கிடைக்கக் கூடிய ஆதார வளங்களைக் கொண்டே செயல்படுகிறது. மேலும் ஆதார வளங்களை முழு அளவில் பயன்படுத்தும் தொழிற்சாலைகளை நிறுவி குடியிருப்புக்களை அதனைச் சூழ்ந்துள்ள இடங்களில் உருவாக்குதல் வேண்டும். பிலாயின் வரலாற்றைப் பார்த்தால், பிற்படுத்தப்பட்ட மண்டலத்தில் இரும்புத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலதனமும், பொருட்களும் முதலீடு செய்யப்பட்டுள்ளது விளங்கும். ஆனால் அதனைச் சுற்றியிருந்த பிரதேசங்கள் செயல் வடிவத்தில் இதனுடன் உறவுமுறை கொள்ளாததன் காரணமாக இங்கு தயாராகும் பொருட்கள் வெகு தொலைவிலுள்ள சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. உதாரணமாக, முட்டை — அஜ்மீரத்திலிருந்து 1000 கி.மீ. தூரத்திலிருந்து — பிலாய்க்குக் கொண்டு வரப்பட்டது. இங்குதான் ஒருதிட்டம் அதனைச் சுற்றியுள்ள இடங்களின் முன்னேற்ற மண்டலத்திற்காக முக்கிய நடவடிக்கை மையத்துடன் இணைக்கப் பெற வேண்டியதன் அவசியம் விளங்கும். ஆனால், அதே நேரத்தில், அங்கு உருவாகும் தொழிற்கூடங்களின் சுற்றுச்சூழலின் மோசமான விளைவுகளைக் குறைக்க வழிமுறைகள் செய்தால், அதுவே அந்த மண்டலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



மண்டல வரையரைத் திட்டம் திட்ட வல்லுநரை நில உபயோக முறைகளை இயற்கைக்குப் பாதகமாக இல்லாமலும், சுற்றுச் சூழலுக்கும் கெடுதலை விளைவிக்காமலும், இயற்கையின் ஆதார வளங்களாகிய நீர், காடுகள் மற்றும் விவசாய நிலங்கள், தரிசில் நிலங்கள் மற்றும் மலைகள் போன்றவற்றை நகரமயமாக்குதலுக்குப் பயன்படுத்தும் சாத்தியக்கூறுகளை உருவாக்க உதவுகிறது.

அப்படியானால் ஒரு மண்டலத் திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது ஆய்தற்குரியது. ஒரு நகர திட்ட வல்லுநர், தற்போதுள்ள நரகத் திட்டமுறைகளில் பயிற்சி பெற்றும், பெருமளவில் வெளிப்படையாகத் திட்டங்களை உருவாக்கியும் தலைமைத் திட்டத்தில் கூறியுள்ளவாறு முன்னேற்றத் திட்டங்களாகவும் அமைக்க முயற்சிக்கலாம். இது நேரமெடுக்கும் ஒன்றாக மட்டுமல்லாமல் நிச்சயமில்லாத மதிப்பீடாகவும் இருக்கலாம். எனவே, மண்டலத் திட்டத்தை உருவாக்குதலின் அடிப்படை என்னவென்றால், ஸ்தல விவரத்தை உணர்தல், இயற்கையின் செழுமை மற்றும் சுற்றுப்புற உணர்வுடைய நிலப் பரப்பைத் தெரிவு செய்தலுமாகும். சுற்றுப்புறச் சூழலுக்குத் தீங்கிழைக்காத வகையில் நடவடிக்கையின் வகைகளை ஆதரித்துப் புரிந்து கொண்டு செயல்படும் தலைமையை வளரச் செய்ய வேண்டும். திட்டமிடுதலின் வகைகளில் முக்கிய பங்கேற்பது நடவடிக்கைத் தலமாகும். நடவடிக்கைத் தலத்தின் கீழ் முடிந்தவரை செழிப்பு நிலங்களை நகர உபயோகத்திக்கு மாற்றியமைக்கும் எண்ணம் இருக்கக் கூடாது. சுற்றுப்புற உணர்வுடைய நிலப்பரப்பை மண்டலத்தின் எல்லாப் பகுதிகளுடனும் இணைப்பதும், மற்ற மண்டலங்களுடன் ஒத்துப் போவதும் அவசியம். இந்த இணைப்புக்கள் முன்னேற்றமடைந்தால் மண்டலத்தின் நடுநிலைத் தன்மை வளர்ச்சியடையும். அதுவே சுற்றுப்புறத்தை நகரமயமாக்க ஏற்ற வழிவகுக்கும். எந்த ஒரு மண்டலத் திட்டமும், சுற்றுப்புற உணர்வுடைய நிலப்பரப்பை அடையாளம் காட்டி, நடவடிக்கைத் தலத் திட்டத்தையொட்டி மண்டலத்தின் இயற்கைச் சூழலைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தெளிவாகக் கூறி, முன்னேற்றமடையச் செய்தல் வேண்டும். ஒரு மண்டலத் திட்டம் இதைவிட விரிவாக அமையாது.

*நில உபயோகத் திட்டமிடல்*

மண்டலத் திட்டத்தைத் தயாரித்தலுக்கும் மற்றும் அதன் பிறகு மேலும் விரிவான குடியிருப்புத் திட்டத்தின் போதும், அடிப்படைத் தேவைகள் நிலம், அதன் முக்கிய அம்சங்கள், அதன் தற்போதைய உபயோகம் மற்றும் அதன் திட்டமிட்ட உபயோகம் என்பவையே. ஒவ்வொரு சுற்றுப்புறச் சூழலின் ஆதாயமும் அல்லது நட்டமும் நாம் நமது நிலப்பரப்புக்களை எந்த வகையில் உபயோகப்படுத்து

www.padippakam.com



கின்றோம் என்பதைப் பொறுத்ததே. தற்போதுள்ள நில உபயோகத் திட்டமுறை மண்டலமாக்குதல், அதாவது நிலப்பரப்புக்களை குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக பதிவு செய்து கொள்ளுதலைச் சார்ந்தது..தொழிற்சாலை, வீடு, வணிகம், பொழுது போக்கு, மற்றும் பல தற்போதைய திட்டமதிப்பீடுகளும் தகவல்களும் நில உபயோகத் திட்டத்தினை ஆராய்ந்தால் போதுமானதாக இல்லை. அத்திட்டமிடுதல் — உபயோகப்படுத்துதல் ஆகிய திட்டக் கலையின் நிலை மற்றும் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளின் அடித்தளம் இரண்டும் போதுமான அளவு இல்லாதது ஆகும். நில சம்பந்தப்பட்ட எந்தத் தகவலும், குறிப்பாக நகரத்தின் நிலம், ஆதாரமுள்ளதாக இல்லை. தேசிய நகரமயமாக்கும் குழு இவை பற்றி அதிகமாகக் கூறியுள்ளது.

கிராமப்புறச் சூழ்நிலை இந்தியாவில், வித்தியாசமானது. இதைத்தான் தேசிய நகரமயமாக்கும் குழு இங்கு விவரிக்கிறது.

> திரும்பவும் பழைய உதாரணமான கிராம நிலத்தில் குடியிருக்கும் முறை, இந்தியாவில் ஒவ்வொரு முப்பது ஆண்டுகளுக்கும் ஒருமுறை, காரன் வாலிஸ் பிரபுவின் நிரந்தரக் குடியிருப்புப் பிரிவு நீங்கலாக மண் வகைகள், மற்றும் நிலத்தின் உற்பத்தித் திறன் மற்றும் மதிப்பு, பயிரிடும் விதங்கள் மற்றும் உரிமப் பத்திரத்தின் தயாரிப்பு முதலியவற்றை ஊர்ஜிதப்படுத்தின. ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு வயல் புத்தகம் மற்றும் ஒன்றோ அல்லது அதிகமான ஆராய்ச்சி வரைபடம், நிலத்தின் எல்லைகளைக் குறித்தாகவும், சான்றாகவும் இருக்கும். மண்வகையை அடிப்படையாகவும் மற்றும் உற்பத்தியையும் கொண்டு கிராம மேலாண்மைத் திட்டத்தைத் தயாரிப்பது மிக எளிதாக இருந்தது. கட்டுவதற்கு ஏற்ற இடம், மேய்ச்சல் இடம், மரங்கள், களத்து மேடுகள், ஆடு மாடுகள் ஓய்வெடுக்கும் வரப்புகள் முதலியன சான்றுகளாக உள்ளன. அம்மாதிரியானதொரு திட்டம், கிராம நிலச்சான்றின் ஒரு பகுதியாகவும் இருந்து வரும். மேலும், தரிசல் நிலங்கள் மட்டும்தான் விவசாயம் அல்லாத பிற உபயோகங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வந்தனர். இன்னும் சிறிது அதிகமாகச் சொன்னால் மாநில விவசாயத் துறையினால் ஒரு வகையான நிலத்தில் இந்த விதமான பயிர்தான் விளைச்சலைத் தரும் என்று தராதரப்படுத்தித் திட்டங்களைத் தயாரிக்க முடியும். துரதிருஷ்டவசமாக நாம் விவசாயத்தை விட்டு விலகிச் செல்லும்போது, நிலத் திட்டமிடல் இல்லாத நிலை ஏற்படுகிறது. மண்டல நகர நிலையிலும் இதனால், ஒரு நிலம் எந்த ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையில் முன்பு ஈடுபட்டிருந்ததோ அதையே அதற்குக் கொடுத்து விட்டனர்.[1]

www.padippakam.com



நில உபயோக விவரமில்லாமல் சுற்றுப்புற உணர்வுடைய பரப்புக்களை அடையாளம் காட்டவோ அல்லது நிலஉபயோகத் திட்டம் தயாரிக்கவோ முடியாது. இது நரகமயமாக்குதலுக்கு ஊக்க மளித்தாலும் இது சுற்றுச்சூழலுக்கு மோசமான விளைவுகளைக் கொடுக்கக் கூடியது. நில உபயோகத் திட்ட விபரத்தினை தனது தேவைக் கேற்பத் தயார் செய்து கொள்ளவே தேசிய நெடுந்தூரப் புலனாய்வுக் கழகத்தாலோ இந்தியாவின் வரைபடக் கழகத்தாலோ இயலவில்லை. எனவே, நிலச் சம்பந்தப்பட்ட விவரங்களை முதலில் தேவைக்கு ஏற்ப சேகரிக்க, தனித்துறை ஒன்றை இந்தியக் குடியிருப்பு அளவாய்வுக் கழகம் துவக்க உத்தேசிப்பது நலம். இதனையே தேசிய நகரமயமாக்கும் குழுவும் தெரிவிக்கின்றது. இந்தியக் குடியிருப்பு அளவாய்வுக் கழகம் நிலங்களை விஞ்ஞான முறைப்படி அளவு செய்து முறைப்படி அவற்றை வகைப்படுத்தி, ஒவ்வொரு உப யோகத்தையும் ஏற்றாற்போல் தெரிவிக்கும். ஆரம்பத்தில் இந்த இந்தியக் குடியிருப்பு அளவாய்வுக் கழகம் ஒவ்வொரு நகர குடி யிருப்புக்கும் பின்னணியிலுள்ள கிராமப் பகுதிகளைக் கண் டெடுத்தலைத் தனது செயலாகக் கொள்ளலாம். இந்தியக் குடியிருப்பு அளவாய்வுக் கழகம் தனது வீச்சினைப் பற்றியும் அதன் நகரச் செல் வாக்கையும் குறித்து ஒரு ஆராய்ச்சி செய்ய வேண்டும். இதனை ஒரு நவீன ஆய்வு மற்றும் வரைபடத்தின் உத்திகள் மூலமும், விண் வெளிப் படமெடுப்பு மூலமும் செய்யலாம். அடித்தள வரை படங்கள் தயாரிப்புப் பிரிவு தன்னகத்தே நிலப்படத்துக்குரிய பின்னணியினை எந்த நில அளவிற்கும் ஏற்ற வகையில் வைத்திருக்கும். ஒவ்வொரு மாநிலமும் நகர நிலச் சான்று இயக்கங்களை நிறுவுதல் வேண்டும். இந்த இயக்கம் அடித்தள வரைபடங்களை உபயோகித்து விவரமான அளவாய்வுகளை நடத்துதல், வயல் புத்தகங்களைத் தயாரித்தல், நில உரிமை விவரப் பட்டியலின் குறிப்பெடுத்தல் மற்றும் ஒவ் வொரு நிலத்தின் வேலை மற்றும் உபயோகங்களைக் கண்டறிதலை யும் தனது முக்கிய செயலாகக் கொள்ளலாம். இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு நகர நிலச்சான்று முறையும், வரைபடங்களையும், பதிவேடுகளையும் ஒன்றுக்கு ஒன்று சரிப்பட்டதாக வைத்துக் கொள்ள வேண்டும். மண்டல அளவில் இந்த வரைபடங்கள் விரும்பத்தகாத உபயோகங்களினால் விளையக்கூடிய ஆக்கிரமித்தலையும் கோடிட்டுக்காட்டிச் சுற்றுப்புற உணர்வு கொண்ட பகுதிகளை எடுத்துக்காட்ட வேண்டும். இம் மாதிரியான வரைபடங்கள் மற்றும் நிகழ்ச்சி விரிவாக்கப் பதிவேடு களின் உதவியினால், விஞ்ஞான ரீதியான இடங்கள், மற்றும் மண்டலங்களின் விரிவான நில உபயோகத்தைக் குடியிருப்பு நிலையில் திட்டமிடுதலுக்கு வழிவகுக்கிறது.

குஜராத்தின் இரு தொழில் முன்னேற்றப் பகுதிகளை நோக்குவோம். இந்தோருக்கு அடுத்த பீதாம்பூரின் நிலத்தையும் அது சார்ந்த சுற்றுப் புற நடுநிலையும் சரிவரப் புரிந்து இருந்தால், இடத்தைப் பொறுத்த

படிப்பகம்

www.padippakam.com



கொள்கை முழுவதும் மாறுபட்டதாக இருக்கும். உதாரணமாக, பீதாம்பூர் மத்தியப் பிரதேசத்தின் இரண்டு முக்கிய நகர மையயங்களாக இந்தோருக்கும்—மோவுக்கும் இடைப்பட்டிருப்பதால், தொழில்துறை வளர்ச்சிமையமாகத் தேர்வு செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி, தொழில்நுட்ப ரீதியில் பார்த்தால், இது ஒரு பிற்படுத்தப்பட்ட தார் என்னும் மாவட்டத்தில் அமைந்துள்ளதும் ஒரு முக்கியமான காரணமாகும். ஆனால் இந்தோருக்கு அருகாமையிலிருக்கும் தாரின் பகுதியும் பிற்படுத்தப்பட்டதுதானா என்பதைக் கண்டறியவில்லை. பீதாம்பூரில் இருக்கும் நிலம் மேடுபள்ளமாகவும் அதன் குன்றுகளின் சரிவுகள் தரிசலாகவும் கருஞ்சிவப்பு மண்ணைக் கொண்டதாகவும், அதே நேரத்தில் அதன் பள்ளத்தாக்குகளில் அமைந்த குழிவுகள் மண் அரிப்பின் மூலம் சரிவிலிருந்து கொண்டு வரப்பட்ட மண்ணைத் தேக்கிவைத்து உருமாற்றம் செய்து கடினமான கறுப்புக் களிமண்ணாக்கியுள்ளது. இந்தப் பள்ளத்தில்தான் பயிரிடுதலுக்குத் தேவையான நல்ல மண்ணும், நிலத்தடி நீரும் உள்ளது. தொழிற்சாலைக்குத் திட்டமிடும் அமைப்பு எந்த ஒரு அனுபவமும் அற்ற வகையில் இங்கு இடத்தை வாங்கியதால் நல்ல செழுமையான பயிரிட உபயோகமுள்ள இந்த நிலங்கள் தொழிற்சாலைக்கும், இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குன்றின் சரிவுகளுக்கும், மேட்டு நிலங்களுக்கும் விரட்டப்பட்டனர். இது பூதாம்பூருக்கும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் — சுற்றுப்புறச் சூழலுக்கும்—கொடிய விளைவுகள் ஏற்படுத்துகிறது. மேலும், விவசாயிகள் செழுமையான நிலங்கள் பறிக்கப்பட்டதாலும், வேறு நிலங்களுக்கு, அதாவது செழுமையற்ற நிலங்களுக்கு மாற்றப்பட்டதால், தங்களுடைய ஜீவனத்தை இழந்தனர். குன்றின்சரிவுகளில் மேற்பரப்பு பாறை நீக்கம் செய்யப்பட்டதால், இயற்கைத் தாவரவளர்ச்சி குன்றிப்போய் உழுவதற்கு அடிப்படையற்றதாக்கியது. மேலும், நகரமாக்கப்பட்டதால், அப்பள்ளத்தாக்கில் அமையப்பெற்ற தண்ணீரைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருந்தால், நீராட்சிமுறை பாதிப்பிற்கு உள்ளாகிறது. சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டதால், பூமிக்கடியில் உள்ள நிலத்தடிநீர் சுழற்சி முறையை இழந்துவிட்டது. தார் மாவட்டமோ அல்லது பீதாம்பூரோ இந்தத் தொழிற்சாலையும்—நகரமைப்பும்—மோவில் நீட்டிப்பானதனால், எந்த ஒரு பொருளாதார ஆதாயத்தையும் அடையவில்லை. இதுவே ஒரு ஒழுங்கான மாகாணத் திட்டமாகத் தயாரித்து இருந்தால், அதிலும் பிற்படுத்தப்பட்ட நிலங்களும், அதன் வளப்பொருட்களும் உணரப்பட்டிருந்தால் ஒரு வேளை இந்தத் தொழிற்சாலையும்—நகரமைப்பு—பீதாம்பூரில் இல்லாமல், தாரின் வேறு பகுதியில் அமைந்திருக்கும். இப்பொழுதுள்ள இந்தயிடமே நிலையாக இருந்திருந்தால், செழுமையற்ற தரிசலிலும்,

படிப்பகம்

www.padippakam.com



எல்லைப் பகுதியிலுமாக நகர நடவடிக்கைகள் இடம்பெற்று இருக்கக் கூடும். அதுமட்டுமின்றி கழிவுப்பொருட்களை வெளியேற்றத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு செழுமையான நிலப்பரப்புகளில் பயிரிட ஏற்பாடுகள் செய்து இருக்கக்கூடும். குன்றுக்கும், பள்ளத் தாக்கிற்கும் இடைப்பட்ட சரிவுகள் நகர முன்னேற்றத்திற்கு ஏதுவாகக் காடுகளாகவும், சுற்றுச்சூழலுக்கு அழிவு இல்லாத மேம்பாட்டைத் தரக்கூடியதாகவும் செய்து இருக்கலாம்.

குஜராத்தில், நில உபயோகத்தின் பயனைப் போதுமான அளவிற்குத் தேவையைப் புரிந்து கொண்டு திட்டமிடாததால், சுற்றுபுறச் சூழலுக்கு அதிகப்படியான கேடுகள் விளைந்துள்ளன. குஜராத்திற்கும், சௌராட்டிரத்திற்கும் இடையேயுள்ள பகுதி களில்தான், குறிப்பாகச் சொன்னால், பால் எனப்படும் இடத்தில் உள்ள கார்பட்டி என்னும் பகுதியில்தான், நிலங்கள் தரிசலாகவும், தாவர வளர்ச்சிக்குப் பயன்படாததாகவும் உள்ளது. குஜராத்தில் தண்ணீர் தட்டுப்பாடும் இருந்து வருவதால், சர்தார் சரோவர் செயல் திட்டத்திற்கு ஏராளமான தொகை செலவிடப்படுகிறது. சுற்றுப்புறத்திற்குஅளவிட முடியாத அழிவினை நர்மதா பள்ளத் தாக்கிற்கும் இது உண்டாக்குகிறது. தெற்கு குஜராத், அதிக அளவு தண்ணீரையும் நில வளத்தையும், கொண்டு இருந்த போதிலும் — நிலங்களை விவசாயத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொண்டு இருப்பதுபுரியாத புதிராக ஒருபுறம் இருக்கையில் — மறுபுறம் அதனையடுத்த பகுதிகளில், அதாவது மேட்டு நிலங்களில், தண்ணீர் செயற்கை முறையில் நிரப்பப்படுவது மேலும் சுற்றுச்சூழல் பிரச் சினையை அதிகப்படுத்துகிறது. சரியான நிலஉபயோகத் திட்ட மிடுதல் குஜராத்தில் எங்கு அதிகம் தண்ணீர் இருக்கிறதோ அங்கு விவசாயத்தை வளர்ச்சியடையச் செய்வதாகும். அதே சமயம் நகரமயமாக்கம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை கார்பட்டி போன்ற வேறெந்த உபயோகத்துக்கும் உதவாத நிலப் பரப்புப் பகுதிகளில் அமைப்பதுமேயாகும். தரிசலில் நீர்ப்பாய்ச்சி விளைநிலமாக்கியும் கழிவறைகள் போன்ற உள்ளமைப்புக்களை யும் ஏற்பாடு செய்து கொள்ளலாம். மாநிலத்தில் உள்ள நிலம் பற்றிய தகவலைச் சரிவரப் புரிந்து கொள்ளாத அரசு, தன்னிச்சையாகப் பொறியியல் தீர்வுகளை அளிக்கத் துவங்கியபோது, இயற்கை அதன் நிலையிலிருந்து அதற்கு எதிராகப் பிரச்சினைகளை உரு வாக்கியது. இன்றைய குஜராத் அரசு மாநிலத்தில் நிலஉபயோக நடுநிலைத் தன்மையை முற்றிலுமாக அழித்துவிட்டது.

மண்டலத் திட்டம் போன்றல்லாமல் நில உபயோகத்திட்டம் அர்த்தமுள்ளதாகவும் — உண்மையானதாகவும் — இருந்திருக்கும் என்று எவரும் கருதுவர். ஆனால், துரதிருஷ்டவசமாக, நமது திட்ட

www.padippakam.com



மிடுவோருக்கு திசையமைப்பு, பயிற்சியளித்தல் மற்றும் முடிவு எடுத்தல் போன்ற செயல்பாடுகள் மேல் நாடுகளைத் தழுவியுள்ளதால், நாம் இந்தியச் சூழ்நிலைக்குத் தகுந்த நகர — நில உபயோகங்களைத் திட்டமிட முடியாத நிலையில் இருக்கின்றோம். நமது தற்போதுள்ள எல்லாத் திட்டமும், மண்டலமாக்குதலையே நோக்கங்களாகக் கொண்டுள்ளது. தனித்த மாகாணமாக, சரியான சூழ்நிலையில் பிரித்தாலும், நகரீயங்கள் இனிமையான அமைதியான சூழ்நிலையில் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், வீட்டிற்கும் -- பணித்தலத்திற்கும் இடையே தேவையான நகரப் போக்குவரத்து முறையை அமைத்தல் அவசியமாகிறது. எனவே, தனிப்பட்ட மண்டலமாக்கும் திட்டம் மிக அகலமான சாலைகளின் அவசியத்தையும், அதிக வாகனங்களையும், மற்றும் பல்முனைப் போக்குவரத்து முறையையும், எதிர்நோக்குகின்றது. இவையனைத்தும் நிலத்தினை மாற்றியமைத்து சுற்றுப்புற நடுநிலையினைக் குலைத்துவிடுகிறது. அதற்கும் மேலாக, நமது நகரங்களில் வசிக்கும் ஏழை மக்கள் பயணச் செலவைச் சமாளிக்க முடியாததால், அந்த தனிப்பட்ட மண்டலத்திலேயே திட்டமிடப்படாமல் தங்களது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டு அம்மண்டலத்தின் அழகினைக் கெடுத்து, சுற்றுப்புறச் சூழலுக்கு ஊறு விளைவிக்கின்றனர். ஆகவே, திட்டம் தவறானதாகிறது. எனவே, நமது திட்டமிடுவோர் தனித்த மண்டலமாக்கும் முறையைக் கைவிட்டு, இந்தியாவிற்கு உகுந்த வழிமுறைகளைப் பின்பற்ற முயலவேண்டும்.

நாம் ஏன் நகர மையங்களிலும் கிராமங்களைப் போன்ற ஒருங்கிணைப்புத் திட்ட முறையினை உபயோகிக்கக்கூடாது என்பதற்குக் காரணம் எதுவும் கூறப்படவில்லை. நகரத்தினை ஒரு தனித்தன்மையடைந்த, பல மண்டலங்கள் இணைந்த மையமாகப் பார்ப்பதைத் தவிர்த்து, நாம் ஏன் அதையே மிகவும் எளிதான அமைப்பைக் கொண்ட, அதனுள்ள பல வேலை வாய்ப்புக்களைக் கொண்ட, தன்னிறைவு அடைந்த, கூட்டு மையங்களைக் கொண்டதுமாக, வீட்டுவசதி மற்றும் தொண்டூழியம் நிறைந்த, குடிமக்கள் தன்னிச்சையாக நடந்தோ, மிதிவண்டியிலோ அல்லது உள்நாட்டுப் போக்குவரத்து மூலமாகவோ, பயணம் செய்யக் கூடிய நகரக் குடியிருப்பாக நினைத்துப் பார்க்கக் கூடாது? அதுமட்டுமன்றி, அங்கு இன்னும் சில அதிக நிலையிலான செயல்பாடுகளும் இருத்தல் வேண்டும். உதாரணமாக, பல்கலைக் கழகம், மருத்துவமனைகள் நகரம் மற்றும் மாநில மேலாண்மையங்கள் மற்றும் அதன் அலுவலகங்கள், சிறப்பு மிகு சந்தைகள் மற்றும் வணிக உயர்நிலை மையங்கள், நகர மையங்களுடன் இணைந்து இருக்கலாம். எப்படியாயினும், இதனை மொத்த மக்கள் தொகையில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டுமானதாகவே கருதுதல் வேண்டும். ஏனெனில்,

www.padippakam.com



இதையே அங்குள்ள மொத்த மக்கள்தொகைக்குமாகத் திட்டமிட்டால் நிர்வாகச் சீர்கேடுகள் உருவாகலாம். தன்னிறைவு அடைந்த நிலையில் ஆட்சியுரிமையை பன்முகப்படுத்துதலையும் இலக்காக கொள்ளலாம். மேலும் தங்களுக்குள்ளாகவே குறைந்த விலையில் தண்ணீர் வழங்குதலையும், ஆரோக்கியமான வாழ்வின் உபகரணங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள வகை செய்யலாம். பிறகு நிலஉபயோகத்தை சூற்றுச்சூழலுக்கு தகுந்தவாறு, பசுமையான நிலங்களைக் கொத்தாக வைத்துக் கொண்டு திட்டமிடலாம். 2001-க்காக தில்லியின் செயலாக்கத் திட்டத்தை பார்க்கும் யாருக்கும் பயம் அதிகமாகும் என்பதில் ஐயமில்லை. அதில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால், விரிவாக்கப்பட்ட தில்லிக்கு மேலும் 24,000 ஹெக்டேர் விவசாய நிலங்களையும் 13,000 ஹெக்டேர் நிலத்தையும் நகர எல்லைக் குள்ளாகவும் — தலைநகர வளாகத்திற்குள்ளுமாக வாங்கியாக வேண்டும் என்பதே. இதிலிருந்து தில்லிக்கான இரண்டாவது செயலாக்கத் திட்டத்தில் சுற்றுப்புறச் சூழ்நிலையும் நிலஉபயோகமும் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

தற்போதுள்ள குடியிருப்பின் அடர்த்தியையும், அமைப்பு வடிவத்தையும் கவனித்துப் பிறகு இதனை மாற்றி அமைக்க முடியாதா என்ற கேள்விக்குப் பின்னால் அங்கிருக்கும் மக்களின் தற்போதைய வாழ்க்கைத் தரம் அதற்கு ஈடுகொடுக்குமா என்பதையும் ஆராய வேண்டும். அது மட்டுமன்றி தற்போதுள்ள நில உபயோகங்களைக் கூர்ந்து கவனித்து அதனை எந்த அளவுக்கு திரும்பவும் உபயோகிக்கலாம் என்பதையோ அல்லது சூழற்சி முறையில் தவிர்க்கலாம் என்பதையோ எடுத்துக்கூற வேண்டும். கல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் என்ற புதிய நகராட்சி வட்டாரம் பள்ளங்களிலும் — சதுப்புக்களிலும் மண்ணிட்டு நிலத்தினை உயர்த்தி வெள்ளப்பெருக்கு காலத்தில் நிவாரண மையமாக இருக்க வேண்டிய விதத்தில் உருவாக்கப்பட்டது. இதனால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் தாவரக் கலாச்சாரத்திற்கும் இடைஞ்சலாக அமைந்ததுடன் மீனவர் பலரை வேலையின்றிச் செய்து விட்டது. அதே நேரத்தில் கல்கத்தாவில் வேண்டிய அளவிற்கு நிலம் இருந்தது மட்டுமல்லாமல் அவைகள் குறைவாகவோ அல்லது உபயோகமற்றோ இருந்தது. உதாரணமாக, தாங்க்ரா என்ற இடத்தில் உள்ள காட்டல்ஸ் என்ற இடத்தில், தற்போது அடைக்கப்பட்டுள்ள பெங்கால் போட்டாரீஸ் அமைந்துள்ள நிலம் மற்றும் 100 ஹெக்டேருக்கும் மேலான துறைமுக நிலமும் சுழற்சிக்குத் தயாராக இருந்தது. அதுபோலச் சணல் ஆலைகள் அமைந்துள்ள ஹீக்ளி நிலத்தில் மாற்று உபயோகத்திற்குப் பயன்படும் வகையில் இந்த

www.padippakam.com



ஆலைகளைப் பிற்படுத்தப்பட்ட வேறு மாவட்டத்திற்கு மாற்றலாம். இந்த நிலத்தைச் சரிவர உபயோகித்தால் கல்கத்தாவில், பசுமையான நிலத்தை ஆக்கிரமிக்காமல், உபரி நிலப்பரப்பு கிட்டுவதோடல்லாமல் அம்மாதிரியான நிலங்களினால் அதிகப் பணபெருக்கமும் நில மதிப்பீட்டினால் அடையலாம். ஹைதராபாத்தில் உள்ள முஸ்க் மகல் மற்றும் ஜீப்ளி ஹில்ஸ் என்ற ஒரு சுற்றுப்புற உணர்வுடைய பகுதிகளில் புதிய திட்டங்கள் உருவாகியுள்ளன. தற்போதுள்ள நகரத்தின் பகுதிகள் சரிவர உபயோகப்படுத்தாத நிலையிலேயே உள்ளது. அபீத்ஸ் கார்னர் மற்றும் சார்மினார் என்ற இரு முக்கியத் தலங்களுக்கு இடைப்பட்ட பகுதிகள்தான் நகரத்திலேயே மிகவும் நெரிசலானது. 28 கல்வி மையங்கள் நகரத்தின் முக்கியப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இவைகளில் பயிலும் மாணவர்கள் பல்வேறு இடங்களில் இருந்துதான் வரவேண்டும். நகர நெரிசலுக்கும் இவர்களது போக்குவரத்தே சிறந்த உதாரணம். இக்கல்வி மையங் களில் அதிகமான நிலங்கள் இருந்தும் எந்த ஒரு திட்டவல்லுநரும் இந்த கல்வி மையங்களை வேறு இடத்திற்கு மாற்றியமைக்கும் திட்டத்துடன் முன்வரவில்லை. மிகவும் மதிப்பிட முடியாத விலையுயர்ந்த இந்நிலங்களை மாநகராட்சி கையகப்படுத்தி ஏற்கனவே நிரம்பி வழியும் நகரச் செயல்பாட்டிற்குச் சிறிது தளர்ச்சியைக் கொடுக்கலாம்.

மேலும், ஒரு வெட்கப்பட வேண்டிய விஷயம் நமது எல்லா பெருநகரங்களும் குடிசைகளாலும், நிலமற்றோரின் குடியேற்றத் தினாலும் சுற்றி வளைக்கப்பட்டு உள்ளது என்பதே. தேசிய நகர மயமாக்கும் குழுவின் அறிக்கையில் கூறியுள்ளபடி:

> முற்காலத்தில் நடைமுறை வழியில் நன்கமைப்பட்ட நகரங் கள் சொல்லப்போனால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் பம்பாய், நகரக் குடியிருப்பு முறை காதடைக்கும் சப்தம், மாசு, அதிகநெரிசல் மற்றும் அருவறுப்பான கழிவுப் பொருட் களைக் கொண்ட இயற்கைக்கு மாறுபட்ட போக்கினை யடைந்தது. நகரத்துப் பெரும்குழப்பத்துக்குப் பின்னால் தவறான நில நிர்வாகம் நகர மயமாக்குவதற்கு முக்கிய வழி முறையாய் அமைந்தது.[2]

2001-ஆம் ஆண்டின் தில்லியின் செயலாக்கத் திட்டத்தின் யோசனை யின்படி, குறுக்கீடில்லாமல் எழுபது சதவீதத்திற்கும் மேலான தில்லியின் மக்கள் தொகை சப்பணத் தரைக்குடியிருப்பு மற்றும் குடிசையில்தான் வசிக்கும் என்கிறது. 1981-1991 மதிப்பீட்டின் படி குடிசைவாழ் மக்களின் பங்கு 45 சதவீதம். இதுவே மிகவும் கவனத்துடனும், கட்டுப்பாடுடனும் திட்டமிட்டுச் செயலாற்றும்

படிப்பகம்

www.padippakam.com



இந்தியப் பெருநகரின் மோசமானநிலைமையென்றால், நமது நகரக் குடியிருப்புக்களின் வருங்கால நிலை என்னவாக இருக்கும் என்பதை எந்த ஒரு தனி மனிதனும் கற்பனை செய்து கொள்ளலாம். இந்தியா முழுவதிலும் உள்ள நகர ஆட்சிமுறைகள் சமூகத்தின் செல்வம் மிக்க வர்க்கத்தினருக்கே எல்லாவற்றையும் செய்து ஏழை மக்களை அவர்களாக வழிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டிய நிலையில் தள்ளிவிட்டன. மீண்டும் இது குறித்து தேசி நகர மயமாக்கும் குழு கூறியுள்ளதாவது:

> ஏழைகள், வளரும் சந்தை விலைப்படி நல்ல உறைவிடத்திற்குப் பணம் கொடுத்து வாங்கும் வசதியில்லாதவர்களும் — நிலத்தினைக் தாங்கள் வேலை செய்யும் இடத்திற்கு அருகாமையிலேயே அதிக விலைக்கு வாங்க முடியாதவர்களும் ஆவர். அதுவும் அன்றி இவர்கள் தங்களையோ அல்லது தங்களது உடைமைகளையோ வெகுதூரத்திற்குக் கொண்டு செல்லப் போக்குவரத்துச் செலவு செய்ய முடியாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆதலால், தாங்கள் வேலை செய்யும் இடத்தில் ஒதுக்கி விடப்பட்ட ஓரப்பகுதிகளில் ஏழையல்லாதவர்களால் உபயோகமற்றது என்று கருதப்பட்ட இடத்தில் குடியமர்கின்றனர்... இம்மாதிரியான குடிபெயர்ப்பு திட்டமிடப்படாதது, வசதிகள் குறைவு. இதன் விளைவாக பொதுச் சுகாதாரம் மற்றும் தனிநபர் சுத்தம் தடைபடுகிறது. ஆகவே குடிசைகளின் வளர்ச்சியானது, ஏழைகளின் நிலம் வாங்க முடியாத தன்மையையும் சந்தையில் கொடுக்கல் வாங்கலில் — உறைவிடம் கிடைக்காததையும் பொறுத்ததே. அரசு, நகர நிலங்களின் விலையினைச் சீர்ப்படுத்த முடியாத நிலையில் இவர்கள் தங்களைத் தாங்களே மதிப்பற்றவர்களாக்கிக் கொள்கின்றனர்.[3]

திட்டமிடப்படாத குடிசை சுற்றுப்புறத்திற்குத் தீங்கு விளைவிப்பதற்கு ஏற்றதாகவும், எதற்கும் உதவாத நிலத்தில் மக்களைக் கூட்டுவதற்கு உந்துவதாகவும் உள்ளது. வெகுவாக இம்மாதிரியான கட்டமைப்பு இயற்கையான நீர்வடிகாலுக்குத் தடையாகவும், வெள்ளப் பெருக்கிற்கு ஏதுவாகவும் உள்ளது. பராமரிக்க முடியாததன் விளைவுதான் அசுத்தத்தை அபிவிருத்தி செய்து காலரா, தொற்று நோய் முதலானவற்றை — நான்கு வருடங்களுக்கு முன்பாக தில்லியை உலுக்கியதைப் போன்று — பரப்புகிறது. இதைவிட அதிகமான சுற்றுப்புற அல்லது மனிதத் தரக் குறைவான சூழ்நிலை வேறு எதுவும் இருக்க முடியாது. இந்நிலையில் மிருகங்கள் கூட வசிக்கத் தயங்கும். ஆகவே, நகரச் சுற்றுப்புறத் திட்டத்தில் முக்கியமான ஒன்று நகர வளர்ச்சியை எதிர்பார்ப்பதும், சந்தையில் போட்டியிட

www.padippakam.com



முடியாத ஏழை மக்களுக்கு நில வசதி செய்து கொடுப்பதும் ஆகும். இதையே வேறு விதமாகச் சொன்னால், இந்த நகரத் திட்டமிடும் பயிற்சியின் முக்கிய அம்சமாக ஏழைகளுக்கு நிலமளிப்பதும், அதுவும் அவர்கள் பணிசெய்யும் இடத்திற்கு அருகாமையில் அளிப்பதுமாக இருக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு குறைவாகப் போக்குவரத்துக்குச் செலவு செய்கிறார்களோ, அவர்கள் எவ்வளவு குறைவான நேரத்தைப் பேருந்தில் செலவு செய்கிறார்களோ — அந்த அளவு பணமும், நேரமும் அவர்களது வாழ்க்கைக்குக் கையிருப்பாக இருக்கும். குடிமக்களின் வளமான வாழ்வே ஆரோக்கியமான சுற்றப்புறத்தை அமைக்குமேயன்றி, அகலமான சாலைகளோ அல்லது சில பூங்காக்களைக் கட்டுதலோ அல்ல.

எவ்வளவு முன்னேற்பாடாக நில உபயோகத்தைத் திட்டமிட்டாலும் நில மதிப்பு பற்றாக மாறிவிட்டால் மொத்தப் பயிற்சியும் வீணாகிவிடும். இந்தியா முழுவதுமாகப் பார்த்தால் நில மதிப்பானது அதிகரித்து வரும் மக்கள் தொகைக்குச் சுமையாக இருப்பதில்லை. மக்கள் தொகை இரட்டிப்பாகவோ அல்லது மூன்று மடங்காகவோ ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அதிகரித்து இருக்கலாம். நிலத்தின் விலை 50 அல்லது100 மடங்காக உயர்ந்தும் இருக்கலாம். உதாரணமாக போபாலிலுள்ளபுதிதாக முன்னேற்ற மடைந்த பகுதியான அரீரா குடியிருப்பில் வீட்டுமனை 40 ஆண்டுகளுக்கு முன்பு ஏறத்தாழ சதுர அடிக்கு ரூபாய் 40 ஆக இருந்தது. அதுவே இன்று சதுர அடிக்கு ரூபாய் 2000 மாக உள்ளது. இது குடியேற்றப் பகுதி. அதனைச் சுற்றிலும் சந்தைகள். சில வீடுகளைக் கடைகளாகவும் அலுவலங்களாகவும் மாற்றியதைத் தவிர அங்கு கட்டிடங்களின் அடர்த்தி, உயரம் மற்றும் எப்.ஏ.ஆர்.க்கும் கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன்பாக இங்கு நிலம் வாங்கியவர்கள் இன்று பல இலட்சங்களுக்கு அதிபதிகள். இம்மாதிரி தரமற்ற நிலமதிப்பின் அதிகரிப்பால் சுற்றுப்புறம் நேரடியாக பாதிப்படைகிறது. நிலத்தைத் தேர்ந்தாராய்தல் ஒரு நோயாகவும், நிலப்பரிமாறல்கள் அதிகரிப்பதுமே இதற்குக் காரணங்கள். இச்சூழ்நிலையில் நிலத்தைப் பசுமையாகத் தக்க வைத்துக் கொள்வது என்பது இயலாத ஒன்றாகும். தேர்ந்தாராய்வு முறை விவசாய நிலத்தை வெளிக்கொணர்வதும், பிறகு அங்கு கட்டிட அமைப்புக்களை ஏற்படுத்துவதும் அல்லது அதனை தரிசலாகவோ எதற்கும் பயனற்று போகச் செய்வதோ—இனியும் அதன் விலை உயரும் என்பதை மனதில் கொண்டோ செய்வதாகும்.

உண்மையில் நிலப்பற்றாக்குறைதான் ஊக ஆய்வு நிகழ்வதற்குக் காரணம் என்ற கூற்று தவறானது. தெரிந்தோ, தெரியாமலோ நமது திட்டமிடும் உத்திகள் செயற்கையான நிலப் பற்றாக்குறையையும்

www.padippakam.com



அல்லது இனி வருங்காலங்களில் நிலங்களே இருக்காது என்ற நினைப்பையும் உருவாக்கிவிடுகிறது. சரியான நில உபயோகத் திட்டங்கள் மற்றும் கவனமான நில வழங்குதலின் இடையூறுகளை நீக்கினால் நிலங்களின் விலை கட்டுக்குள் இருக்கும். இதற்கு வெற்றி கரமான ஒரு உதாரணம் இந்தோர் வீட்டு வசதி வாரியம். 1970-இல் இந்தோர் வீட்டுவசதி வாரியம் 14,000 கட்டிய வீடுகளையும் — 16,000 வீட்டு மனைகளையும் வழங்கியது. இது நிலத் தேர்ந்தாராய் தலைச் சரிவுக்குக் கொண்டு வந்தது. ஆகவே விவசாய நிலத்தின் விளைவும், விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களின் விலையும் ஏறத்தாழ கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, நகர வளர்ச்சியின் காரணமாகச் சேதமுற்ற சுற்றுப்புற விளைவினைக் குறைக்க வேண்டுமானால் நில உபயோகக் கொள்கையின் நோக்கம் விவசாய நிலத்தினை ஆதாயம் மிக்க ஒன்றாக நகரச் சூழ்நிலையிலும் தக்கவைத்துக் கொள்வதேயாகும். இந்நிலை நகரங்களிலும் பெரு நகரங்களிலும் பரிகாரத்திற்கு ஒவ்வாததாக இருப்பினும் இன்னமும் நமது நடுத்தர நகரங்களில் செயல்வடிவமாகக்கூடிய ஒன்றாகத் தான் உள்ளது.

## நகர அளவு மற்றும் குடியிருப்புப் படிநிலை அமைப்பு

நமது திட்ட வல்லுநர்களைச் சுற்றியிருக்கும் தலையாய பிரச்சினை நகரங்களின் சுற்றளவுதான். முன் கூறியது போல, கஜுராஹோ மற்றும் உஜ்ஜயின் போன்ற உதாரணங்களின்படி, பெரிய குடியிருப்புக்கள் அதிகமான நிலத்தினைத் தின்றுவிடுவதும், விவசாயத்திற்கும் — இயற்கைச் சூழலுக்கும் போதிய இடமும், வசதியும் குறைந்தும் காணப்படும். பெருநகரங்களானால், அங்கு பராமரிப்பும் விரிவாக்கப்பணியும் அதிக அளவில் அமையப் பெறுதல் வேண்டும். எப்பொழுது ஒரு குடியிருப்பு அதிக வளர்ச்சி அடைகிறதோ அப்பொழுதே அது மண்டல மற்றும் தேசிய முக்கியத்துவம் பெற்று மற்ற எல்லா குடியிருப்புக்களையும் பின்னால், அதன் பின்னணியில் தள்ளிவிடுகிறது. அதுவே மற்ற குடியிருப்புகளின் முன்னேற்றத்திற்குத் தடையாகிவிடுகிறது. தாய்லாந்தில் பாங்காக் என்னும் நகரத்தின் மக்கள்தொகை ஏறத்தாழ நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 10 சதவீதமாகவும் நகர மக்கள்தொகையில் 62 சதவீதமாகவும் உள்ளது. அம்மாதிரியாக நகரம் மற்ற எந்த ஒரு இணைப்பு நகருடனும் தன்னை ஒப்புமைப்படுத்திக் கொள்ள இயலாததற்குக் காரணம் இதன் நில ஆக்கிரமிப்புச் சக்தி (வலிமை) மண்டலத்தைத் தாண்டியதும், நாட்டைப் பொறுத்ததும் ஆகும். இன்றும் இந்தியாவில் சிறிய கிராமங்களில் நகரத்தின் சாயல்படாமல் இருக்கக் காரணம், இங்குள்ள மக்களது உறைவிடம் பெரிதும் கிராம எல்லையைத் தாண்டாததுதான்.

www.padippakam.com



ஒரு பெருநகர மையம், எவ்வகையிலும் முன்னேற்றம் அடைவதிலும், மோசமான நகரமாக்கும் நோக்கிலும், சரியான பராமரிப்பின்றி தனது நகர எல்லைக்கு அருகாமையில் உள்ள மண்டலங்களுக்கு அழிவினை ஏற்படுத்துகிறது. பராங்ஸ், கம்பாங்ஸ், பாவேலாஸ் மற்றும் ஜீக்கி-ஜோபடி போன்ற ஏழ்மைக் குடியிருப் புகள் பெருநகரத்தின் துணை விளைவுதான். இதற்கு இணையான சிறிய நகரீயங்களை இந்தியாவில் எங்கும் காண முடியாது. ஒரு பெருநகரம் கூட்டமாக இருப்பதில் சில இலாபங்களிருந்தாலும் சமூகச் செலவுகள் பெருநகரப் பராமரிப்பில் காணாமல் போய் விடும். இதனால் தனிநபர், வாணிபத்தில் ஆதாயம் அடைந்திருந் தாலும், அது சமூகத்தினை மொத்தத்தில் ஆதாயமற்ற ஒன்றாக ஆகிவிடும்.இந்தியத் திட்டக்கலை வல்லுநர்கள் இதனால்தான் நகர அளவைத் திட்டமிடுவதில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் அதன் நோக்கங்களைக் கூறியிருந்தும், சிறிய மற்றும் வளர்ச்சி குறைந்துவரும் பெருநகரங்களில் திட்டமிட்ட ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான வடிவமைப்பினை உருவாக்குவதற்கு வெட்கப்பட்டார்கள்.

முற்காலத்தில் தொழிற்சாலைகளுக்கு இடமளிப்புக் கொள்கையினை ஒரு கருவியாக உபயோகித்து நகர அளவை இயன்றவரை கட்டுப்படுத்தி வந்தனர். பெரிய மற்றும் நடுத்தரத் தொழிற்கூடங்களுக்கு இட மளிப்பதை ஐந்து இலட்சத்திற்கும் மேலான மக்களைக் கொண்ட பிற்படுத்தப்பட்ட நகரங்களில் செயற்படுத்துவது குறித்து ஆராய வில்லை. நிலப்பரப்புக்கள் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டு தொழிற் கூடங்கள் அமைத்துக் கொள்ள இங்கு உரிமையளிக்கப்பட்டது. இந்தக் கொள்கைகள் முழுதுமாகச் சிந்தித்து வடிவமைக்கப் படாத காரணத்தினால், நடுத்தர மற்றும் பெரிய தொழில் மையங்கள் தங்களுக்குத் தேவையான இடங்களை பெருநகரங்களின் எல்லைப் பகுதிகளில் தேர்ந்தெடுத்தும், அவையே பெருநகரங்களின் விரி வாக்கப்பகுதிகளானதும் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களின் எல்லைப் பகுதியாகவும் இருக்குமாறு அமைத்துக் கொண்டன. ஒரே ஒரு தொழிற்சாலைதான் உண்மையில் பிற்படுத்தப்பட்ட மாவட் டத்தில் அமையப்பெறுகிறது. இரும்பு மற்றும் எஃகு, அலுமினியம் போன்ற கனிமப் பொருட்களின் தேவைகளை நாடியிருக்கும் தொழிற்சாலைகளே அவை. நிலப்பரப்புக் கொள்கைகள் தோல்வி யடையக் காரணமாயிருந்த மற்றொரு செயல் என்னவென்றால், இந்தத் தொழிற்கூடங்கள் இப்பகுதிகளுக்கென வழங்கப்பட்ட சலுகைகளைப் பெற்றுக் கொண்டு தங்களது தொழிலில் தேக்க நிலையை உருவாக்கி, இச்சலுகைகளைப் பெருநகரங்களில் உள்ள தொழில் வளர்ச்சிக்காக உபயோகப்படுத்தியதுமாகும்.

www.padippakam.com



நகர அளவைக் கட்டுப்படுத்த முடியாமற் போனதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

இதுவரை இருந்து வந்த திட்டமிடும் முறைகளைக் கைவிட வேண்டும் என்ற தேசிய நகரமயமாக்கும் குழுவின் பரிந்துரைக்கு இதுவும் ஒரு காரணியாக அமைகிறது. இக்குழு எல்லா நிலைகளிலும் உள்ள நகர குடியிருப்புக்களைக் கண்காணித்தும், 600-க்கும்மேலான குடியிருப்புகள் நகரச் சராசரி வளர்ச்சியினைக்காட்டிலும் மேலான வளர்ச்சியை முதல் பத்தாண்டிலேயே எட்டியுள்ளதைச் சுட்டியுள்ளது. இவற்றுள் நான்கு பெருநகரங்கள். மற்ற 13 நகரங்கள் ஐந்து இலட்சத்திற்கும் மேலான மக்கள்தொகையைக் கொண்டவை. இவற்றில் 329 குடியிருப்புகள் ஒரே நிலையான மக்கள்தொகை வளர்ச்சியினையும் பொருளாதார வளர்ச்சியினையும் காண்பித்துள்ளது. இதையே தேசிய நகரமயமாக்கும் குழு எடுத்துரைக்கிறது:

> இக்குழு 329 நகரங்களை அடையாளம் கண்டுள்ளது. இங்கு பிறப்பு—நோய் முதலிய சமுதாய நிலைப்புள்ளி விவர வளர்ச்சி இயக்குவிசை ஆய்வுகளைக் கொண்டதும், பொருளாதார இயக்கு விசையை அல்லது சரியான முதலீடு செய்ய முன்னேற்ற மின் அழுத்த அளவுகளைக் கொண்ட, மையங்களை அடையாளம் காட்டுகிறது. இவற்றில் 20 மாவட்டத் தலைநகரங்களில் மக்கள் தொகை மாவட்டத்தின் மக்கள் தொகையில் 30 சதவீதத்திற்கும் மேலாக உள்ளது. குறிக்கப் பெற்ற 109 கிராமங்களிலுள்ள 90 சதவீதத்தினர் கிராம மக்களேயாவர். இவர்களது மக்கள் தொகை சுமார் 5 இலட்சமாகும். நகர மக்கள்தொகை போதுமான அளவிலுள்ள மாவட்டங்களில் குறிப்பிட்ட சிறு நகர்களின் பொருளாதார முன்னேற்றமும் பெருநகரமல்லாத நகர மையங்களில் புதிய வேலை வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. நாம் பண்டைய பிரிட்டீஷாரது கொள்கையான நகரங்களில் மட்டும் செல்வங்களைக் குவித்தல் என்னும் கொள்கையிலிருந்து நீங்கி கிராமப்புறங்களிலும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த முயலவேண்டும்.

அதுபோன்று, செய்தித் தொடர்பு முறை, போக்குவரத்து வசதிகள், குடிநீர் மற்றும் வடிகால் வசதிகள், வீட்டு வசதி மற்றும் சமூகத் தேவைகள் போன்றவைகளையும் இந்த 109 பட்டணத்திலும் ஏற்படுத்த முயல்வோமேயானால் வேலை வாய்ப்புத் திட்டங்கள் உருவாகின்றன. முதலீடு செய்வோரது கவனத்தை இது ஈர்க்கும், அதே நேரத்தில் இந்த முதலீட்டைப் பயிற்சியுடன் ஒருங்கிணைத்தால், நடுத்தர மற்றும் கீழ்நிலையிலுள்ள கங்கைச்

www.padippakam.com



சமவெளியின் கிராம மக்கள் நகர வேலைகளைச் செய்து பொருளாதார நிலையில் உயர்ந்த இடத்தைப் பெற இயலும்.

விவரமாகச் சொன்னால், நமது தற்போதைய அணுகுமுறை, கிராமமக்கள் பெருநகருக்கு இடமாற்றம் செய்வதைத் தடுத்தலும், அதற்குத் தேவையான பொருட்களை பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் முன்னேற்ற உத்திகளாக வழங்குதலும், அவை சிறுநகரங்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதாகவும் அமைய வேண்டும். ஆனால், நெடுங்கால நோக்குடைய வேலை வாய்ப்பினை அதிகப்படியான கிராம மக்கள் பெறுவதில்லை. இம் மக்கள்தொகையினை வேறு நகரம் அல்லது நகரமயமாக்கபட உள்ள குடியிருப்பிற்கும் இடம் பெயர அனுமதி வழங்குதல் வேண்டும். இந்த குறிப்பிட்ட நகர முன்னேற்றம் விவசாயம் தவிர்த்து வேறு வேலைகளையும் உண் டாக்குவதால் தயாரிப்பும் அதிகரித்து வேலை வாய்ப்பினையும் பெருக்குகிறது. இதுவே, தொழிற்சாலைகளை பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு இடம்பெயரச் செய்வதையும், தாற்காலிகமாகப் பொய்த்தோற்றங்களால் கிராம வேலை வாய்ப்பு என்னும் உத்திர வாத்தினை அளிப்பதையும் விடச் சிறந்தது.

மேற்கூறிய நகரங்களைக் கணக்கிலடக்கி, மாநில மற்றும் மத்திய அரசுக்குக் கீழ் இயங்கும் சிறுநகரங்களிலும் முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டும் என இக்குழு எண்ணுகிறது. இவை எண்ணிக்கை யில் 30 ஆக உள்ளது. இவற்றுள் தில்லி, பம்பாய், சண்டிகார், கல்கத்தா, சென்னை, பெங்களூர், ஹைதராபாத், போபால் போன்ற நகரங்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்ததாக உள்ளது. பிற்காலத் திய முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளாமல் இந்நகரங்கள் இன்றைய நிலையினைச் சமாளிக்க வேண்டிய முதலீட்டையும் மூலதனத்தை யும் பயன்படுத்தும் நகரங்களாகவே உள்ளன. பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவை, அரசின் சலுகைகளைத் தவிர அங்கு வழங்கப் படும் மூலதனங்களைக் கொண்டும் பொருளாதார நடவடிக்கை களைக் கொண்டும் லாபமடைய வாய்ப்பு உள்ளது. எனவே, அவ்விடங்கள் வளம்பெறக் கூடிய வளர்ச்சி மையங்களாக மாற வாய்ப்பு உள்ளது. மாநில மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சி யின் கீழுள்ள நகரங்கள், மற்றும் மேற்கூறப்பட்ட 129 பட்டணங்கள் உட்பட மீதமுள்ள 170 பட்டணங்கள் மற்றும் விவசாயப்பகுதி யிலுள்ள நகரங்களாகிய பஞ்சாப், அரியானா, மேற்கு உத்தரப் பிரதேசம் அல்லது முக்கியத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும் தொழிற்சாலைகளுக்கு அருகாமையில் உள்ளவை உட்பட, பழைய கொள்கைகளைக் கொண்டே பொருளாதார முன்னேற்றத்தை எட்டியுள்ளன. இவை சில புதிய மூலதனமுள்ள தொழிற்சாலை, நகரங்களைப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் முன்னேற்றத்தின் காரணமாக சேர்த்துக் கொள்கின்றன. அவை,

www.padippakam.com



பெருமளவில் பிற்படுத்தப்பட்ட பகுதியில் உள்ளவை, நகரங்களுக்கு இணையானவை. பெருநகரங்களில் அருகாமையில் இடம் பெற்றுள்ளவை. அவைகளில் பெரும்பாலானவற்றின் மூலதனம், முன்னேற்றம் — ஏற்றத்தாழ்வுகள் யாவும் நகரத்தின் முன்னேற்றத்திற்கு இணையற்றதாகவும் உள்ளது. இது தொழில் சார்ந்த நடவடிக்கைகளையும் வளர்ச்சியினையும் குன்றச் செய்து நகரங்களை முழுவதும் பயனுடையதாக்கிக் கொள்கிறது. அம்மாதிரியான நகரங்களுக்குக் கூட பராமரிப்புகள் தேவையான அம்சமாகிறது.[4]

இக்குழு மேலும் சில தகவல்களை அளிக்கிறது. நமது நாட்டில் பரந்த குடியிருப்பு வகைகள் இருக்கின்றன. பெரும்பான்மையானவை அவற்றில் வளர்ச்சிக்கான செயல்திறம் கொண்ட நகர மையங்களைக் கொண்டுள்ளது. இவைகளுக்கு அடிப்படையான செயல் திட்டம் தேவை. வருங்கால நகர வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு இன்றைய அரசு ஏன் திட்டங்களைத் தீட்டக் கூடாது என்பது ஆய்தற்குரியது. ஒரு பிற்படுத்தப்பட்ட பகுதியிலுள்ள நகரத்தினை வளர்ச்சியடையச் செய்தால் அதன் விளைவு அதைச் சுற்றியுள்ள மற்ற பகுதிகளுக்கும் ஏற்பட்டு, புதிய பொருளாதார வாய்ப்பின் மூலம் வளர்ச்சி நிலை புதிதாக வளர்ந்து வரும் சந்தைகளின் பராமரிப்பிற்கும் அடைய வாய்ப்புள்ளது. கிராம-நகர இடப்பெயர்ச்சி இதனால் உண்மையில் பெருநகரங்களுக்கல்லாமல் மண்டலங்களுக்குள்ளாகவே அமையும். மூலதனம் வரவேற்கப்பட்டு வியாபாரத்தின் வகைகள் தெளிவாகக்கப்பட்டுவிடுவதால், எண்ணிக்கைகூடி, பெருநகரங்களின் நகர்களின் இடையே உள்ள அழுத்தத்தினைத் தானாகவே குறைக்கும்.

சுற்றுப்புறச்சூழ்நிலையின் அடிப்படையில் நோக்கினால் அதிகமான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சி, ஒருசில பெருநகரங்களின் வளர்ச்சியைக் காட்டிலும் பயனுள்ளதாக இருக்கிறது. அதன்படி, நில உபயோகத்தினை முன்னதாகத் திட்டமிட்டு நில வேளாண்மையைப் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். நிலங்களின் விலை சிறிது அதிகமாக இருந்தாலும், அதன் தேவை சமமாக எல்லா நகர குடியிருப்புகளிலும் பிரித்திருக்கும் வகையினை நோக்கும்பொழுது, விலையும் கட்டுப்பாட்டிலிருக்கும். அதே நேரத்தில், சிறிய நகரங்களில் பராமரிப்பைப் பொறுத்தவகையில் பல தேவைகளும் அதன் வரம்பிற்குட்பட்டதாகவே உள்ளதால் எளிதான செயல்பாடு ஏற்படுகின்றது. பெருநகரப் போக்குவரத்து முறைகள் இங்கு தேவைப்படுவதில்லை. சிறிய நகரங்களின் போட்டி மனப்பான்மை காணப்படுவதில்லையாதலால் தரமான மூலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டுச் சுற்றுச்சூழலை சேதத்திலிருந்து காக்கிறது. அதனினும் முக்கியமாக, பெரும்பான்மையான நகர

www.padippakam.com



மையங்களில் வேலை வாய்ப்பினை உருவாக்குதலின் மூலம் வறுமையை நீக்கி வருமானத்தை நல்ல முறையில் பகிர்ந்தளிக்க இயலுகிறது. வறுமையும் — பசியும் சுற்றுப்புறத்தின் ஆபத்தான முடிவுகளாக இருப்பதால், வறுமையை அகற்ற உதவும் எந்தத் திட்டமும் தானாகவே சுற்றுப்புறத்தினைக் காக்கிறது.

## குறிப்புகள்

1. தேசிய நகரமயமாக்கும் குழுவின் அறிக்கை.ஆகஸ்ட் 1988, பாகம் 2, பகுதி 3, அத்தியாயம் 6.
2. மேலது.
3. மேலது பாகம் 2, பகுதி 3, அத்தியாயம் 5.
4. அதே மேலது பாகம் 2, பகுதி 1.

படிப்பகம்

www.padippakam.com

# 5

# நகரக்குடியிருப்பும் பராமரிப்பும்

## குடிநீர் வழங்கும் முறைகள்

எந்த மனிதக்குடியிருப்பும் குடிநீரின்றி வாழ முடியாது. நாம் இதற்கு முன்பு வந்த அத்தியாயங்களில் தண்ணீரின் நிலைமையையும், அது குறித்து வழக்கத்திலுள்ள திருப்தியளிக்காத நிலையையும் கண்டோம். தற்போதுள்ள தடுக்க முடியாத இக்கட்டான நிலை, சர்வதேச குடிநீர் வழங்குமுறைச் சட்டங்களையும் மீறிவிடும் சூழ்நிலையினை உண்டாக்கியுள்ளது. உதாரணமாக, ஒரு பெருநகரின் குடிநீர் வழங்கும் முறையானது நாளொன்றுக்கு 300 லிட்டர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தில்லி நகரம், தினத்திற்கு வழங்குதலை 323 லிட்டர் என ஆராய்ச்சி ரீதியாகவும், 225 லிட்டர் வீடொன்றுக்கு தினமும் என்றும், குடிசைப் பகுதியில் ஒரு நாளுக்கு 135 லிட்டர் என்றும் கணக்கிட்டுள்ளது. ஆனால், உண்மையானநிலை என்னவென்றால் அங்கு மிகுதியான பகுதிகளில் தண்ணீர் வழங்குதலே இல்லாமலும் இருக்கிறது. இதனால் தேசிய நகரமயமாக்கும் குழு புதிய முயற்சியினை மேற்கொண்டுள்ளது. அதையே அட்டவணை—13 விளக்குகிறது.

ஊகமாக 25 முதல் 30 சதவீதம் கூடுதலான வழங்குதல் வீடுகள் அல்லாத பயன்களுக்கும், தொழிற்சாலை உபயோகம், தீயணைப்புத் துறை முதலியவை உட்பட, குறைவான சமமுறை வழங்குதலின் படி, நபர் ஒருவருக்கு 90 முதல் 100 லிட்டர் தினமும் இந்தியாவில் தேவைப்படுகிறது. மேலும் 110 முதல் 125 லிட்டர் தினம் ஒன்றுக்கு

படிப்பகம்

www.padippakam.com



நச்சுவாயுவான மீத்தைல் ஐஸோ சயனைட் கசிந்ததில் 4,000 பேர் இறந்தனர். இரண்டு லட்சம்பேர் காயமுற்றனர். நகரத்திலிருந்து தொலைவிலிருக்கவேண்டிய இதுபோன்ற தொழிற்சாலைகள், மக்கள் நெருக்கம்மிக்க இடங்களிலேயே இன்றும் நிர்மாணிக்கப் படுகின்றன. போபால் போன்ற சம்பவங்கள் இதுபோன்ற தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்குதலைத் தடைசெய்யத் தூண்டுகின்றன. நகராட்சி அமைப்புக்களுக்கு இதற்கான அதிகாரம் அவசியம் வழங்கப்படுதல் வேண்டும்.

எந்த மனிதச்செயலும், குறிப்பாகத் தொழில் சம்பந்தப்பட்ட செயலும், பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்காதவரை அனுமதிக்கலாம். அரசியல் அமைப்பின் 19-ம் ஷரத்துப்படி தன் னுரிமை உரிமம், கிளைக்கூற்று 1(ஜ)-ன்படி எந்த ஒரு தொழிலை யும் நடத்த பாதுகாப்பு உரிமம் மற்றும் எந்த வேலையையும் அல் லது வர்த்தகத்தையும் தொடர அதிகாரம் அளிக்கிறது. எனினும், கிளைக்கூற்று 6−அம்மாநிலத்திற்குஇச்சட்டங்களைப் பொதுமக் களது தேவைக்கேற்ப மாற்றவோ அல்லது சீர்திருத்தி அமைக்கவோ அதிகாரம் வழங்குகிறது. அம்மாநிலம் தன் சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தேவையான வழிமுறைகளை அதன் ஷரத்து 48(ஏ) வழங்குகிறது. மேலும் ஷரத்து 51(ஏ) கிளைக்கூற்று(ஜி) சுற்றுப்புறத்தைப் பாதுகாத்தல் அந்த மாநிலத்தின் ஒவ்வொரு குடிமகனின் தலையாய கடமையாகும் என எடுத்துரைத்துள்ளது. ஆகவே, எல்லா நகர நடைமுறையாட்சியிலும், முன்னேற்பாட்டுத் திட்டத்திலும் அங்கு நிறுவப்படும் தொழிற்சாலைகள் சுற்றுப்புறத்தை மாசுபடுத்தாதவாறு இருத்தலை உறுதி கூறவேண்டும். சமூகத்திற் குக் கேடுகளை ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தடுத்தோ அல்லது இடம்பெயரச் செய்தோ வழிவகை செய்யவேண்டும். மேலும் தனது திட்டத்தில், அத் தொழிற்சாலைகளுக்கு அவைவெளிப்படுத்தும் மாசு மற்றும் கழிவுகளைப் பதப்படுத்தும் எல்லாவகை நடவடிக்கைகளையும் கையாளுமாறு ஆணை பிறப்பிக்கவேண்டும். மண், நீர், காற்று போன்றவை மாசுபடியாதவாறு பார்த்துக்கொள்ளுதல் அவசிய மாகிறது. தற்போது இந்தப் பொறுப்பு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையில் எல்லா மாநிலங்களிலும் மற்றும் மத்திய அரசு நிலையிலும் இருக்கிறது. ஆனால் நகர நடைமுறை ஆட்சியில் இது முழுதுமாக விடுபட்ட ஒன்றாக உள்ளது. குடிமக்களுக் குத் தொழிற்சாலை நடவடிக்கைகளுக்கு எதிராகத் தங்களைப் பாது காத்துக்கொள்ளும் உரிமம் நகரநடைமுறையில் மீறப்பட்டுள்ளது.

சுற்றுப்புறச்சூழலுக்கு ஒத்தியலக்கூடிய, விவரமாக எல்லா வகையான வழிமுறைகளையும் அளிக்கக்கூடிய தொழிற்சாலைகளைத்

www.padippakam.com



தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம் என்பதனை எடுத்துக்கூறும் திட்டம் செயலாக்கப்படவேண்டும். கட்டளைச் சட்டங்கள், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வரையறை செய்துள்ள தரத்திற்கும் மேலான தொழிற்சாலை மூலம் திடக் கழிவுப் பொருட்களை குவிப்பதற்கும், திரவக் கழிவினை வெளிப்படுத்தும் மற்றும் பதப் படுத்தும் முறையைக் கையாளுதலையும், இவற்றை நீர்நிலைகள் மற்றும் இயற்கையான சாக்கடையில் வெளியேற்றுதலையும், வாயு மற்றும் துகள்களை பதப்படுத்துவதும் மற்றும் அதுசார்ந்த புறக்கசிவினைக் கட்டுப்படுத்தும் விதத்திலும் அமைய வேண்டும். இதற்கும் மேலாக, நகரத் திட்டத்தில் சமூகத் தொழிற்சாலைப் பொறுப்புக்களையும், அதுசார்ந்த பணியாளர்களுக்கு வீட்டு வசதி ஏற்பாடுகள் மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த முன்னேற் றங்களைக் கோட்பாடாகக்கொள்வதும், அடிப்படை மக்கட் தொகைப் பெருக்கத்திற்கு வேலைவாய்ப்பளிப்பதையும் கருத்தில் கொள்ளுதல் அவசியமாகிறது. இது சார்பான சட்டதிட்டங்கள் தேசிய ரீதியில் தயாரித்தால் அதுவே ஒரு சீரான முறையினை தொழிற்சாலைகளிலும்மற்றும் உள்ளாட்சி மையங்களிலும் ஏற் படுத்தும். இதற்காகும் அதிகபட்சமான செலவீனங்கள், தொழிற் சாலைச் செலவினங்களின் ஒரு பகுதியாகவும்–இடஒதுக்கீட்டில் தொழில்வினைஞர் ஈட்டும் இலாபத்தினின்று சரிகட்டவும் உதவும்.

படிப்பகம்

# 6

# முடிவுகள்

*நகர அழகுணர்ச்சி*

*சில நேரங்களில் மிக சுத்தமான, அதிசுகாதாரமான மற்றும் மாசற்ற நகரம் கூட தனது குடிமக்களுக்கு ஜீவனில்லாத உணர்ச்சியற்ற தன்மையை விளைவிக்கும் சுற்றுப்புறச்சூழலை வழங்கக்கூடும். அகலச் சாலைகளும், போதுமான சுகாதார ஏற்பாடுகளும் நியாய மான வழங்கும் முறைகளும், குடிநீர் மற்றும் கலையுணர்வு மிளிரும் வகையில் கட்டங்கள் வடிவமைக்கப் பெற்றும் இருந்தாலும் உயிர்நாடி இருப்பதில்லை. புவனேஷ்வர், ஒரிசா மாநிலத்தின் தலைநகர், இவ்விதம் கட்டப்பட்ட நகரமாகும். திட்டமிட்டுக் கட்டப்பட்ட தலைநகருக்கு வெளிப்புறத்தில், பிந்துசாகர் என்னும் இடத்திற்கருகாமையில், ஒரு கூட்டமாகப் பல ஆயலங்கள் கலிங்கக் கட்டிடக்கலைக்கு ஆதாரமாக, லிங்கராஜ் ஆலயம் உள்பட, அமைக்கப்பட்டுள்ளன. இங்கு பிராமணக் கட்டிடக் கலைக்கு உதாரணமாக விளங்கும் மற்போர் சிற்பங்கள் (Vaital Duel) காணப் படுகின்றன. இவை புவனேஷ்வரின் சிறப்பம்சங்கள். ஒரிசாவின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பவை. ஆனால் ஒரிசாவின் திட்ட வல்லுநர்கள் இந்த ஆலயத்தை முழுதுமாக உதாசீனம் செய்து விட்டனர். ஒரு நகரத்திற்கு உயிருணர்வு அளிக்கக் கூடிய ஜீவத் தன்மை அமைய வேண்டுமாயின் அது பெனரஸில் உள்ளது போன்ற நீர்த்துறைகளாகவோ, தில்லியிலுள்ளது போன்று செங்கோட்டை யாகவோ, பாரிஸில் உள்ள நாத்ரு தாம் எனப்படும் தலைமைக்*

www.padippakam.com



கிறிஸ்தவக் கோவில் போன்றோ அல்லது நியூயார்க்கின் ராக் பெல்லர் மையம் போன்றோ காலத்தால் அழிக்க முடியாத பொக்கிஷங்கள் தேவை. இம்மாதிரியான குவிப்புத்தன்மை (foci) நகருக்கு அழுகும் மெருகும் ஊட்டி அதன் மக்களுக்கு அவர்கள் வாழும் இடத்தை அடையாளம் காட்டக் கூடியதாகவும் இருக்கிறது. நவீன கால நகரத் திட்டமிடுதல் சீரானதாகவும் பயனீட்டுக் கொள்கையுடையதாகவும் இருப்பதால், குடிமக்கள் பெருமை கொள்ளக் கூடிய தன்மையைக் காணத் தவறிவிட்டது.

இயற்கை எழில்கள், திறந்த வெளிகள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் தலங்கள், பாதுகாப்பான நீர்நிலைகள், மரமும் அதன் பரந்து விரிந்த தன்மையும் — இவையனைத்தும் ஒரு நகரச் சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் குடிமக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் முக்கியப் பங்கேற்கின்றன. யமுனா நதிக்கரை ஓரத்தில் கட்டிடங்கள் கட்டப்படுவதால், தில்லியில் வெள்ளப் பெருக்கு உருவானதுடன் இது இயற்கையான நிலக் காட்சியும் அழிந்து விட்டது. இது பாதுகாப்பான சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு விளைவித்துள்ளது. இதுபோன்ற தவறுதான் நமது எல்லா நகரங் களிலும் நிகழ்கிறது. உதாரணமாக, ஹைதராபாத், தன்னகத்தே உலகிலேயே வேறெங்கும் இல்லாத நம்ப முடியாத பல பாறை அடுக்கமைவுகளைக் கொண்டதாக உள்ளது. முஸ்க் மகல், ஜீபிளி ஹில்ஸ் மற்றும் பஞ்ஜாரா ஹில்ஸ் போன்ற பகுதிகளில் ஏற்பட் டுள்ள நாகரீக வளர்ச்சிகள் இப்பாறை அடுக்கமைவுகளின் அழ கினைக் கெடுத்துவிட்டது மட்டுமன்றி ஹைதராபாத்தின் சுற்றுச் சூழலுக்கே கேடு விளைவித்துள்ளது. ஆகவேதான், நகரத் திட்ட மிடுதலின் முக்கிய நோக்கமாகச் சுற்றுப்புறச் சூழலின் அழ குணர்வு மற்றும் கற்பனை வளமிக்க பகுதிகளின் பாதுகாப்பு போன்றவை அடையாளம் காட்டப்பட வேண்டியதாக உள்ளது.

நகர வாழ்க்கை, குறிப்பாகப் பொருளாதார உய்வுக்குப் போட்டியிடும் மக்களைக் கொண்ட ஏழ்மை நாடுகளில் இனிமை யானதாக இருப்பதில்லை. ஆனால் அங்கெல்லாம் விரும்பத்தக்கது என்னவென்றால், மக்கள் சமாதானமாகத் திரிவதற்கும், பசுமை யான நிலங்களில் அமர்ந்து இயற்கையினை ரசிப்பதற்கும், குடும் பங்கள் ஒன்றாகச் சேர்ந்து இனிதே கழிப்பதற்கும் மற்றும் கலைகள் வளர்ச்சி அடைவதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக அன்றாட வாழ்க்கையின் கவலைகளை மக்கள் தற்காலிகமாக மறப்பதற்கும் ஏற்றதாயிருப்பதே. உதாரணமாக இந்தியா கேட்டை (India Gate) அடுத்துள்ள புல்வெளிகள் தில்லியின் சுகாதாரத்தைக் கட்டிக்காக்கப் பேருதவியாயுள்ளது. இம்மாதிரியான சாதாரண மகிழ்ச்சியூட்டும்

படிப்பகம்

www.padippakam.com



சிறிய பராமரிப்புக்களை நகர நிர்வாகம் செய்து கொடுத்தால்தான் நமது நகரங்கள் — நகரங்களாகக் காட்சியளிக்கும்.

நகரத் திட்டமிடுதல் தத்துவ ரீதியாக இயற்கையான நாட்டுப் புறத்தை நகரக் குடியிருப்பின் விஞ்ஞான முன்னேற்றத்தால் கலையழகானதாக மாற்ற முற்படுகிறது. தொழில் நுட்பக் கோட்பாட்டுப் பயிற்சி சாலைகளையும், சாக்கடைகளையும் மற்றும் வடிக்கால்களையும் மற்றும் பெரிய கட்டிடங்களையும் உருவாக்கமட்டுமானதல்ல. திட்டமிடுதல் சரிவர இல்லாவிட்டாலும் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பவைகளே இவை.

ஆனால், உணர்ச்சிமிக்க திட்டமிடுதல் என்பது சுற்றுப்புறத்திற்கு இயற்கைக்கு ஒத்த அழகினை அளிக்கிறது. இதனை எவரும் போபாலின் உதாரணத்தைக் கொண்டே உணரலாம். இங்குள்ள குன்றுகளும், ஏரிகளும் 1956—ஆம் ஆண்டின் மக்கள்தொகையான 85,000 என்ற எண்ணிக்கையிலிருந்து 1991-இல் 1.2 மில்லியன்களாக வளர்ந்துள்ள இந்நகருக்கு வருகை புரிவோருக்கு நல்ல அபிப்பிராயத்தைக் கொடுக்கின்றன. இங்குள்ள ஏரிகள் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. குன்றுகளிலும்-திறந்த வெளிகளிலும் மரங்கள் வளர்க்கப்பட்டுச் சுற்றுச்சூழலுக்கு உத்வேகம் அளிக்கப்பட்டுள்ளது. தில்லி போன்றல்லாது போபாலில் அந்தப் பிரதேசத்திற்கே உரித்தான செடி-கொடிகள் வளர்க்கப்படுகின்றன. போபாலின் பெரும்பாலான பகுதிகள் காடுகளாக உள்ளது. இந்நகர மக்கள்தொகைக் கணக்கினையே இது மறக்கடிக்கிறது.

வெட்டவெளியாகக் காட்சியளிக்கும் குன்றுகளைப் பசுமைப் படுத்துவதன் மூலம் ஒரு நகரம் இயற்கையையும் மிஞ்ச முடியும் என்பதற்கு மேற்குறிப்பிடப்பட்டவை சில உதாரணங்கள். சுருங்கச் சொன்னால் திட்டமிடுதல் என்பது இதுதான். மற்றவை அனைத்தும் வெறும் எழுத்துப்படிவங்களே.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வும் நகரத்திட்டமும் மனிதனையும் சுற்றுப்புறச்சூழலையும் வளர்ச்சிப் பணிகளுடன் தொடர்புபடுத்தி வாசகனை உய்த்துணர வைக்கிறது. நாம் சமுதாய வளர்ச்சி விகிதத்தைத் தராதரப்படுத்தப் பயன்படுத்தும் அளவுகோல்களைக் குறித்தும் விவாதிக்கிறது. இப்பிரசுரம், இந்தியாவின் நகரமயமாக்கும் திட்டங்களை உலக அளவில் நோக்கி ஆய்கிறது. நகர மக்கள்தொகையின் தொடர்ந்த வளர்ச்சி மற்றும் விளைநிலங்களை அழித்து ஏற்படும் நகர விரிவாக்கம் போன்றவை சுற்றுச்சூழலை பாதிப்படையச் செய்வதுடன் மனித வாழ்வின் தரத்தையே குலைக்கின்றன. தனது உள்ளார்ந்த கருத்து வெளிப்பாட்டின் மூலம் இந்தியாவில் தற்போது கடைப்பிடிக்கப்படும் நகரமயமாக்கும் திட்டங்களுக்கான மாற்றுவழிகளை இந்நூலாசிரியர் சுட்டியுள்ளார். இம்மாற்று வழிமுறைகள் செயல்பாட்டிற்கு உகந்ததாகவும், சுற்றுச்சூழலுக்கு இணக்கமானதாகவும், அழகுணர்வு பொருந்தும் விதமாகவும் அமையும் என்பது ஆசிரியரின் வாதம்.

இன்று நம்முன்/2

ஓரியன்ட் லாங்மன்

ENVIORNMENTAL CONSCIOUSNESS &
URBAN PLANNING (TAMIL)

ISBN 0 86311 471 7
Rs. 30.00

படிப்பகம்